
**HELLO MOBILE WORLD**
122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050



அறைவு 03 இயம் 23 December 27.12.2014 - 02.01.2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00



**English Classes**
School Subject
Grade 01 to A/L
புதிய வகுப்புக்கள் 2015 ஜனவரி ஆரம்பம்
Conducted by Experience Teachers from British Council
35/4 DockYard Road
Trincomalee
0779018047


# முகாம்களில் நாற்றம்!!!



இடைத்தங்கல் முகாம்களில் மனிதக் கழிவுகளின் நாற்றம் பெருக்கெடுத்துள்ளது என அங்கிருக்கும் எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

கடும் வெள்ள அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ள இடைத்தங்கல் முகாம்களான பட்டித்திடல், மணற்சேனை, கிளிவெட்டி ஆகிய முகாம்களில் மனித கழிவுகள் அகற்றும் இடங்கள் யாவும் நீர் நிரம்பி வெளிப்பாய்வதால் முகாம்களில் வாழமுடியாத அளவிற்குத் தூநாற்றம் வீசுகின்றது.

பெரும் சுகாதாரச் சீர்கேட்டை உருவாக்கியுள்ள இந் நிலையில் 17





## "கைதாணை"

முன்னாள் புத்தசாசனப் பிரதி அமைச்சரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.டி.ஏ.எஸ். குணவர்த்தனவின் பெயரில் பிடியாணையொன்றை திருகோணமலை மாவட்ட மஜிட்ரேட் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

கடந்த 24ம் திகதி பதில் மஜிஸ்ட்ரேட் நீதிபதியாகக் கடமையாற்றி திருச்செந்திநாதன் அவர்கள் இந்தப் பிடியாணையை வழங்கியதாகத் தெரிகின்றது.

குமரக்கடவை (கோமரங்கடவல) பிரதேசசபையின் அங்கத்தவர் ஒருவரைத் தாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள குணவர்த்தன நீதிமன்றுக்குச் சமூகமளிக்காததாலேயே இப்பிடியாணை வழங்கப்பட்டள்ளது.

குமரக்கடவை பிரதேச சபையின் 17

## "வெள்ளம் வழிந்த பின்னும் இடருரும் மக்களின் வாழ்வு"



### கிழக்கின் எதிர்கட்சித் தலைவர் எச்சரிக்கை

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் வீடு திரும்பும் போது எதிர்கொள்ளவிருக்கும் பிரச்சினை- களுக்கான தீர்வுகளை முன் கூட்டியே கவனத்திற்கெடுத்து அதற்குரிய ஏற்பாடுகளை அரசு மற்றும் தன்னார்வ நிறுவனங்களை மேற்கொள்ளுமாறு கிழக்கு மாகாண சபையின் எதிர் கட்சி தலைவர் சி. தண்டாயுதபாணி வேண்டுகோள் விடுக்கின்றார்.

தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தில் பெய்து வரும் மழை காரணமாக தமது வாழ்விடங்களை 17

## பேராயரின் நடுநிலைமை கேள்விக்குறி?



நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் பேராயர் மல்கம் ரஞ்ஜித் அவர்களின் நடுநிலைமையானது கேள்விக் குறியாகியுள்ளதாக கொழும்பு டெலிகிராப் இணைத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

பேராயர் மல்கம் ரஞ்சித்தின் மருமகள் ருவாணிகுரேயிற்கு தூதரக சேவைகளில் வழங்கப்பட்டுள்ள நியமனமொன்றினாலேயே இக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

ருவாணி குரே தூதரகச்சேவைப் பரீட்சைகளில் சித்தியடையாதுள்ள நிலையில், தூதரகச் சேவை ஆட்சேர்ப்பு முறைகள் ஊடாக நியமிக்கப்படாமல் பிரான்ஸ் நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகத்தில 17

## பிரியந்த எதிரணிக்கு பாய்ந்தார்



தற்போதைய ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டினால் இளைஞர் கிளர்ச்சி ஒன்று ஏற்படுவதனை தவிர்க்க முடியாது என கிழக்கு மாகாண சபையின் குழத் தலைவர்களுள் ஒருவரான பிரியந்த பத்திரன தெரிவித்துள்ளார்.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிப்பதாக 17


**AFTER O/L....**
**E4U**
English for You
**VEAL BUSINESS COLLEGE**
4 MONTHS COURSE
No.159A, Sea View Road, Trincomalee - 026 222 76 22 / 0777 555 738



**Sugirtha Stationers**

காகிதாதிகள் மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள்
அரச அங்கீகாரம் பெற்ற வினியோகத்தர்கள்
378/380 Court Road, Trincomalee
026 2225699 - 0775151336


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# அரசியல் சாணக்கியம் கேள்விக்குறியாகியுள்ளதா?

**2009** என்பது ஈழத் தமிழரின் நினைவுகூறப்படத்தக்க வருடங்களில் முக்கியமானதொன்றாக மாறியுள்ளது. எவ்வாறு 1983ம் ஆண்டின் இனக்கலவரங்கள் தமிழர்களின் வாழ்வியலின் ஓர் அங்கமாக மாறிவிட்டதோ அவ்வாறே 2009ம் ஆண்டும் உருவாகியுள்ளது.

ஆனால் தமிழர்களின் ஆயுதப் போரிடும் வலுவானது சர்வதேச உதவிகளுடன் அழிக்கப்பட்ட 2009ன் பின்னர் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு தமிழர்களை அரசியல்களத்திலும் முற்றுமுழுதாகப் புறக்கணிக்க முடியும் என்றவோர் தோற்றப்பாட்டை 2009ன் பிற்காலப்-பகுதியானது உருவாக்கிவிட்டுள்ளது.

இன்றைய நிலைவரங்களின் படி சனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 13 நாட்கள் உள்ள நிலையில் சனாதிபதித் தோதலில் வெற்றியீட்டக் கூடிய இரண்டு வேட்பாளப் பெருமக்களும் தமிழரின் ஆதரவை வெளிப்படையாகக் கொருவதற்குப் பின்நிற்பதாகவே தெரிகின்றது. இப் பின்நிற்பானது தமிழர்களைப் புறந்தள்ளிவிடும் பண்பை வெளிப்படுத்துவதுடன் எண்ணிக்கையில் அதிகமாயுள்ள சிங்கள மக்களின் ஆதரவையும். சிறுபான்மை அரசியலுக்குள் முடங்கியுள்ள முஸ்லிம் மக்களின் ஆதரவையும் மட்டும் பெற்றுக் கொண்டு சனாதிபதியாகிவிட்டால் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டியதில்லை என்பதை முக்கிய வேட்பாளர்கள் இருவரும் மனதிருத்தியிருப்பதாகவும் எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வாறானதொரு பயங்கரமான அரசியல் சூழலுக்குள் ஈழத் தமிழர்களைச் சிக்கவைத்துள்ளது சிங்களப் பேரினவாதத்தின் முயற்சி மட்டுமா? என்றோர் கேள்வி எழுமாயின் அக்கேள்விக்கான பதில் இல்லையென்பதே உண்மை.

தமிழர்களின் அரசியல் சாணக்கியத்தின் சறுக்கல் நிலையும் இவ்வாறானதொரு நிலைமையினை உருவாக்கக் காரணமாகியுள்ளது என்பதே உண்மை.

அதனை உறுதிசெய்யத்தக்க வகையில் தற்போதுவரை தமிழர்கள் யாரை ஆதரிக்க வேண்டும் என்பதையிட்டு உறுதியான முடிவினை எடுப்பதற்கான வாய்ப்புக்கள் எவையும் இல்லாமற் போயுள்ளதைக் கூறமுடியும்.

தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய அரசியல் முனையான தமிழத் தேசியக் கூட்டமைப்பு தற்போது வரை தமது ஆதரவைப் பற்றிச் செய்தி எதனையும் கசியவிடாமற் பாதுகாத்துவருகின்ற நிலையில் "அண்மையில் அறிவிப்போம்" என்ற ஆறுதல் வார்த்தைகளை மட்டுமே வெளிப்படுத்தக் கூடியதாகவுள்ளது.

சனாதிபதித் தேர்தலின் அறிவிப்பு வெளியாகும் என்ற எதிர்பார்ப்புக் கிளம்பியவுடனேயே அதற்கான தயார்ப்படுத்தலில் தமிழர்களின் தேசிய அரசியல் காரணிகள் இயங்கியிருப்பின் இவ்வாறானதொரு இக்கட்டு எழுந்திருக்க வாய்ப்பில்லை.

எனினும் சனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட போது தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை கருத்திற்கொள்பவருக்கே தமது ஆதரவு வழங்கப்படும் என்ற அறிவிப்பை த.தே.கூ மேற்கொண்டிருந்தது. அதற்கு எதிர்மறையான பதில் இரண்டு தரப்பில் இருந்தும் வெளியானால் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்ற தந்திரோபாயத் திட்டம் தயாராக இருந்திருப்பின் இந்நேரம் ஆதரவு அறிவிப்பு வெளியாகியிருக்கும்.

சனாதிபதித் தேர்தலில் தற்போது வரை ஆதரவை வெளிப்படுத்தாத கட்சிகளாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் த.தே.கூ ஆகிய இரண்டுமே உள்ளன. ஆனால் ஸ்ரீ.மு.கா ஏற்கனவே தற்போதுள்ள சனாதிபதியினதும். போட்டியிடவுள்ள சனாதிபதி வேட்பாளரினதும் பங்காளியாகச் செயற்படுவதால் அக் கட்சி எவ்வித அறிவிப்பையும் வெளியிடாது விட்டால் அதனது ஆதரவு ஆளங்கட்சிக்கிருப்பது உறுதியாகிவிடும். அவ்வாறில்லாது விட்டால் அக் கட்சியும் தாவல் அரசியலுக்குட்பட்டுவிடும்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கப்போனால் தமிழர்களின் அரசியல் சாணக்கிய நகர்வுகள் பேரினவாத அரசியல் வெள்ளத்தில் அள்ளிச் செல்லப்படும் துரும்பாக்கப்பட்டு விட்டதாகவே உணரக்கிடைக்கின்றது. தமிழ் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் பலவழிகளாலும் விடப்படுகின்ற இந்த வேளையில் தமிழர்களின் அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக பல நாடுகளுடனும் இராச தந்திரப் பேச்சுக்களை முன்னெடுப்பதாகக் கூறி கடந்த பல வருடங்களாகப் பேசிய பேச்சுக்களை மக்களுக்குத் தெரியப்படுத்த முடியாது என்றும் அதனையே தமது அரசியல் இராசதந்திரம் என்றும் கூறிக்கொள்ளும் தமிழர்களின் அரசியல் தலைமைகளின் சாணக்கியம் "ஆதரவு" என்ற அடிப்படை விடயத்திலேயே கேள்விக்குறியாகிவிட்டது என்பது உண்மையா?

-மாயவன்

# சட்டவிரோத வேட்டையாளர்கள் பிணையில்

நிலாவெளி பிரதேசத்தில் மான் இறைச்சியை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட மூவருக்கு திருகோணமலை பதில் நீதவான் தி.திருச்செந்தில்நாதனினால் தண்டப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இந்த மூவரையும் காவல்துறையினர் சந்தேகத்தின் பேரில் நிலாவெளியில் வைத்து கடந்த திங்கட்கிழமை கைது அன்றைய தினமே நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

சந்தேக நபர்கள் ஒவ்வொருவரையும் தலா 50,000 ரூபாய் பிணையில் செல்லுமாறும் ஜனவரி மாம் 8ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறும் உத்தரவிட்டார்.

கைது செய்யப்பட்டபோது சந்தேக நபர்கள் மூவரும் தலா 5 கிலோ கிராம் மான் இறைச்சி வைத்திருந்ததாக பதில் நீதவானிடம் காவல்துறையினர் தெரிவித்தனர்.

# ததேகூ முன்மொழிவு - ஐமசுமு வழிமொழிவு

## பிரதேசசபையின் பாதீடு நிறைவேறியது

(அச்சுதன்)

சனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் பல பிரதேச சபைகள் ஆட்டம் கண்டு வரும் நிலையில் திருகோண- மலையின் பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் 2015ம் ஆண்டுக்கான பாதீடு வெற்றிகரமாக நிறைவேற்றப் பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அதிகாரத்தில் உள்ள இப்பிரதேச சபையானது சுமார் ஏழு கோடி ரூபாய் பெறுமதியான தமது வரவு செலவுத் திட்டத்தை சபையில் கடந்த வாரம் முன்வைத்த போது பிரதேச சபையின் உப தவிசாளரான இராசையா நிசாந்தன் முன் மொழிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர் ஆர்.ஏ.பி.ரெட்ணாயக்க வழி மொழிந்திருந்தார்.

நிறைவேற்றபட்டுள்ள 2015 ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் மூலம் வீதிகள் வடிகான்கள் மைதானங்கள் மயானங்கள் போன்றவை அபிவிருத்தி செய்யப்படவுள்ளன என பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் தவிசாளர் அர்.விஜேந்திரன் தெரிவித்தார்.

# கொட்டியாரக் கடலில் மீனவர் பலி

திருகோணமலை மாவட்டத்தின் கொட்டியாரக்குடா கயடலில் படகு மூழ்கியதால், காணாமல் போன மீனவரான கேணிக்காட்டைச் சேர்ந்த "ஹஸைன்தீன் முஹம்மது பாஹில் (வயது 34) என்பவரின் சடலம் திங்கட்கிழமை (22) காலை சூடாக்குடா கடற்கரையில் மீட்கப்பட்டதாக மூதூர் காவல்துறையினர் தெரிவித்தனர்.

கடலில் மீன்பிடிப்பதற்கு விடப்பட்டிருந்த வலையை மீண்டும் எடுப்பதற்கு சனிக்கிழமை (20) இவர் சென்றதாகவும் இதன்போது, இவரது படகு கடலில் மூழ்கியதுடன், இந்த மீனவரும் காணாமல் போயிருந்தார்..

# நிறைவேற்று அதிகாரமே சிறுபான்மை நலன்களைப் பாதுகாக்கும்! ஆரிப் சம்சுதீன்

நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதி முறையிருந்தாலே சிறுபான்மை ம்க்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆரிப் சம்சுதீன் தெரிவித்துள்ளார். 1948ம் ஆண்டிற்குப் பின்னர் எந்தவொரு காலத்திலும் நடைமுறைப்-படுத்தப்படாத அபிவிருத்தித் திட்டங்கள் சனாதிபதி மஹிந்த அவர்களின் ஆட்சிக் காலத்திலேயே நிகழ்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பாரஊர்தியைப் பெயர்த்த வெள்ளம்....!

அம்பாறையில் பெய்துவரும் அடைமழையை அடுத்து மாவடிப்பள்ளி தாம்போதியில் நீர் மட்டம் அதிகரித்துள்ளதால் போக்குவரத்துக்கள் பாதிப்-படைந்துள்ளது. கடந்த 24ம் திகதி கல்முனையில் இருந்து பயணித்த பாரஊர்தியொன்று இத் தாம்போதியில் வெள்ளநீரால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.



# கிண்ணியா நகரசபையின் பாதீடு தோல்வியா???

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் இருக்கும் கிண்ணியா நகர சபையின் வரவு செலவுத் திட்டம் தோல்வியடைந்துள்ளது.

நகர சபையின் தலைவர் எம். மஹ்ருப் இந்த வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்திருந்தார். வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக மூன்று வாக்குகளும் எதிராக வாக்குகளும் அளிக்கப்பட்டன.

## கபே கண்காணிப்பு அமைப்பின் கூட்டம்

தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே தனது திருகோணமலை மாவட்டக் கண்காணிப்-பாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டத்தைக் கடந்த 17ம் திகதி நடத்தியுள்ளது. விழுதுகள் அமைப்பினால் தேர்வு செய்யப்பட்ட பெண்கள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டுள்ளனர்

# வெள்ள அனர்த்தம்



வெள்ளத்தடுப்பு அணை உடைப்பெடுத்த போது






மணியம்பிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புச் செய்திகள்

# "முஸ்லீம் தலைவர்களில் பலர் அரசுக்கு துரோகமிழைத்துள்ளனர்" வி.முரளிதரன்



அரசுடன் இணைந்திருந்த பல முஸ்லிம் தலைவர்கள் அரசுக்கு துரோகம் இழைத்துவிட்டு இன்று எதிர்க்கட்சியில் இணைந்துகொண்டுள்ளனர் என்று மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார். போரதீவுப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட தும்பங்கேணி கொச்சிபாமில் பல்நோக்கு மண்டப திறப்பு விழா வியாழக்கிழமை (25.12.2014) அன்று நடைபெற்றது. இங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "முன்னரெல்லாம் முஸ்லிம் தலைவர்கள் வெற்றி பெறுகின்ற அரசாங்கத்தின் பக்கமே நின்றார்கள். அவர்களின் எதிர்ப்பினால் தமிழர்களுக்கான அபிவிருத்திகள் இல்லாமல் இருந்தன. ஆனால், இன்று பாரிய அபிவிருத்திகளை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது. தமிழர்களை வளர்ப்பதற்கும் தமிழ்த் தலைவர்களை உருவாக்குவதற்கும் நல்லதொரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவே வெற்றி பெறப்போகின்றார். அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சிங்கள மக்களின் மனங்களிலிருந்து எவரும் நீக்கமுடியாது. அவர் யுத்தத்தை நிறுத்தி, நாட்டில் அமைதியை ஏற்படுத்திய பெருமைக் உரியவராவார். இன்று நாங்கள் நிம்மதியாக வாழ்கின்றோம். யுத்தம் தொடர்ந்திருந்தால், இன்னும் அழிவுகளை நாம் சந்தித்திருப்போம். யுத்தம் நிறைவுற்றமையால், பல உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. யுத்தத்திலிருந்து தப்பியவர்கள், இன்று தங்களுடைய கிராமத்தை வளர்ப்பதற்கு தலைமை பொறுப்பேற்று செயற்படுகின்றனர். அவர்களை நாம் பாராட்டவேண்டும்.

தேர்தலில் வெற்றி பெறப்போகின்றவர் யார் என்பது எமக்கு தெரியும். அதை நாம் பயன்படுத்தவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்த எவராவது யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனரா? அவர்களுடைய பிள்ளைகளோ அல்லது உறவினர்களோ யுத்தத்தில் மடிந்திருக்கின்றனரா? நிச்சயமாக இல்லை. இந்த நிலையில், எமது உணர்வுகளை அவர்களால் புரிந்துகொள்ள முடியாது. அவர்கள் தங்கள் கதிரைகளை தக்கவைப்பதற்காகவும் நிதியை பெற்று தங்களை வளர்ப்பதற்காகவும் பலவற்றை உங்களுக்கு கூறுவார்கள். அதை நம்பி நீங்கள் வாக்களித்தால், உங்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை. மட்டக்களப்பு மாவட்ட மக்களின் துன்பங்களை நன்கறிந்த இந்த மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உங்களுக்கு என்ன கூறப்போகின்றார்கள். பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் சிறுபான்மை இனத்தை பற்றி ஒரு வசனம் கூட உள்ளடக்கப்படவில்லை. அவர் சிறுபான்மை இனத்தை கணக்கில் எடுக்கவில்லை. தங்களுடைய பதவிகளுக்காகவும் கொள்கைகளுக்காகவும் நூறு நாட்களில் மாற்றத்தை கொண்டுவரவுள்ளதாகக் கூறி போலியான வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்து பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்கள். நூறு நாட்களில் அனைத்தையும் எப்படி மாற்றமுடியும் என்பதை நீங்கள் சிந்திக்கவேண்டும்.

இரு தடவைகள் ஜனாதிபதியாக பதவி வகித்த மஹிந்த ராஜபக்ஷ, பாரபட்சமில்லாமல் இனத்துவேஷமில்லாமல் எங்கள் தமிழ்மொழியையும் கற்றுக்கொண்டு எங்களுக்காக பணியாற்றுகின்ற ஒருவராவார். தமிழ் மக்கள் இம்முறை யாருடைய பேச்சையும் கேட்காது தமது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றியும் தமிழினத்தின் எதிர்காலம் பற்றியும் மாவட்டத்தின் அபிவிருத்தி பற்றியும் சிந்தித்து முடிவு எடுக்கவேண்டும்.

அபிவிருத்திகள் தொடர்ச்சியாக நடக்கவேண்டுமானால், தமிழன் தன்மானத்துடன் வாழவேண்டுமானால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கே வாக்களிக்கவேண்டும். இன்று உங்களுடைய பிள்ளைகள் கைது, கடத்தல், காணாமல்போதல் போன்றவை இன்றி நிம்மதியாக வாழ்கின்றார்கள். நாங்கள் அரசாங்கத்துடன் இணைந்திருந்து இவற்றையெல்லாம் நிறுத்தியுள்ளோம். அபிவிருத்திகளை மேற்கொண்டுள்ளோம். நாங்கள் எங்களுடைய தேவைகளை உரிமையுடன் கேட்கும்பொழுது, எந்தத் தடையுமின்றி செய்து தருபவரே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அப்படிப்பட்ட நன்கு பரீட்சயமான ஒருவரை நாங்கள் ஜனாதிபதியாக தெரிவுசெய்வோமா அல்லது பரீட்சயம் இல்லாத எதுவுமே தெரியாத ஒருவரை ஆதரிப்போமா என்பதை சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.

இந்தத் தேர்தல் தமிழர்களுக்கு கிடைத்துள்ள அரிய சந்தர்ப்பமாகும். ஏனென்றால், அரசுடன் இணைந்திருந்த பல முஸ்லிம் தலைவர்கள் இன்று அரசுக்கு துரோகம் இழைத்துவிட்டு எதிர்க்கட்சியில் இணைந்துள்ளனர். தமிழர்கள் அணிதிரண்டு ஜனாதிபதிக்கு வாக்களித்தோமானால், பெரிதளவிலான மாற்றத்தை கொண்டுவரமுடியும். அரசிலிருந்து விலகி எதிர்க்கட்சிக்கு செல்பவர்களை பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. அரசாங்கம் எமக்கு நல்லதை செய்யும்போது, நாமும் நன்றி உடையவர்களாக இருக்கவேண்டும். மீள்குடியேற்ற அமைச்சராக முன்னர் பதவி வகித்த ரிசாட் பதியுதீன், எந்த மீள்குடியேற்றத்தையும் செய்யவில்லை" என்றார்.

## நினைவு தின அனுஷ்டிப்பு



மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 09ஆவது வருட நினைவுதினம் வியாழக்கிழமை (25.12.2014) அனுஷ்டிக்கப்பட்டது. மட்டக்களப்பில் உள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் கி.துரைராஜசிங்கம் தலைமையில் இந்த நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது, மறைந்த ஜோசப் பரராஜசிங்கத்தின் திருவுருவப்படத்துக்கு தீபச்சுடர் ஏற்றப்பட்டதுடன், மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, நினைவு உரைகள் ஆற்றப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தேவாலயமொன்றில் நத்தார் பண்டிகை ஆராதனையின்போது, 2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், ஞா.கிருஸ்ணபிள்ளை, மா.நடராஜா, பிரசன்னா இந்திரகுமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## எம் சமூகமே முக்கியம்

தங்களுக்கு அமைச்சுப்பதவி முக்கியம் அல்ல என்பதுடன், தமது சமூகமே முக்கியம் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாட் பதியுதீன் தெரிவித்தார். இதனாலேயே, அனைத்தையும் தூக்கி எறிந்துவிட்டு சமூகத்துக்காக அரசாங்கத்தை விட்டு வெளியேறியுள்ளதாகவும் அவர் கூறினார். சமூகத்துக்கு நடந்த அநீதியை பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. இதனால், வெளியேறுவதற்கு தருணம் பார்த்துக்கொண்டிருந்ததாகவும் அவர் கூறினார்.

## கொரிய மொழிக் கற்கை



மட்டக்களப்பு தொழிநுட்பக் கல்லூரியில் 2015ஆம் ஆண்டிலிருந்து கொரிய மொழிக் கற்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் தொழிநுட்பக் கல்லூரி அதிபர் ரி.ரவிச்சந்திரன், புதன்கிழமை(24) தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ள 4 புதிய கற்கை நெறிகளில் கொரிய மொழிக்கற்கையும் ஒன்றாகும்.

மட்டக்களப்பு தொழிநுட்பக் கல்லூரியில் எதிர்வரும் 2015ஆம் ஆண்டு 36 கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதில், 29 கற்கை நெறிகள் பட்டத்தைப் பெறக்கூடிய தேசிய தொழிற் தராதரம் (ஏஞ) தர சான்றிதழைக் கொண்டுள்ளது.

இவற்றில் 5 கற்கை நெறிகள் டிப்ளோமா தர சான்றிதழை கொண்டதாகும். 2014ல் 32 கற்கை நெறிகள் நடாத்தப்பட்டு 1,008 மாணவர்கள் கற்கை நெறியைத் தொடர்ந்தனர். இதில் 10 புதிய கற்கை நெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

## ரூ850 இலிருந்து 1500 ஆக ஏற்றம்

வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் உலர் உணவுப்பொருட்களின் பெறுமதியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ ரூ 850 இலிருந்து 1500 ஆக அதிகரித்துள்ளதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார். இம்மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள செங்கலடி, வாழைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்களுக்கான பொருட்கள் விநியோகிக்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

## அரச அதிகாரிகளை அரசியலில் சேர்க்க வேண்டாம்

அரச அதிகாரிகளை அரசியலில் இணைத்து பேசுவதை ஊடகங்கள் தவிர்க்கவேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார். அவர் புதன்கிழமை (24.12.2014) வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது, "மட்டக்களப்பு மாவட்ட மக்கள் என்றுமில்லாதவாறு வெள்ளம் காரணமாக தத்தளிக்கின்ற இந்தத் தறுவாயில், அவர்களை காப்பாற்றுவதிலும் உணவு மற்றும் இருப்பிட ஏற்பாடுகளை செய்வதிலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றோம். மாவட்ட விவசாயிகளுக்காக கூடிய செலவில் புனரமைக்கப்பட்ட குளங்கள் வெள்ளத்தால் உடைப்பெடுக்காதவாறு, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளோம்.

இதற்கு மேலாக, தேர்தலை நியாயமான முறையில் நடத்தவேண்டிய பொறுப்பும் அரசாங்க அதிபர் என்ற ரீதியில் என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தக் கடமையையும் தற்போதைய இயற்கை அனர்த்தத்துக்கு மத்தியில் மேற்கொள்ளும் இந்தத் தறுவாயில், என்னைப் பற்றி அவதூறாக அநாமதேய முறையில் அரசியலுடன் இணைத்து தகவல்கள் பரப்பப்படுகின்றன. வெள்ளம் காரணமாக மாவட்டத்தின் மூலை, முடுக்கெல்லாம் செல்லவேண்டியுள்ளது. இதை மக்களுக்காக மேற்கொள்ளும்போது, இவ்வாறான அவதூறான தகவல் களினால் எமது அர்ப்பணிப்புகளை மழுங்கடிக்கக்கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.



## நுளம்பு வலை வழங்கி வைப்பு

ஏறாவூர் நகரசபைத் தலைவர் அலிசாஹீர் மௌலானவின் ஏற்பாட்டில் ஏறாவூர் ஏறாவூர் பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளத்தினால் இடம்பெயர்ந்து, சாஹிர் மௌலானா வித்தியாலயம், அல் அஸ்ரப் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 06 மாதங்களுக்குட்பட்ட 50 குழந்தைகளுக்கு நுளம்புவலைகள் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# தேசிய செய்திகள்

## "திஸ்ஸ" வின் ஆவணம் பதவிக்கு ஆப்பு



ஐ.தே.கட்சியின் முன்னாள் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் தேர்தல் பிரசாரத்துக்காக போலியான ஆவணத்தை பயன்படுத்தியமையானது, ஜனாதிபதி மீண்டும் தெரிவு செய்யப்படுவாரானால் அவரை பதவியில் இருந்து அகற்றும் குற்றமாக இருக்கும் என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா கூறியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவும் மைத்திரிபால சிறிசேனவும் செய்து கொண்டதாக கூறி திஸ்ஸ அத்தநாயக்க, வெளியிட்ட இரகசிய ஆவணமானது போலி என்று கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையின் 452 ஆவது குற்றவியல் சட்டத்தின் கீழ் இந் நடவடிக்கை தேர்தல் பிரசாரம் குற்றமாகும்.

ஜனாதிபதி தேர்தல் சட்டத்தின்படி, செய்தித் தாள்களை போலியாக வெளியிடல் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகளை மேற்கொள்ளல் 83வது குற்றவியல் சட்டத்தின் படி குற்றமாகும்.

இந்தக்குற்றச்சாட்டுக்கள் மூலம், மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால், அவரை உயர்நீதிமன்றத்தின் ஊடாக அந்த பதவியை ரத்து செய்ய முடியும் என்றும் சரத் என் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

## வங்கிக் கடன்களை மீளச் செலுத்த அரசு தயார்!!!

சிறிய மற்றும் நடுத்தர அளவு அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல் கொள்வனவில் ஈடுபடுபவர் களினால் அரச வங்கிகளில் பெறப்பட்ட கடன் தொகையை மீளச் செலுத்த முடியாதிருப்பின் அவற்றை அரசாங்கம்– திறைசேரியின் ஊடாக செலுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதாக கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமையவே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

நெல் கொள்வனவு மற்றும் அரிசி விநியோகத்தின் மூலம் விவசாயிகள் தமது உற்பத்திகளை அரசாங்கத்தின் உத்தரவாத விலையில் பொதுமக்களுக்கு விநியோகிக்கும் செயற்பாட்டில் சிறிய மற்றும் நடுத்தர வியாபாரிகளின் சேவை அளப்பரியது. அதனாலேயே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாம்

## தெரியாத பெண்ணை விடப் பேய் நல்லது– சனாதிபதி



கொழும்பு வர்த்தக சங்கத்தின் வர்த்தகர்களுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று கடந்த புதன்கிழமை மாலை நடைபெற்றது.

இதன் போது உரையாற்றிய ஜனாதிபதி, நாட்டின் முப்பது வருட காலமாக நிலவிய கொடிய யுத்தத்தின் போது மக்களை பாதுகாத்திடவும் மற்றும் நாட்டை அபிவிருத்தி பாதைக்கு கொண்டு செல்வது உள்ளிட்ட பாரிய பொறுப்பு என்னிடம் காணப்பட்டது. அன்றைய கால கட்டங்களில் கப்பம் கேட்கும் மற்றும் பாதாள உலக தலைவர்களின் அச்சுறுத்தல்கள் வர்த்தகர்கள் உட்பட அமைச்சுக்களுக்கும் பாரிய பிரச்சினையாக காணப்பட்டது. இன்று அவர்களின் நடவடிக்கைகள் முற்று முழுவதுமாக ஒடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் அண்மிக்கும் இத்தருணத்தில் தனிப்பட்ட சுயநலனுக்காக என்னுடன் இருந்து இறுதி திகதி வரை அப்பம் சாப்பிட்ட பொது வேட்பாளருடன் சில அமைச்சர்கள் இணைந்துள்ளனர். கண்ணுக்கு தெரியாத அழகியை விட கண்ணுக்கு தெரிந்த பேய் எமக்கு நல்லது என்பதனை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

## கழுத்தை அறுத்தவர் "காயைக்" கடிக்க முனைந்து கைது

பேருவளை மாகல்கந்த எனுமிடத்தில் தனது கணவனை கழுத்தை அறுத்து கொலைச் செய்தார் என்ற குற்றச்சாட்டில் அவரது மனைவி கைது செய்யப்பட்டுள்ளார்

அப்பெண்ணின் கள்ளக்காதலன் என்று கூறப்படுகின்ற மீனவர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள மீனவர், கொலைச்செய்யப்பட்டவரின் இளைய சகோதரர் என்று விசாரணைகளின் ஊடாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட மனைவி, தடைச்செய்யப்பட்ட ஒருவகையான காயை கடித்து தற்கொலை செய்துகொள்வதற்கு முயன்றார் என்றும் காவல்துறை தெரிவித்துள்ளது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அவரது மனைவியிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக காவல்துறை தெரிவித்தனர்.

## விஹாராதிபதியின் வன்புணர்வுக்கு தண்டனை 75000 + 30 ஆண்டு சிறை

ஒரு மாத காலம் வரையில் பிக்கு சிறுவனை பாலியல் ரீதியிலான துஸ்பிரயோகத்துக்குட்படுத்தியதாக மொனராகலைப் பிரதேச விகாரை ஒன்றின் விஹாராதிபதி ஒருவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணமானதால் அவருக்கு மொனராகலை நீதிவான் நீதிமன்றம் 30 வருட கால கடுழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன் 75 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிமன்றம் மேலும் 75 ஆயிரம் ரூபாவை பாதிக்கப்பட்ட பிக்கு சிறுவனுக்கு இழப்பீடாக வழங்குமாறும் உத்தரவிட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி முதல் மே மாதம் 13 ஆம் திகதி வரையான ஒரு மாத காலமாக மேற்படி பிக்கு சிறுவனை மொனராகலை விஹாரையொன்றைச் சேர்ந்த விஹாராதிபதி பாலியல் வன்புணர்விற்குட்படுத்தி வந்துள்ளார்.

கைது செய்யப்பட்ட விஹாராதிபதி பிணையில் விடுவிக்கப்பட்ட போதும் மீண்டும் விசாரணைகளின் போது அவர் நீதிமன்றம் ஆஜராவதை தவிர்த்து வந்துள்ளார். இதனையடுத்து மேற்படி விஹாராதிபதிக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

## அஞ்சல் வாக்களிப்பை 30ம் திகதி செய்யலாம்

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான அஞ்சல் மூல வாக்குகளை பதிவு செய்ய முடியாதவர்கள் இன்றும் எதிர்வரும் 30 ஆம் திகதியும் பதிவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலங்களிலும், காவல்துறை திணைக்களத்திலும் இந்த பதிவுகளை மேற்கொள்ள முடியும் என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஞ்சல் மூல வாக்களிப்புகள் இடம்பெறவுள்ள இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்படவுள்ளதுடன், கண்காணிப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப் படவுள்ளன.

## சொல்லிவிட்டுச் சென்ற அமைச்சர்



நீதிமன்றத்தினால் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள பிரதியமைச்சர் ஒருவர் இன்று நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளதாக அறிவித்துள்ளார்.

பிரதியமைச்சர் நிஸாந்த முதுஹெட்டிகமவே இவ்வாறு நாட்டைவிட்டுச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 26ம் திகதி காலை தான் நாட்டிலிருந்து செல்வதாக ஊடகங்களுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு விசேட அறிவித்தலொன்றை விடுத்து விட்டே அவர் சென்றுள்ளதாக சிங்கள ஊடகங்கள் பல தெரிவித்துள்ளன.

காவல்துறைப் பொறுப்பிலிருந்த இவரது ஆதரவாளர்கள் மூவரை பலாத்காரமாக விடுவித்துச் சென்றமை குறித்து இவருக்கு எதிராக நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு மக்கள் சனாதிபதியுடன்!

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வடக்கில் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் முன்னெப்போதுமில்லாத வகையில் அவருக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் மக்களின் வாக்குகளை ஈட்டித்தரும் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் வரவு செலவுத் திட்டத்தில் ஏதும் குறிப்பிடப்படவில்லை. இந்நிலையில், தமிழ் மக்கள் எந்த அடிப்படையில் இன்னுமொரு தடவை அவரில் நம்பிக்கை கொள்வது என எழுப்பப்பட்ட வினாவுக்குப் பதிலளித்த அமைச்சர், வெறுமனே வெற்று வார்த்தை ஜாலங்களில் சொல்லிவிட்டு போவதை வைத்தன்றி உண்மையில் நிஜத்திலே என்னென்ன விடயங்களை ஒருவர் செய்துள்ளார் என்பதை வைத்தே ஒருவரது நம்பகத் தன்மையை அளவிட முடியும் என்றுள்ளார்.

## "குஸ்டரோக நிலையில் த.தே.கூ"



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் இருவரும், குஸ்டரோக நோயாளியைக் கண்டு ஒதுங்குவதைப் போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை ஒதுக்கி வைத்துள்ளனர் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு தெரிவிக்குமாறு ஆளும் கட்சி வேட்பாளர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்'வோ, எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைக் கோரவில்லை. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும் என்றார் அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## "எனது மகனை விட்டுவிடுங்கள்"
## விமானங்களில் கைவைத்தால் அழிவை எதிர்கொள்ள நேரிடும் - ஜோர்தான்



புதிய இஸ்லாமிய நாட்டைத் தோற்றுவித்துள்ள ஐஎஸ் தீவிரவாதிகள் வான்பரப்பில் பறக்கும் விமானங்களின் மீது கைவைத்தால் கடும் அழிவை நேர்கொள்ள வேண்டும் என ஜோர்தான் மிரட்டியுள்ளது.

கடந்தவாரம் தீவிரவாதிகளால் ஜோர்தானிய விமானமொன்று சுட்டு விழுத்தப்பட்டதுடன் அதன் விமானியான கஸாபே பணயக்கைதியாகப் பிடிக்கப்பட்டும் உள்ளார்.

பணயக் கைதியாகவுள்ள தனது மகனை மீட்டுத் தாருங்கள் என சர்வதேசத்திடமும் முறையிட்டுள்ள அவ்விமானியின் தகப்பனார் பயங்கரவாதிகளிடம் தனது மகனை விட்டு விடுமாறும் மன்றாடியுள்ளார்.

அவ்விமானியை மீட்பதற்கான இராசதந்திரப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் ஜோர்தானிய அரசு இவ் எச்சரிக்கையை விடுத்துள்ளது.

## பெண் ஓட்டுனர்கள் சவூதி நீதிமன்றில்

சவுதி அரேபியாவில் அந்நாட்டின் சட்டத்தை மீறி வாகனம் ஓட்டியதற்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு பெண்கள் மீதான வழக்கு தீவிரவாத வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஆனால் இந்த முடிவுக்கு எதிராக அந்தப் பெண்களுக்கான வழக்கறிஞர்கள் மேல் முறையீடு செய்துள்ளனர்.

அந்த இரண்டு பெண்களில் ஒருவரான லுஜையின் ஹத்லௌல், அண்டையிலுள்ள ஐக்கிய அரபு நாட்டுக்கு வாகனத்தை ஓட்டிச் செல்ல முயன்றபோது கைது செய்யப்பட்டார்.

மைஸ்ஸா அலமௌதி என்னும் மற்ற பெண்ணோ, ஐக்கிய அரபு அமீரகத்தில் இருக்கும் சவுதி ஊடகவியலாளர். அவர் ஹத்லௌல் கைது செய்யப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்க எல்லைப்பகுதிக்கு வந்தபோது கைது செய்யப்பட்டார்.

இந்த இரண்டு பெண்கள் மீதும் தடையை மீறி வாகனம் ஓட்டியதற்காக வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றும், இணையத்தளம் மூலமாக தெரிவித்தக் கருத்துக்களுக்காகவே வழக்கை எதிர்கொள்கிறார்கள் என்றும், அவர்களுக்கு நெருக்கமானவர்கள் கூறுகிறார்கள்.

உலக அளவில் பெண்கள் வாகனங்களை ஓட்டுவதை தடுக்கும் ஒரே நாடு சவுதி அரேபியா மட்டுமே. சவுதி அரேபியாவில் பெண்கள் வாகனங்களை ஓட்டுவது சட்டத்திற்கு விரோதமான செயலல்ல. ஆனால் அங்கே ஆண்களுக்கு மட்டுமே வாகன ஓட்டுநர் உரிமம் வழங்கப்படுகிறது. பெண்களுக்கு வாகன ஓட்டுநர் உரிமம் வழங்கப்படுவதில்லை. பொதுஇடங்களில் பெண்கள் வாகனங்களை ஓட்டினால் காவலர்கள் அவர்களை கைது செய்து அபராதம் விதிக்கும் ஆபத்து அங்கே இருக்கிறது.



## சிறை மீண்ட அமெரிக்கருக்கு 3.2 மில் அமெ.டொலர் கொடுப்பனவு



கியூபாவில் சிறையில் கடந்த ஐந்து வருடங்களாக சிறையிடப்பட்டு மீண்ட தொண்டு நிறுவனப் பணியாளருக்கு 3.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நட்டஈடாக வழங்கப்பட்டுள்ளது.

யுஎஸ்எய்ட் நிறுவனத்தின் உபகுத்தகைக் காரராகப் கியூபாவில் பணியாற்றி வந்த குறொஸ் என்ற அமெரிக்கர் மீது கடந்த 2009ம் ஆண்டு கியூப நாட்டின் இறைமைக்கும் சுதந்திரத்திற்கும் ஆபத்தை விளைவித்ததாகக் கூறி தொடரப்பட்ட வழக்கில் 15 ஆண்டுகால சிறைத்தண்டனையை குறொஸ் தண்டனையாகப் பெற்றிருந்தார்.

அமெரிக்க அரசு தனது நல்லெண்ண சமிக்ஞைகளை கியூபா நோக்கி விட்டுள்ளதை அடுத்து கியூபா எடுத்துவரும் அதிர்ச்சி தரும் நடவடிக்கைகளில் ஒன்றாக குறொஸ்சின் விடுதலை அமைந்துள்ளது.

65 வயதான குறொஸ் கியூபாவில் கைதுசெய்யப்படும் போது அவரிடம் இருந்த நுண்சிப் கியூபாவில் எங்கிருந்து தொடர்பாடப்படுகின்றது என்பதைக் கண்டு பிடிப்பதைத் தடை செய்யும் வல்லமை கொண்டிருந்ததாம்.அத்தகைய சாதனங்கள் கியூபாவில் தடை செய்யபட்படவை.

## அதிகரிக்கும் மதமாற்றச் சட்ட எதிர்ப்பு

இந்தியாவில் மதமாற்றத்துக்கு தடை கொண்டுவர வேண்டும் என்ற விதமாய் மத்திய அரசு பேசிவருவதை எதிர்த்து இந்தியாவின் முன்னணி கிறிஸ்தவ அமைப்புகளின் கூட்டமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கத்தோலிக்க ஆயர்கள் அமைப்பு, தேவாலயங்களின் தேசிய மன்றம், இவாஞ்ஜெலிக்கல் உறுப்புரிமைக் கழகம் ஆகியவற்றின் கூட்டமைப்பான தேசிய ஐக்கிய கிறிஸ்தவ மன்றம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

மதமாற்றத்தை தடை செய்வது, இந்தியாவின் அரசியல்சாசனத்தில் உத்திரவாதம் வழங்கப்பட்டுள்ள மத சுதந்திரத்துக்கு எதிரான தாக்குதலாக அமையும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தவிர இப்படியான சட்டங்கள் கிறிஸ்தவர்கள் போன்ற மத சிறுபான்மையினரை இலக்குவைத்து துன்புறுத்தவே பயன்படும் என்றும் இதில் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கிறிஸ்துமஸ் நாளா்ன டிசம்பர் 25ஆம் தேதியை நல்ல ஆளுமைக்கான தினமாக கொண்டாடப்போவதால் அன்றைய தினம் பள்ளிக்கூடம் திறக்கப்பட வேண்டும் என நவோதயா போன்ற பள்ளிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாக கூறி அந்த நடவடிக்கையும் கிறிஸ்தவ அமைப்புகள் கண்டித்துள்ளன.

## ஈராக்கிலும் "கிறிஸ்மஸ்"

வட ஈராக்கில் ஏற்படடுள்ள வன்முறைகளை அடுத்து இடம்பெயர்ந்துள்ள கிறிஸ்த்தவச் சிறுவன் ஒருவன் தற்காலிகத் தங்குமிடமொன்றில் பாலன் பிறப்பைக் கொண்டாடிய விதத்தை ஏஎவ்பி செய்திப்பிரிவு படம் பிடித்துள்ளது.

வடஈராக்கிய நகரமான மொசூலில் இருந்து குர்திஸ் இனத்தவரின் தலைநகரங்களுள் ஒன்றான ஈர்பில் நகரில் கூடாரங்களை அமைத்து வாழும் பெரும்பாலான கிறிஸ்தவ மக்களிடையே இச்சிறுவனும் இருப்பதாக ஏஎவ்பி செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.



## மீண்டும் கறுப்பர் மீது சூடு அன்ரனியோ மரணம்



மீண்டும் ஒரு கறுப்பினத்தவரை அமெரிக்க காவல்துறை சுட்டுக் கொலை செய்துள்ளதை அடுத்து பதட்ட நிலை உருவாகியுள்ளது.

காவல்துறை அதிகாரிகளை நோக்கி துப்பாக்கியை உயாத்தி சுடப்போவதாக எச்சரித்த இளைஞனையே தாம் சுட்டுக் கொன்றதாகக் காவல்துறை அறிவித்தள்ளது.

## திபெத்திய பிக்குவுக்கு துப்பாக்கிச் சூடு

நேபாளத்தின் சிச்சுவான் மாகாணத்தில் தொடரும் ஆர்ப்பாட்டங்களில் காவல்துறையின் துப்பாக்கிச்சூட்டுக்கு பிக்குவொருவர் இலக்காகியுள்ளார்.

தனக்குத்தானே எரியூட்டமுயன்ற பிக்குவைத் தடுக்கும் நோக்கிலேயே இத் துப்பாக்கிச் சூட்டை சீனக் காவல்துறை நிகழ்த்தியுள்ளது.

திபெத்தின் மீதான சீன ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிவரும் மக்களும் மதகுருக்களும் நாட்டுக்காக தமது உயிர்களை எரியூட்டும் சம்பவங்கள் திபெத்தில் நடைபெறுவது தடுக்க முடியாதுள்ளது.

1950 ஆண்டில் அமைதிப் புரட்சியின் ஊடாக திபெத்தைக் கைப்பற்றிய சீன இராணுவ ஆக்கிரமிப்பிற்கு எதிராகத் தலாய்லாமா தலைமையில் திபெத்தியர்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இப் போராட்டங்களில் முக்கிய வடிவமாக தமமை எரியூட்டிக் கொள்ளும் திபெத்தியர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.




## மலேசிய பயணிவிமானத்தைப் போர் விமானமே சுட்டு வீழ்த்தியுள்ளது

கடந்த யூலை மாதம் உக்ரேனில் வைத்து 239 பேருடன் சுட்டு வீழ்த்தப்பட்ட மலேசியப் பயணிகள் விமானத்தை உக்ரேனிய வான்படை விமானொமொன்றே சுட்டு வீழ்த்தியதாக ரஸ்யா அறிவித்துள்ளது.

தரைதாக்கு ஏவகணை மூலமே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இத்தாக்குதலுக்கு ரஸ்யா பின்புலமாக இருந்ததாகவும் ஆரம்பத்தில் செய்திகள் வெளியாகின.

ஆனால் இதை மறுத்த ரஷ்ய விசாரணை குழு ஒன்று தற்போது அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில், உக்ரைனின் நிப்ரோபெட்ரோவ்ஸ்க் நகர விமான தளத்திலிருந்து, சம்பவம் நடந்த யூலை 17ம் திகதி போர் விமானம் ஒன்று புறப்பட்டு சென்றுள்ளது. விண்ணிலிருந்து வான் இலக்குகளைத் தாக்கும் ஏவுகணைகளுடன் புறப்பட்டு சென்ற அந்த விமானம், அந்த ஏவுகணைகள் இல்லாமல் விமான தளத்துக்குத் திரும்ப வந்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறங்களற்ற கனவுகள்

மாயன்

தொடர்கதை

நூல் : அவனும் அதுவும்

அது மிகவும் அழகானது. பல்வேறு நிறங்கள். பல்வேறு வடிவங்கள்.

"காலுக்கு மெத்து மெத்தெண்டு.. வளந்த ஆக்கள் மெல்லிசா போடுவினம்.. கட்டப்புட்டுக்கள் மொத்தமாப் போடுவினம்.. ஆனா ஒரு கெட்ட பழக்கம்.. அதுக்கு பொருத்தமில்லாதத, அல்லாட்டி புதுசா போட்டால்... கடிச்சுப் போடும்"

"ஓம் அது கடிச்சுப் போடும்..."

"அம்மா கடிச்சுப்போட்டுது... அம்மா... அம்மா கடிச்சுப்போட்டுது..."

ராம் பாயிலிருந்து இரண்டு காலையும் உயரத்தூக்கிய படியே "கடிச்சுப்போட்டுது... கடிச்சுப்போட்டுது..." என்று கத்தினான்.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தளவில்... இது பொதுவான விடயம்.

படுக்கையில் பலபேர் கண் ணுக்குத் தெரியாத ஜந்துக் களால் கடிக்கப்படுவதும் பொது வைத்திய சாலையில் மரணமாவதும் .. நிரம்பப் பொதுவான விடயம்.

ராம் காலைச் சடாரெனத் தூக்கியதால் தலை லேசாக மேலே போய் தம்பியின் வயிற்றில் முட்டியது. தம்பி திடீரென சுருண்டு எழும்பித் தட்டுத்தடுமாறி தனது கையால் தரையைத் தடவி தலை முழுவதும் சரத்தால் போர்த்திப் படுத்திருந்த தம்பியய்யாவின் சரத்தை இழுத்து விட்டான். அருவி வெட்டிய களைப்பில் அசந்திருந்த தம்பியையா அதிர்ச்சியில் காலால் எட்டியுதைக்க குப்பி விளக்கின் எண்ணெய் விசாலத்தின் முகம் மீது முழுதாய் தெறித்தது.

"நாசமாப் போனதுகள்.. நிம்மதியாப் படுக்கவும் ஏலாது".. விசாலம் தனது பொதுவான பல்லவியைப் பாட, தம்பியய்யா குப்பி விளக்கைத் தடவி நெருப்பெட்டியால் கொழுத்தினார். ராம் கத்திக்கொண்டே இருந்தான்.

"என்ன கடிச்சுங்போட்டுதெண்டு கத்தினனி. எங்க காட்டு பாப்பம்"

உலுக்கி எழுப்பப்பட்ட ராம் சம்பவத்திற்கும் தனக்கும் தொடர்பேயில்லாமல் தனது வலது காலை தடவிப்பார்த்தபடி எல்லோரையும் விழித்துப் .பார்த்தான். காலில் எதுவித தடயங்களும் தட்டுப்படாததால் தான் கனவு கண்டது அப்பட்டமாய் அவனுக்கு புரிந்து போனது.

"அப்பா அண்ணருக்குச் செருப்புக் கனவு.... பாழாப்போன அந்தச் செருப்பையொருக்கா வாங்கிக் குடுத்தாப்பிறகுதான் நாங்கள் நிம்மதியா நித்திர கொள்ளலாம்...."

தம்பி அலுத்துக்கொண்டான். அந்த அலுப்பில் அண்ணாவிற்கு எதுவும் உண்மையிலேயே கடித்துவிடவில்லையென்ற ஒரு திருப்தியும் ஏதோ ஒரு இயலாமையும் மெலிதாய் படர்ந்திருந்ததுடன் அந்த நேரத்தின் கனத்தையும் அமைதியையும் குறைத்து எல்லோரையும் மீண்டும் அருகருகே தூங்க வழிசமைத்தது. எல்லோருமே படுத்துக்கொண்டது உண்மைதான். ஆனால் ராமினால் மட்டும் தூங்க முடியவில்லை. அவனிற்கு எதுவும் பெரிய ஆசையில்லை. ஒரு சோடி அழகான "சாண்டில்ஸ்" செருப்பு.

"ஒரு எண்ணூறு தொள்ளாயிரம் வரும். ஆனா அப்பாட்ட கேக்க ஏலுமே. நானும் தம்பியும் படிக்கிறம். அம்மாவுக்கு லேசான வருத்தங்கள் இருக்கு. அப்பாட வேல கூலி. நல்லா வயசும் போட்டுது. இந்த வருசம் நான் ஓ.எல் பரீட்சை எடுக்கும் வரைக்கும் அவர் படிப்பிக்கிறதே பெரிய விசயம். உடுப்பு, சாப்பாடு, மருந்து நாசமாப்போன டியூசன் இதுக்கெல்லாத்துக்கும் பிறகு..... சாண்டில்ஸ்.... எப்பிடி நான் அப்பரிட்ட கேக்கிறது. ஓ.எல் க்குப் பிறகு நான் உழைப்பன் தானே அப்ப பாப்பம்"

தூக்கம் தொலைந்த இரவுகளில் ராம் இதைத்தான் அடிக்கடி நினைத்துக்கொள்வான்.

"ஓ.எல் க்குப்பிறகு உழைப்பு, முதல் சம்பளத்தில நல்ல செருப்பு"...... "ஓ.எல் க்குப்பிறகு உழைப்பு, முதல் சம்பளத்தில நல்ல செருப்பு"

அவன் நிம்மதியாய் தூங்கத்தொடங்கினான். கனவுகளில் அவன் கால் சாண்டில்ஸ் அணிந்திருந்தது.

ஓ.எல் பரீட்சை முடிந்தது. ராம் வேலைக்குப் போக ஆசைப்பட்டான். ஆனால் கூலி வேலைக்கல்ல. ராமின் வீட்டிலிருந்து நான்காவது வீட்டில் வீடியோ போட்டோ படம் எடுக்கும் ஜெகன் தனக்கு ஒரு உதவியாளர் தேவை என கூறி ராமை தனது உதவியாளராக்கிக் கொண்டான்.

"ஐ...யா வேலை கிடைச்சிட்டுது. முதல் மாசம் முடியச் சம்பளம், உடனே ஒரு செருப்பு. ஆனா ஜெகன் அண்ண சம்பளத்தைப் பற்றிச் சொல்லேல்ல. எவ்வளவு தருவார்?......

**—தொடரும்—**

சிறுகதை

# புதிய சருகு.....

காவல் நிலையத்தில் நடந்த பிரியாவிடை நிகழ்ச்சிகள் முருகேசனின் உதட்டில் புன்னகையை நிரப்பியிருந்தன. உண்மையிலேயே, இத்தனை வருடங்கள் நேர்மையாகப் பணியாற்றியவர் இன்ஸ்பெக்டர் முருகேசன். இன்றோடு அவர் பணி முடிகிறது. பஜாஜ் பல்சரில் 60 கி.மீ. வேகத்தில் வந்து கொண்டிருந்தார். முருகேசனுக்குப் பின்னால், மாலையுடன் முன்னாள் எஸ்.ஐ., பாண்டியன் உட்கார்ந்து இருந்தார். பாண்டியன் முருகேசனைவிட இரண்டு வயது மூத்தவர். முன்னரே பணியிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார். இருவரும் நீண்டநாள் நண்பர்கள்.

"ஹூம்..." என்ற பெருமூச்சுடன் பாண்டியன் பேச ஆரம்பித்தார்.

"என்ன, முருகா... இனிமே காலைலயிருந்து சாயந்தரம் வரைக்கும் சும்மாவேதான் இருக்கணும். ஒன்னு பண்ணு! பேசாம நம்ம "யூனியன் கிளப்"புல வந்து சேர்ந்துடு. நம்மள மாதிரி ரிட்டயர்டு ஆளுக ஒரு நாலஞ்சு பேரு அங்க இருக்காங்க.

காலைல ஆறு மணிக்கு ஜாகிங்... ஏழு மணிக்கு பேட்மிட்டன்... எட்டு மணிக்கு வீட்டுல மருமக கையால சாப்பாடு, பத்து மணிக்கு திரும்ப "கிளப்"புக்கு வந்துடு. பகல் பூராம் கேரம் போடு... ரம்மி... நல்லா பொழுதுபோகும். என்ன சரியா?"

"சான்ஸே இல்ல அண்ணாச்சி... சும்மா ஒக்காந்து அரட்டை அடிக்குறது, நேரத்தப் போக்குறதெல்லாம் எனக்குப் புடிக்காது, என் போலீஸ் வேலைக்குத்தான் ரிட்டயர்டு. வேற ஏதாவது வேல இருந்துக்கிட்டேதான் இருக்கும்... பண்ணிக்கிட்டேதான் இருப்பேன்..." என்றார் முருகேசன்.

பேசிக்கொண்டே வந்த முருகேசன், கடைசி நேரத்தில் டிராபிக்கின் சிவப்பு விளக்கைப் பார்க்க, தடுமாறி நின்றார் முன்னால் நின்று கொண்டிருந்த மோ.வண்டியில் மோதி நின்றது பைக்...

"மன்னிச்சுக்கோ தம்பி" என்றார் முருகேசன்.

இடிபட்டவனது வண்டி புத்தம் புதிது போலும். மிகவும் கோபமாக கத்த ஆரம்பித்தான்.

"கண்ண எங்கய்ய" வச்சிருக்க... வயசாயிருச்சுன்னா கண்ணாடி போட வேண்டியதுதானே... ஒழுங்காப் போயா ரோட்டுல" என்றான்.

அங்கிருந்த டிராபிக் பொலிஸ் வேகமாக வந்தார்.

முருகேசனுக்கு "சல்யூட்" அடித்துவிட்டு, இடிபட்டவனிடம் திரும்பினான்.

"டேய் வண்டில ஏதும் உடையலைல பேசாமாகப் போ" என்று அதட்டினான்.

பச்சை விளக்கு விழ இடிபட்டவன் பேசாமல் முறைத்துக் கொண்டே சென்று விட்டான். டிராபிக் பொலிஸ், முருகேசன் ஓய்வு பெற்றதைப் பற்றி விசாரித்து, வழியனுப்பினான்.

"பாத்திங்களா அண்ணாச்சி... ரிட்டயர்டு ஆனாலும் அந்த மரியாத குறையுதான்னு... நான் எப்பவும் இப்படியேதான் இருப்பேன். நீங்க வேணாப் பாருங்க..." என்றார் முருகேசன்.

வீட்டிற்குள் முருகேசன் நுழைந்ததும், மீண்டும் மாலை... மீண்டும் வாழ்த்து...

முருகேசனின் மகன் ரமேஷ் அருகில் வந்தான்.

"அப்பா... இங்க பாருங்க... இனிமே நீங்க எந்த வேலையும் செய்யக்கூடாது... (முருகேசன் மறுத்துப் பேச வர, அவரைப் பேசவிடாமல் நிறுத்தினான்.) ம்.... எதுவும் பேசக் கூடாது.

நல்லா ரெஸ்ட் எடுக்கணும்... வீட்டு வேல எல்லாத்தையும் நான் பாத்துக்கிறேன். உங்க பைக்க மட்டும் எடுத்துக்கிறேன். ஓகேவா?"

கடைசி வார்த்தைகளில் அதிர்ச்சி அடைந்தார் முருகேசன். கையிலிருந்த "பைக்" சாவியை வாங்கிக் கொண்டு ரமேஷ் கிளம்பினான். அவரால் எதையும் பேச முடியவில்லை.

மறுநாள், காலை நான்கு மணிக்கெல்லாம் எழுந்து, ஈஸிச் சேரில் அமர்ந்து கொண்டு செய்தித் தாளுக்காகக் காத்திருந்தார். காலை ஏழு மணிவரை பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். வீட்டில் மற்ற எல்லோரும் வேலைக்கு அவசரமாகக் கிளம்பிக் கொண்டிருந்தனர். இவரால் அதற்கு மேல் பொறுமையாக அமர்ந்திருக்க முடியவில்லை. எழுந்து ஏதாவது வேலை இருக்கிறதா என்று அங்குமிங்கும் பார்த்தார். செடிகளுக்குத் தண்ணீர் இன்னும் ஊற்றப்படாமல் இருந்தது. கைலியை மடித்துக் கட்டிக் கொண்டு குடத்தில் தண்ணீர் தூக்கப் போனார்.

அவசரமாக கிளம்பும் நேரத்தில் ஏதாவது வாக்குவாதம் வருவது இயல்பு. அந்தக் கோபத்தில் ரமேஷ், வெறுப்பாக வந்து கொண்டிருந்தபோது, தண்ணீர் குடத்தோடு வந்த முருகேசன் அவன் மீது இடித்து விட்டார்.

"ஏம்பா... பேசாம ஒக்கார வேண்டியதுதான? கண்ணு மண்ணு தெரியாம வந்து மோதுறீங்க" என்றான் ரமேஷ்.

முருகேசன் அதிர்ந்து போனார். டிராபிக் சிக்னலில் இடிபட்ட இளைஞன் திட்டியவார்த்தைகள் ஒருமுறை நினைவிற்கு வந்தது. தனக்கு, "எது நடக்கக் கூடாது" என நினைத்தாரோ அது நடக்கத் தொடங்கியிருப்பதாகத் தோன்றியது அவருக்கு.

காலை பத்துமணி, இருப்பு கொள்ளாமல் முருகேசன் எழுந்து சாலையில் நடக்கத் தொடங்கினார். அந்த டிராபிக் சிக்னலின் பொலிஸ் தன் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தான். அவன் தன்னைப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே அவனுக்கு முன்னால் நடந்து சென்றார். அவன் அவரைப் பார்த்து ஒரு சிறிய புன்னகை செய்துவிட்டு, மீண்டும் வேலையில் ஈடுபடத் தொடங்கினான். அந்தப் புன்னகையில் "நடிப்பு" இருப்பது போன்று அவருக்குத் தோன்றியது.

பாண்டியனைப் பார்க்க வேண்டும் போல இருந்தது முருகேசனுக்கு. "யூனியன் கிளப்" புக்கு சென்றார். பாண்டியன் கேரம் போர்டுக்கு முன்னால் அமர்ந்திருந்தார். முருகேசனைப் பார்த்ததும் எழுந்து வந்தார். அவரை அழைத்துச் சென்று தன் நண்பர்களிடம் அறிமுகப்படுத்தினார். அவர்கள் அனைவருமே பணி ஓய்வு பெற்றவர்களாகவே இருந்தனர்.

முருகேசன் மெதுவாகக் கேட்டார், "ஆமா... இங்க மெம்பராவதற்கு எவ்வளவு கட்டணும்". யதார்த்தமாகக் கேட்பது போல நடித்தார். பாண்டியன் அவரைக் குத்திக்காட்ட விரும்பவில்லை. அவருக்குத் தெரியாதா என்ன நடந்திருக்கும் என்று! அவரும் ஓய்வு பெற்றவர் தானே!

காற்றடித்த போது, மரம் ஒன்றிலிருந்து புதிதாக ஒரு சருகு உதிர்ந்து மண்ணில் விழுந்தது. அங்கே ஏற்கனவே மண்ணோடு பதிந்த நிலையில் நிறைய சருகுகள்... புதிய சருகு விறைப்பாக நின்றது. காற்றுக்கு அங்குமிங்கும் ஓடியது. ஒரு காலடி வந்து அதை மிதித்தபோது அதுவும் மண்ணோடு பதிந்தது.



- தன்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகில்லை நான்!

**- தன்யா -**



உன்னை தவிர வேறு
நினைவுகள் இருந்தால்
விதம் விதமாய் அழகு
காட்டுவேன் - என்னை விட
உன்னை விரும்பியதால்
என்னை அழகுபடுத்த
முடிவதில்லை
புரிகிறதா என் உள்ளம்!!

## சாம்பல் பூத்த தணல் காயங்கள்

காட்சிக்குப் புலனாகும்
சாம்பல் மேடுகளும் – சில
கருகல் ஓரங்களும்.
கண்ணுக்குப் புலனாகா
நீறு பூத்த நெருப்புக்களும் – சில
கனவுகளும்,
கனன்று எரிவதற்கான
காத்திருப்புக்களும்.
கண்ணீரின் கறைகளால்
கன்னங்களில் கீறப்பட்ட
அகத்தின் சித்திரங்களும் – சில
அத்திவாரங்களும்.
இன்னும்
எழுந்து ஒருமுறை
தழல் நாக்குகள்
தாகமாய் நீளாதா?
இன்றும் என்னுள் எழுகின்ற
ஏகாந்த வினா.
ஏக்கமாய் நெடுமூச்சில்
கரைந்துபோகிறது.
தும்புகள் உதிர்க்கப்பட்ட
தூரிகைகள்,
உயிரின் சாறுகள்
உறுஞ்சப்பட்ட
உடற் சுவர்கள்,
ஆனாலும்
எனக்குள்
இன்னமும்
மறையாத எச்சமாய்
மானத்தின் ஓவியங்கள்
உயிர்ப்புடன்தான் இருக்கின்றன.
ஆனாலும்...
ஒளியில் இருளை நிறுவுதல்
ஒத்திகை பார்க்கப்படும்.
விழிகளற்ற கணங்களிலே
விடியல்களும்,
சேவலின் கூவுகைகளும்
வலிந்து நிறுத்தப்படும்.
புலன்களுக்குப் பூட்டியப்படும்.
புதிய சக்கரமொன்று
காலத்தை வேகமாய்
நகர்த்தும்.
இரவுகள் – சில
நிஜங்களை அம்பலமாக்கும்.



**- - மதுரன் - -**
**கட்டைப்பறிச்சான்**

## காலைப் பொழுது

காலைப் பொழுதினிலே கண்விழித்து
மேனிலைமேல்
மேலைச் சுடர்வானை நோக்கி
நிற்கின்றோம் விண்ணகத்தே
கீழ்திசையில் ஞாயிறுதான் கேடில்
சுடர் விடுத்தான்
பார்த்த ளியெல்லாம் பகலொளியாய்
மின்னிற்றே
தென்னை மரத்தின் கிளையிடையே
தென்றல் போய்
மன்னப் பருந்தினுக்கு மாலையிட்டுச்
சென்றதுவே
தென்னை மரக்கிளைமேல் சிந்தனையோ
போர் காகம்
வன்னமுற வீற்றிருந்து வானைமுத்த
மிட்டதுவே
தென்னைப் பசுங்கீற்றைக் கொத்திச்
சிறு காக்கை
மின்னுகின்ற தென்கடலை நோக்கி
விழிந்ததுவே



**யோ.மதுசிகா**
**தரம் - 10**
**கடற்கரைச்சேனை**

## மகிழ்ச்சியைக் கெடுப்பதும் மகிழ்ச்சியைக் கொடுப்பதும்

**சேனையூரான்**



குடியைக் கெடுக்கும் மதுக்
குடி
குலத்தைக் கெடுக்கும்
கூடா ஒழுக்கம்!

ஆடம்பர வாழ்வால் பாழாகும்
அமைதி
ஆன்மீக வாழ்க்கை தரும்
அமைதி!

மகிழ்ச்சியை கெடுக்கும்
மதமாற்றம்
மகிழ்ச்சியைக் கொடுக்கும்
போதுமென்ற மனம்!

ஒட்டாது உறவுவிட்டு
கெடும்
திட்ட மில்லாதசெயல்
சீர்கெடும்!

சேர்தலால் வருவது
உறவு
மோதலால் நேர்வது
பிரிவு!

## தொலைந்துபோன உறவுகள்

### மனித உரிமை தினத்தில்

கண்ணுக்குள் மணியாக
மாணிக்கத்தின் திலகமாக
கருவறையில் பேணி வளர்த்த - நம்
உறவுகள் திருடப்பட்ட நாள் முதல்

ஊண் இன்றி உணவு இன்றி - உலகில்
நீதி கேட்டு அழைந்தோம் திரிந்தோம்
யாரும் கேட்கவில்லை எம் குறலை

பாதக பூமியில் பிறந்தது குற்றமா? - ஏன்
இன்னும் சோதனை - மாறுமோ எம் வேதனை

நீதி கேட்டும் தரவில்லை
நிலை தடுமாறியது - எம் உள்ளம்
மனித நேயம் மாறிவிட்டதா!
ஐயகோ பறிக்கப்பட்டதா?

மனித உரிமை நாளில் கூட
வாதாடஃ. போராட முடியவில்லையே
மனித உரிமை பறிபோனது
உறவும் சேர்ந்தே போனது

நீதிகள் கலையப்பட்டன
எதுவுமே நிலையில்லை - ஏன்
பிறந்தாய் மகனேஃ. மகளே நீ எங்கே
எம் வேதனை கேட்கின்றதா - கூறு மகனே கூறு

நாம் இங்கே எம் - உறவுப்பாலம்
ஏன் உடைந்ததோ - செய்த பாவம் தான் என்ன
கூறுவது யாரோ - நீ எங்கே கூறு

எம் விடிவுகள் கிடைக்குமா? - எம் உறகள்
புரியாத புதிராக
இலைமறை காயாக மறைத்து வைத்த - எம்
உறவுகள் எங்கே மனிதா!

மனித உரிமை தினம் கூட
வருடத்தில் மறக்காமல் பிறக்கும்
எம் உறவுகள் பல வருடம் கடந்தும்
காணாமல் தவிக்கின்றதே - எம் இதயம்
மரணம் கூட தடுக்கின்றதே எம்மை

நீதித் தாயே கிடைக்குமா நீதி
ஏன் இன்னும் மௌனம் - நிலை தடுமாறாதே
கண்ணை திறந்திரு தாயே!!

**நா.ஆஹா**
**அன்புவழிபுரம்**

# இது குளக்கோட்டன் சமூகம்

**வரலாற்றுப் பக்கம்**

*கடந்தவாரத் தொடர்ச்சி.. ...*

கட்டுரையின் இறுதியில் பலியிடும் சிறுதெயவ வழிபாட்டினை எதிர்த்த புத்த, சமண மத தத்துவங்கள் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன.

பலியிடல் தொடர்பான கருத்துப் பரிமாற்றங்களோடு சேனைவழிக் குளத்தின் கரையினை நாங்கள் வந்தடைந்திருந்தோம். இந்தக்குளக்கரைக்கு அண்மையில் 'கல்நெருக்கம்' என்ற கருங்கற் பாறைகள் கொண்ட இடம் ஒன்றிருக்கிறது. அதனுடன் 'உதயனை யானை போட்ட கல்' என்றழைக்கப்படும் கல்லொன்று பெரிதாக கிளை பரப்பி நிற்கும் ஆலமரமொன்றின் கீழ் இருக்கிறது. மெல்லிய ஈரலிப்புடன் குளக்கரையிலிருந்து வீசிய காற்றும், உச்சிவெயில் நேரத்திலும் மிகக் குழுமையான நிழலினைத்தந்த அந்த இடமும் எங்கள் பயணத்தின் இளைப்பாறுமிடமாக அதை மாற்றியது.

குளத்தினையே நீண்ட நேரமாக பார்த்துக் கொண்டிருந்த கலாநிதி சரவணபவன் அவர்களுக்கு அது 'நீலாசோதயன்' பற்றிய எண்ணங்களைக் கிளறிவிட்டிருக்க வேண்டும். கோணேசர் கல்வெட்டில் கூறியுள்ள படி குளக்கோட்டு மன்னனின் விருப்பத்தினை அறிந்து தனது படையணியுடன் கந்தளாய்குளத் திருப்பணிகளை நிறைவேற்றிய நீலாசோதயனைப் பற்றிச் சுருக்கமாக எங்களுக்கு எடுத்துச் சொன்னார். கிழக்கிலங்கை வரலாற்றில் அதிகம் மறக்கப்பட்ட நாயகனான நீலாசோதயன் தொடர்பான விரிவான ஆராய்வு 'இது குளக்கோட்டன் சமூகம்' என்ற நூலின் முதல் அத்தியாயமான 'நீலாசோதயனும், காவல் தெய்வங்களும்' என்ற அத்தியாயத்தில் 98 ஆம் பக்கத்தில் வருகிறது.

ஆரம்பத்தில் இந்துமதத்தின் தொல் குடிமரபுகளில் சிறுதெய்வ வழிபாடு பற்றிப் பேசும் அக்கட்டுரை கண்ணகி, பேச்சியம்மன், மாரியம்மன், காளி, சப்தகன்னியர்கள் போன்ற பெண் தெய்வ வழிபாட்டினை விரிவாக ஆராய்கிறது. அத்துடன் சாமியாட்டம், தீமிதிப்பு, பலி, கந்தளாய்க் குளக்கட்டு மடை, மந்திரமும், சடங்குகளும் போன்ற தொல்குடி மரபுகளையும் ஆராய்கிறது. இவற்றுடன் திருகோணமலை வரலாற்றுடன் பின்னிப் பிணைந்துள்ள அகத்தியர் ஸ்தாபனம் தொடர்பான தகவல்களையும் பதிவு செய்துள்ளது.

'அட்டதிக்கும் புகழ்ந்தருளும் நீலாசோதயன்' என்று கோணேசர் கல்வெட்டுப் புகழும் நீலாசோதயனின் மிகவும் பலம் பொருந்திய படையணி பின்னாட்களில் பூதங்களாகச் சித்தரிக்கப்பட்ட வரலாற்றையும் இந்நூல் ஆராய்கிறது. நீலாசோதயனைப் போலவே குளக்கோட்டன் காலத்தில் குறுநில அரசர்களாக இருந்த வெண்டரசன், நீலாப்பணிக்கன், குருவிநாச்சியார் போன்றவர்களின் நாட்டார் இலக்கியங்கள் சார்ந்த கதைகளை அடிப்படையாகக் கொண்ட ஆராய்வு இந்நூலில் மூன்றாவது அத்தியாயத்தில் 224ஆம் பக்கத்திலிருந்து 229ஆம் பக்கம்வரை இடம்பெற்றுள்ளது.

கந்தளாய், தம்பலகாமம் பகுதிகளை ஆட்சி செய்த சுதேச அரசனான வெண்டரசன் குளக்கோட்டனுடன் முரண்பட்டுக் கொண்டதையும் இவ்வரசனால் கந்தளாயில் அமைக்கப்பட்ட 'வெண்டரசன் குளம்' இன்றுவரை 'வெண்டரசன் குளம்' என அழைக்கப்படுவதையும் இந்நூல் பதிவு செய்துள்ளது. தம்பலகாமப்பற்றை ஆட்சிபுரிந்த வெண்டரசனுக்கு நிகரான குறுநில அரசனாகக் கட்டுக்குளப்பற்றில் ஆட்சி புரிந்த நீலாப்பணிக்கன் பற்றிய நாட்டார் கதைகளும் இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும்.

தம்பலகாமம் பொற்கேணியில் தொடங்கிய அன்றைய நாளுக்கான தேடல்கள் சிவசக்திபுரத்தில் முடிவடைந்தது. அழைத்துச் சென்ற நண்பர் விஜேந்திரனுக்கு நன்றி தெரிவித்து விடைபெற்றோம். திரும்பி வரும்பொழுது 'இன்று தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலய திருவிழாக்களில் பெண்தொழும்பாளர் அபிநயம் பிடிப்பது போல் செய்வது பண்டைய நாட்களில் ஆலயச்சடங்குகளில் தேவதாசிகள் பங்கேற்றதின் குறியீடுகள்' என்றார் கலாநிதி சரவணபவன் அவர்கள்.



பண்டையநாட்களில் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயில் வெளிவீதியில் திருவிழாக்காலங்களில் எட்டுச் சந்திகளிலும் எட்டுவகையான நடனங்கள் ஆடப்பட்டு வந்தது. இது தொடர்பான விரிவான ஆராய்வுகள் 'இது குளக்கோட்டன் சமூகம்' நூலில் இரண்டாவது அத்தியாயமான 'கோபுர வறுமை தேவதாசிகள்' என்ற தலைப்பின் கீழ் விரிவாக 155 ஆம் பக்கத்தில் ஆராயப்பட்டுள்ளது. இந்த அத்தியாயம் தேவதாசிகளின் தோற்றம், சோழர் காலத்தில் அவர்களது நிலை, விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சியின் பின் அவர்களது நிலை போன்ற விபரங்களை வெகு சிறப்பாக எடுத்துக் கூறுகிறது.

*தொடரும்.....*

**வைத்திய கலாநிதி**
**த.ஜீவராஜீ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா அதிபர் தேர்தல் தனியொரு குடும்ப ஆட்சிக்கு முடிவுகட்டுமா?

## தேர்தல் அலசல்

சிறிலங்கா அதிபர் ராஜபக்ச ஜனவரி 08 தேர்தலில் வெற்றி பெற்றால், சிறிலங்காவானது மேலும் பொருளாதாரத் தேசியவாதம் மற்றும் சீனாவில் தங்கியிருக்க வேண்டிய பொருளாதாரத்துடன் இணைந்த அதிகாரத்துவம், சிங்கள - பௌத்த பேரினவாதம் மற்றும் இனவாதம் போன்றவற்றைக் கொண்ட ஒரு நாடாக மாறும்.

சிறிலங்கா அதிபர் மகிந்த ராஜபக்ச கடந்த மாதம் அதிபர் தேர்தலை முற்கூட்டி நடாத்தவுள்ளதாக அறிவித்ததானது இவர் மூன்றாவது தடவையாகவும் அதிபராகப் பதவியேற்பதை நோக்காகக் கொண்டிருந்தது. ஆனால் ஜனவரி 08 அன்று இடம்பெறவுள்ள அதிபர் தேர்தலில் மகிந்த ராஜபக்சவை எதிர்த்து எதிரணியின் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டதானது தற்போதைய அதிபர் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான சாத்தியத்தை குறைத்துள்ளது.

ஒரு மாதத்திற்கு முன்னர் மைத்திரிபால சிறிசேன தற்போதைய மகிந்த ராஜபக்சவின் நாடாளுமன்ற அமைச்சராகவும் தற்போதைய ஆளுங்கட்சியின் பொதுச் செயலராகவும் கடமையாற்றியிருந்தார். ஆனால் கடந்த பத்தாண்டாக சிறிலங்காவை ராஜபக்ச ஆட்சி செய்துவரும் அரசியல் நடவடிக்கையில் மைத்திரிபால சிறிசேனவின் கட்சித் தாவலும் எதிரணியின் பொதுவேட்பாளராக இவர் அறிவிக்கப்பட்டமையும் ஒரு திடீர்த் திருப்பமாக அமைந்துள்ளது.

2009ல் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் தற்போதைய சிறிலங்கா அதிபர் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான பரப்புரையை மேற்கொண்டு வருகிறார். இந்த அடிப்படையில், சிறிலங்காவானது ராஜபக்சவின் தலைமைத்துவத்தை பெரிதும் வரவேற்றுள்ளது. சிறிலங்காவில் கால் நூற்றாண்டாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் பின்னர், தற்போது மக்கள் அச்சமின்றி தமது நாளாந்தத்தைக் கழிக்க முடிகிறது.

வீதிகள், பாலங்கள், தொடரூந்துப் பாதைகள், மின்சக்தித் திட்டங்கள் நாட்டில் அமுல்படுத்தப் பட்டுள்ளன. கொழும்பு மற்றும் நாட்டின் பெரும்பாலான பட்டிணங்கள் மேலும் அழகுபடுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான ஒரு சூழலில் சிறிலங்காவில் வாழும் மக்களின் நிலை அரசியல் காரணங்களால் சீர்குலைந்துள்ளது. சிறிலங்காவின் அரசியல், இனங்களுக்கிடையிலான நல்லுறவு, பொருளாதாரம் மற்றும் வெளியுறவுக் கொள்கை போன்றன மிகவும் மோசமடைந்துள்ளன.

அரசியல் ரீதியாக நோக்கில், சிறிலங்காவானது தனியொரு குடும்பத்தால் நிர்வகிக்கப்படும் ஒரு நாடாகக் காணப்படுகிறது. இது தற்போது நான்கு சகோதரர்களால் மட்டும் ஆளப்படுகிறது. அதாவது சிறிலங்காவின் அதிபர் மகிந்த ராஜபக்ச இவரது இரு சகோதரர்களான கோத்தபாய மற்றும் பசில் மற்றும் அதிபரின் மகன் நாமல் ஆகிய நான்கு பேரால் ஆட்சிசெய்யப்படுகிறது. இதைவிட, ராஜபக்சவின் நெருங்கிய உறவுகள், நண்பர்கள் போன்றவர்களும் பிரதான பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.



ஸ்ரீறிலங்காவின் கொள்கைத் தீர்மானமானது குறித்த ஒரு சில நபர்களால் மட்டும் வரையப்படுகிறது. பொது நிர்வாகம், சட்டசபை, நீதிச் சேவை, பிரதேச சபைகள், காவற்துறை, இராணுவம் போன்றவற்றை நிர்வகிப்பவர்கள் ராஜபக்சவின் செல்வாக்கின் அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர். இதேபோன்று வர்த்தகம், ஊடகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றனவும் ராஜபக்சவின் கையாட்களால் அச்சுறுத்தப்படுகின்றன.

மிகச்சுருக்கமாகக் கூறின், சிறிலங்காவானது தற்போது சர்வதிகாரப் போக்குள்ள ஒரு நாடாக மாறியுள்ளது. அதாவது ரஸ்யா மற்றும் வெனிசுலா போன்ற நாடுகளை விடவும் இந்திய உபகண்ட நாடுகளை விடவும் சர்வதிகாரப் போக்குள்ள நாடாக சிறிலங்கா மாறிவருகிறது.

சிறிலங்காவில் உள்நாட்டுப் போர் முடிவடைந்ததிலிருந்து இங்கு வாழும் இனங்களுக் கிடையிலான உறவு முன்னேற்றப்படவில்லை. தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு மற்றும் கிழக்கில் யுத்தம் தீவிரமடைந்திருந்தது. இவர்கள் தற்போது கட்டுமாண வசதிகள், புதிய வீடுகள் போன்றவற்றைப் பெற்றிருந்தாலும் கூட, இங்கு போரால் ஏற்பட்ட வறுமை மற்றும் உளவியல் பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை.

போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இராணுவம் தொடர்ந்தும் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக வடக்கில் இராணுவ ஆதிக்கம் அதிகரித்துள்ளது. பௌத்த பிக்குகளால் தலைமை தாங்கப்படும் பொது பல சேன என்கின்ற அமைப்பானது பள்ளிவாசல்கள், முஸ்லீம் கடைகள் மற்றும் கத்தோலிக்கத் தேவாலயங்கள் போன்றவற்றின் மீது தாக்குதல் நடாத்தி வருகிறது. சிறிலங்காவில் என்றுமில்லாதவாறு சிங்கள-பௌத்த இனவாதம் தீவிரமடைந்துள்ளது. இதற்கு ராஜபக்ச அரசாங்கமும் தனது ஆதரவையும் உந்துதலையும் வழங்கி வருகிறது.

அதாவது போர் முடிவடைந்ததிலிருந்து தற்போது வரை சிறிலங்காவின் பொருளாதார மானது ஏழு சதவீதத்தை விட அதிகரித்துள்ளது. விலையேற்றம், கடன், வட்டிவீதம் போன்றன குறைந்துள்ளன. நாட்டில் தற்போது வறுமை அதிகரித்துள்ளது. இதனால் வேலையற்றோர் வீதம் அதிகரித்துள்ளது. சிறிலங்கா அரசாங்கம் தனது பொருளாதார வளர்ச்சியை பெருமிதமாகப் பேசுவதாக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். போருக்குப் பின்னான வளர்ச்சியானது நாட்டின் உற்பத்தி வீதம் அதிகரித்ததால் ஏற்பட்டதல்ல. அதாவது அனைத்துலக நாடுகளிடமிருந்து மானியமாகவும் கடனாகவும் அதிகளவு நிதியைப் பெற்றுக் கொண்டமையே இதற்குக் காரணமாகும்.

உள்நாட்டு தொழிற்துறைகள் வீழ்ச்சியடைந் துள்ளன. இதற்குப் பதிலாக நுண்பொருளாதாரக் கோட்பாடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன. வர்த்தகப் பாதுகாப்பு நடைமுறைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. போட்டித்தன்மை குறைவடைந்துள்ளது. வெளிநாட்டு முதலீடுகள் தடைப்பட்டுள்ளன. கட்டுமாணத் திட்டங்கள் மிக அதிகளவான நிதியில் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேவேளையில், சிறிலங்காவின் பாதுகாப்புச் செலவீனம் அதிகரித்துள்ளது. இராணுவத்தினர் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். நாட்டில் ஜனநாயகம் வீழ்ச்சியடைவதற்கும் பொருளாதார தேசியவாதம் அதிகரிப்பதற்கேற்ப வெளியுறவுக் கோட்பாடு வரையறுக்கப்பட்டுள்ளது. சிறிலங்காவின் மேற்குலக நாடுகளுடனான உறவுநிலை மோசமடைந்துள்ளது. இந்தியாவுடனான சிறிலங்காவின் உறவுநிலையில் விரிசல் ஏற்பட்டுள்ளது. ஆனால் சீனா, சிறிலங்காவின் 'முதலாவது நண்பனாக' செல்வாக்குச் செலுத்துகிறது. சிறிலங்காவின் புதிய கட்டுமாணத் திட்டங்கள் மற்றும் ராஜபக்சவின் பெருமையைப் பாறைசாற்றும் திட்டங்களுக்கு சீனா அதிக கடன்களை வழங்குகிறது.

சிறிலங்காவின் பூகோள பொருளாதார நலன்களை அடைந்து கொள்வதற்கேற்ற வெளியுறவுக் கோட்பாட்டை ராஜபக்ச வரையறுத்துள்ளார். அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் போன்றன சிறிலங்காவின் ஏற்றுமதியின் மூன்றில் இரண்டு பங்கிற்குப் பொறுப்பாக உள்ளன. சிறிலங்கா இந்தியாவுடன் பொருளாதார உறவைப் பேணுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக, தென்னிந்தியாவுக்கு அருகிலுள்ள 300 மில்லியன் மக்களைக் கொண்ட நான்கு நாடுகளுடன் சிறிலங்கா பொருளாதார உறவைக் கட்டியெழுப்ப வேண்டும்.

சிறிலங்கா அதிபர் ராஜபக்ச ஜனவரி 08 தேர்தலை வெற்றி பெற்றால், சிறிலங்காவானது மேலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொருளாதாரத் தேசியவாதம் மற்றும் சீனாவில் தங்கியிருக்க வேண்டிய பொருளாதாரத்துடன் இணைந்த அதிகாரத்துவம், சிங்கள - பௌத்த பேரினவாதம் மற்றும் இனவாதம் போன்றவற்றைக் கொண்ட ஒரு நாடாக மாறும்.

அதிபராகப் பதவியேற்று 100 நாட்களில் நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பேன் எனவும், அனைத்துக் கட்சி அரசாங்கத்தை உருவாக்குவேன் எனவும் மேல்மந்திரியைக் கொண்ட நாடாளுமன்ற முறைமையை மீண்டும் நடைமுறைப் படுத்துவேன் எனவும் காவற்துறை, நீதிச்சேவை, பொதுச் சேவை போன்ற சுயாதீன நிறுவகங்களை மீளவும் நிறுவுவேன் எனவும் திரு.சிறிசேன வாக்குறுதி வழங்கியுள்ளார். இவையெல்லாம் வரவேற்கத்தக்க மாற்றங்களாகும். சிறிலங்காவானது நம்பகமான பொது நிறுவகங்களைக் கொண்ட ஒரு நாடாகவும் சட்ட ஆட்சி மதிக்கப்படும் ஒரு நாடாகவும் மாறவேண்டிய தேவையுள்ளது. ஆனால் ராஜபக்சவை எதிர்த்துப் போட்டியிடும் எதிரணியிலும் அதிகாரத்துவ சக்திகள் அங்கம்பெற்றுள்ளன.

எதிரணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இன உறவு தொடர்பாக எவ்வித கருத்துக்களும் முன்வைக்கப்படவில்லை. ஏனெனில் எதிரணியில் சிங்கள - பௌத்த இனவாதிகள் அங்கம் வகிக்கின்றனர். இதயசுத்தியுடன் கூடிய இன மீளிணக்கப்பாட்டை விரும்புவோர் இதற்காகச் சண்டையிட வேண்டியிருக்கும். வடக்கு கிழக்கு உட்பட மாகாண சபைகளுக்கு வழங்கப்படாது நீண்டகாலமாகத் தாமதிக்கப்படும் அதிகாரப் பரவலாக்கம் நாட்டின் இன மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான ஒரு தீர்வாகும்.

சிறிலங்காவில் தாராளவாதப் பொருளாதாரம் நிலைநிறுத்தப்பட வேண்டும். பொது முதலீடுகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். தனியார் துறை செயற்படுவதற்கு வழிவகுக்கப்பட வேண்டும். வர்த்தக தாராளவாதம் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு உந்துதல் அளிக்கப்பட வேண்டும். பொதுத் துறை மீளவும் சீர்திருத்தப்பட வேண்டும். பாதுகாப்புச் செலவீனம் குறைக்கப்பட வேண்டும். இவையனைத்தும் சிறிலங்காவின் வெளியுறவுக் கோட்பாட்டில் மாற்றம் ஏற்படுத்தப்படுவதன் மூலம் சீரமைக்கப்பட வேண்டும். அத்துடன் சிறிலங்காவானது மேற்குல நாடுகளுடனும் இந்தியாவுடனும் நல்லுறவைப் பேணுவதற்கான அழுத்தம் வழங்கப்பட வேண்டும்.

நடைமுறை ரீதியாக நோக்கில் சிறிலங்காவுக்கு பொருளாதார மற்றும் அரசியல் துறைகளில் சுதந்திரம் பேணப்பட வேண்டும். ஜனவரி 08ல் இடம்பெறவுள்ள தேர்தலில் எதிரணி வெற்றி பெறுமாயின் இது சிறிலங்காவின் அரசியலில் ஏற்படக் கூடிய வரவேற்கத்தக்க திசைதிருப்பமாகக் காணப்படும். ஆனால் இது சுதந்திர சிறிலங்காவைப் பெற்றுக் கொள்வதற்கான போராட்டத்தின் ஆரம்பமாக மட்டுமே அமையும்.

**நித்தியபாரதி**

www.puthinappalakai.net

# விளையாட்டுப் பையன்

MOBILE

## அன்ரொயிட் வசதியுடன்




கூகுள் நிறுவனம் அன்ரோயிட் இயங்கு தளத்தினைக் கொண்ட Android One எனும் ஸ்மார்ட் கைப்பேசியினை வடிவமைத்திருந்தது. இக் கைப்பேசியினை சில மாதங்க ளுக்கு முன்னர் ஐக்கிய இராச்சியத்தில் அறிமுகம் செய்திருந்தது. தற்போது இக்கைப்பேசி விற்பனையை விரிபடுத்த எண்ணியுள்ள கூகுள் நிறுவனம் இலங்கை உட்பட நேபால் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளிலும் அறிமுகம் செய்யவுள்ளது.

## சம்சுங் - Z1

சம்சுங் நிறுவனம் Samsung Z1 எனும் புதிய ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்யவுள்ளது. 4 அங்குல அளவுடையதும், 800 x 480 Pixel Resolution உடையதுமான தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன் 1.2GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Dual-Core Processor, பிரதான நினைவகமாக 512MB RAM என்பவற்றினைக் கொண்டுள்ளது. இவை தவிர 3.2 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்காக VGA கமெரா என்பவற்றினையும் உள்ளடக்கியுள்ளது.

## மூளையில் மாற்றம் – ஸ்மார்ட் கைப்பேசி



தற்போது அதிகரித்து வரும் ஸ்மார்ட் கைப்பேசி தொழில் நுட்பமானது மூளையின் செயற்பாடுகளில் மாற்றங் களை ஏற்படுத்து வதாக ஆய்வாளர்கள் தெரிவித்து ள்ளனர். சாதாரண கைப்பேசி களை பயன்படுத்துபவர் களையும், ஸ்மார்ட் தொழில் நுட்பத்தி னைக் கொண்ட கைப்பேசிகளை பயன்படுத்து பவர்களையும் வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் மூளைக்கும் கைகளிற்கும் நரம்புகளினூடாக தகவல் அனுப்பப்படும் விதம் குறித்து ஆராயப்பட்டது.

இவ் ஆய்வின் போது ஸ்மார்ட் கைப்பேசி பயன்படுத்தியவர்கள் பெருவிரல், நடுவிரல் என்பவற்றினை பொறியியல் ரீதியில் பயன்படுத்திய விதம் பிரம்மிக்கத்தக்கதாக இருந்ததாகவும், இது தொடர்பாக தாம் மிகவும் ஆச்சரியப்படுவதாகவும் சுவிட்ஸர்லாந்தின் சூரிச் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நரம்பியல் தகவலியலாளர் குறிப்பிட்டுள்ளார்.

INFOMATION TECHNOLOGY

## டுவிட்டரின் முடிவென்ன!! வழக்குத் தாக்கல்




உலகின் முன்னணி சமூக வலைத்தளங்களுள் ஒன்றான டுவிட்டரின் மீது வழக்கு தொடரப்போவதாக சோனி பிக்ஸர்ஸ் என்டர்டெயின்மென் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அண்மையில் சோனி பிக்ஸர்ஸ் நிறுவனத்தின் கணனிகள் சைபர் தாக்குதலுக்கு இலக்காகியதன் பின்னரே இந்த அச்சுறுத்தல் டுவிட்டருக்கு விடுக்கப்பட்டுள்ளது. அதாவது டுவிட்டர் தளத்தில் சோனி நிறுவனத்தின் சில மின்னஞ்சல் முகவரிகளின் ஸ்கிரீன் ஷாட்டினை Val Broeksmit என்பவர் @BikiniRobotArmy எனும் டுவிட்டர் பயனர் பெயரிலிருந்து வெளியிட்டுள்ளார். இவ்வாறு மின்னஞ்சல் முகரிகளை வெளியிட்டவர்களின் டுவிட்டர் கணக்குகளை தடை செய்யக்கோரிக்கை விடுத்துள்ள சோனி பிக்ஸர்ஸ், அவ்வாறு செய்ய தவறும் பட்சத்தில் வழக்கு தொடரப் போவதாக எச்சரித்துள்ளது.

## தொழினுட்ப வளர்ச்சியும் ஆபத்தே



தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனாக சாதாரண புத்தகங்களுக்கு பதிலாக E-book எனப்படும் இலத்திரனியல் புத்தகங்கள் அறிமுகமாகியுள்ளன. பல வழிகளில் நன்மைகளைத் தரும் இந்த E-book வாசிப்பு உடல் ஆரோக்கியத்தையும் பாதிக்கும் என அமெரிக்க வைத்தியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதாவது மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில் சாதாரண புத்தகங்களை வாசிப்பதை விடவும் வெளிச்சத்தினை வெளியிடக்கூடிய இலத்திரனியல் புத்தகங்களை தூங்கும் முன்பு வாசிப்பதால் தூக்கமும், உடல் ஆரோக்கியமும் கெடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதென கண்டறிந்துள்ளனர்.

OTHER

## தன்னியங்க கார்

கூகுள் நிறுவனம் தயாரித்துள்ள இந்த நவீன டெக்னாலஜி காரில் ஸ்டியரிங், ஆக்ஸிலேட்டர், பிரேக் போன்ற எந்த பாகமும் இல்லை, அதற்கு பதிலாக சாப்ட்வேர் மற்றும் சென்சார்களே மேற்கண்ட பாகங்களின் வேலைகள் அனைத்தையும் செய்கின்றது என்று கூகுள் நிறுவன்த்தின் கிரிஸ் உம்சன் என்பவர் தெரிவித்துள்ளார். வரும் ஜனவரி



1ஆம் தேதி இந்த காரை கலிபோர்னியாவில் உள்ள பிசியான சாலை ஒன்றில் சோதனை ஓட்டம் செய்ய கூகுள் முடிவு செய்துள்ளது.

## புதிய ரயில் இன்னும் 10 ஆண்டுகளில்



அமெரிக்காவில் உலகின் முதல் அதிவேக சூப்பர் டியூப் ரயில் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரிலிருந்து சான்பிரான்சிஸ்கோவுக்கு செல்ல தற்போது 12 மணி நேரம் ஆகிறது. ஆனால் இந்த புதிய சூப்பர் டியூப் ரயில் மூலம் 35 நிமிடங்களில் செல்லமுடியும் என்று கூறப்படுகிறது. அதாவது, மணிக்கு 1200 கிலோமீட்டர் வேகம் செல்லும் இந்த சூப்பர் டியூப் ரயிலை வடிவமைக்க உலகம் முழுவதிலுமிருந்து 100 க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப வல்லுநர்கள் இந்தப் பணியில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

## ஆய்வில் இந்தியா முதலிடம்

உலக நாடுகளில் இந்தியாவில் தான் இண்டர்நெட் மற்றும் ஸ்மார்ட் போன் மோகம் கொண்டவர்கள் அதிகம் என்று சமீபத்தில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வு முடிவு தெரிவிக்கின்றது. அமெரிக்காவைச் சேர்ந்த பி2எக்ஸ் கேர் சொல்யூஷன்ஸ் எனும் ஸ்மார்ட் போன் வாடிக்கையாளர்

சேவை நிறுவனம் நடத்திய இந்த ஆய்வில் 57 சதவீத இந்தியர்கள் ஸ்மார்ட் போன் அடிமையாக இருப்பது தெரிய வந்துள்ளது. மேலும் 57% இந்தியர்கள் தங்களால் ஸ்மார்ட்போன் இல்லாமல் வாழவே முடியாது என்று கருத்து தெரிவித்துள்ளனர். ஸ்மார்ட்போன் வைத்திருப்பவர்களில் 98% பேர் தூங்கும்போது படுக்கையின் அருகிலேயே தங்கள் ஸ்மார்ட்போனை வைத்துக்கொண்டுதான் தூங்குகிறார்கள் என்று கூறப்படுகிறது.

## வீடியோ கேம் – ஒலிம்பிக்கில்

ஒலிம்பிக்கில் வீடியோ ஹேமினை ஒரு போட்டியாக நடாத்த வேண்டும் என கடந்த ஜூலை மாதம் வரை Blizzard Entertainment நிறுவனத்தின் தலைமை அதிகாரிகளுள் ஒருவராக இருந்த Rob Pardo என்பவர் தெரிவித்துள்ளார். இவர் மேலும் குறிப்பிடுகையில் e-sports எனப்படும் வீடியோ ஹேம்களுக்கு உலகெங்கும் மில்லியன் கணக்கான ரசிகர்கள் இருக்கின்றனர் எனவும், அண்மையில் தென்கொரியாவின் Seoul பகுதியில் இடம்பெற்ற இவ்வாறான ஒரு போட்டியில் சுமார் 40,000 ரசிகர்களால் ஸ்டேடியம் நிரம்பியிருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

# குறுக்கெழுத்து புதிர் 041

முடிவுத் திகதி : 02.01.2015

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 19 | | | | 20 | | | ■ |
| | 2 | 3 | | ம் | | 4 | | 24 |
| 5 | | 22 | 23 | ■ | | 28 | 21 | |
| 6 | | | கா | 25 | ■ | | | |
| | ■ | ■ | | | 7 | | | |
| 8 | | | 9 | டு | | ■ | 10 தி | |
| 11 | | தி | | | 13 | | | 27 வு |
| 12 தி | | | | 26 | 14 | 15 | | |
| 16 | | | ■ | 17 | | ■ | 18 | |

### இடமிருந்து வலமாக

1. திருகோணமலையின் வரலாற்றுச் சின்னங்களில் ஒன்று.
2. அன்னையை இவ்வாறும் அழைப்பர்.
3. கோடாத இக்கட்டையை உருட்டி விளையாடலாம்.
4. இந்திய மாநிலம் மேற்குவங்கத்தின் முதல்வராக இருந்தவர். - திரும்பியுள்ளது.
5. மரத்தை சுற்றி அமைக்கும் மேடை
6. எருமையில் வரும் இவனைக் கண்டு அஞ்சாதோர் உண்டா?
7. பாண்டவர்களின் மூத்தவரை இவ்வாறும் அழைப்பர்.
8. முன்னைய காலத்து அரசர்கள் இதை நிறுவுவதில் பெரும் பங்காற்றியுள்ளார்கள்.
9. இது சிறிதாயினும் இதன் காரம் பெரிது.
10. விக்ரம் நடித்த படங்களில் ஒன்று.
11. பரமசிவனை இவ்வாறும் அழைப்பர்.
12. தமிழ்மூவாயிரம் என அழைக்கப்படுவது.

### மேலிருந்து கீழாக

1. பூச்சியத்தை கண்டு பிடித்த நாட்டினர்.
19. களைப்பின் நிமித்தம் இவரையும் அழைப்பர்.
20. 'அப்பகோப' களாக இருப்பவர்களை இவ்வாறு அழைக்கலாம்.
21. இது அதிகம் கொண்டவர்களுடன் பழகுதல் சிரமம்.
22. ரொடி, தாதாக்களை இவ்வாறும் அழைப்பர்.
23. தேயிலைத் தோட்டத்தின் மேற்பார்வையாளர். - திரும்பியுள்ளது. 4. தாய்க்குப் பின் ...........
24. மாறுபடுதலை இவ்வாறும் அழைப்பர்
25. குட்டு வின் ஒத்த ஓசை சொல் 'நெ..'
8. யுத்தகளத்தில் ஓடிய வெள்ளம்.
12. எட்டைக் கொண்டது.
26. தமிழ்நாட்டில் வெள்ளி, சின்ன என இரு வகைகளைக் கொண்டது.
27. பணம் இல்லாட்டியும் ஜமீந்தாருக்கு ......... குறையவில்லை. - குழம்பியுள்ளது.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு.*
*இல - 159ஏ,*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

## புதிர் 040 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வ | ண் | ணா | த் | 18 தி | ■ | 2 அ | 12 ல | 19 கு |
| 3 ரு | வா | ண் | டா | க் | ■ | ஜி | ■ | ச |
| ட | மா | ர | ம் | 4 வி | ப | த் | து | ன் |
| ம் | ■ | ■ | ■ | 5 ஜ | ன | 13 க | ரா | ஜ் |
| ■ | 6 ர் | ன | வ | ய | ■ | ப் | ■ | ■ |
| 7 ஆ | ல | ம | ர | ம் | ■ | 8 பு | 14 னா | னை |
| 9 வா | னோ | ட | ம் | 15 கா | ற் | றா | லை | ■ |
| 10 ர | ம் | ப | ம் | ற் | ■ | 11 ளை | து | 16 மா |
| ம் | ■ | 17 க | ன் | று | ■ | ■ | ன் | சு |

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

*செல்வி. வீ. தன்யா*
*32/4, மத்தியவீதி, உவர்மலை திருகோணமலை.*

*செல்வி. க. கயல்வாணி,*
*அன்புவலிபுரம், திருகோணமலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி
## சாய்ந்தது இயக்குனர் சிகரம்



தமிழ் திரை உலகின் தரமான படைப்புக்களுக்கு சொந்தக்காரன், தரணியில் தனக்கென்று ஓர் தனித்துவ திரையுலக பாதை வகுத்த திரையுலக மாமேதை இயக்குனர் சிகரம் பாலசந்தர் 23.12.2014 அன்று மாலை இயற்கை எய்தினார். சென்னை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பிரபல இயக்குநர் கே.பாலசந்தர் சிகிச்சை பலனின்றி தனது 84 வயதில் காலமாகிய செய்தி தமிழ் திரை உலகை கவலைகொள்ள செய்திருக்கிறது.

சோதனைகள் வந்தால் அடுத்த படத்தில் சாதனை படைக்கும் மாயாஜால மந்திரம் தெரிந்தவர் இந்த இயக்குனர் சிகரம் பாலச்சந்தர் அவர்கள். சாதனைகள் படைத்து தமிழ் திரையுலகை சர்வதேச தரத்துக்கு உயர்த்திய உத்தமர் இன்று நிரந்தரமாய் துயில் கொள்கிறார்.

இவரது உடல் ஊர்வலமாக புறப்பட்டு சென்னை பெசண்ட் நகர் மயானத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. வழி நடுவே ஏராளமான மக்கள் கூடி தங்கள் வருத்தங்களை தெரிவித்தனர். இறுதியாக மாலை 5.30 மணியளவில் அவரது உடல் எரிக்கப்பட்டது. இதில் கடைசி வரை நடிகர் ரஜினிகாந்த், பிரகாஷ்ராஜ், விவேக் இயக்குனர் அமீர், வசந்த் ஆகியோர் கண்ணீருடன் தங்கள் குருநாதரை வழி அனுப்பி வைத்தனர்.

தலைமுறைகள் தாண்டியும் வாழும் தமிழ் திரையுலகின் அடையாளமான பாலு மகேந்திரா,ராம நாராயணன்,எஸ்எஸ் ராஜேந்திரன் வரிசையில் இப்போது இயக்குனர் சிகரமும் 2014 ல் தமிழ் திரை வானிலிருந்து உதிர்ந்த ஓர் நட்சத்திரமாகிறது.

## சுத்தமில்லாத இந்தி நடிகர்கள்

கத்ரினா கைப்



இந்தி நாயகர்கள் மிகவும் மோசமான இயல்பு கொண்டவர்கள் எனவும், இரவு பூராகவும் மோசமாகக் குடிப்பதோடு காலையில் எழுந்து அப்படியே படப்பிடிப்புத்தளத்துக்கு வந்து விடுகின்றார்கள், படப்பிடிப்புக்கு வரும்போது குளிப்பது இல்லை. உடல்சுத்தம் சுகாதாரம் பேணுவதில்லை, வாசனைத திரவியங்களையும் பாவிப்பதில்லை என குறை கூறியிருக்கிறார். அதுமட்டுமல்லாமல், இந்த நடிகர்களுடன் சேர்ந்து காதல் காட்சிகளில் நெருக்கமாக நடிக்கும்போது ரொம்பவே சிரமமாகவுள்ளது. நாற்றம் அடிக்கிறது, வாந்தி வருகின்றது. இப்படியான ஹீரோக்களுடன் நடிக்கும்போது எவ்வளவு துன்பத்துக்கு உள்ளாகின்றேன் என்று கடவுளுக்குத்தான் தெரியும் என தனது உள்ளக்குமுறலை கொட்டித் தீர்த்திருக்கிறார் கத்ரினா கைப்.

## ஏன் அமெரிக்கா போறிங்க??

வதந்தியில் காஜல்



நடிகை காஜல் அகர்வால் அமெரிக்காவுக்கு சென்று முகத்தில் சில அறுவை சிகிச்சை செய்யவிருப்பதாக கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஊடகங்களில் வதந்தி பரவியது. இதுகுறித்து கருத்து தெரிவித்த காஜல் அகர்வால் "நான் இயற்கையிலேயே அழகுதான். அழகுக்காக சர்ஜரி செய்வதில் எனக்கு உடன்பாடில்லை. அப்படி ஒரு முட்டாள்தனத்தை நான் எப்பொழுதும் செய்ய மாட்டேன்" என்று தனது சமூக வலைத்தளத்தில் தெரிவித்துள்ளார்.

## சோலோவாக "என்னை அறிந்தால்"



தமிழகத்தை அடுத்து அதிக வசூல் தரும் ஆந்திரா மற்றும் தெலுங்கானாவில் ரிலீஸ் செய்யாமல் மற்ற மாநிலங்களில் மட்டும் ரிலீஸ் செய்தால் வசூல் பெரிய அளவில் பாதிக்கப்படும் என்பதால் "ஐ" படக்குழுவினர் செய்வதறியாது திகைத்து போயுள்ளனர். தங்களுக்கு போட்டியாக இருந்த ஒரே படமும் சிக்கலில் தவித்துக்கொண்டிருப்பதால் சோலோவாக கலெக்'னை அள்ளிவிடலாம் என என்னை அறிந்தால் படக்குழுவினர் உற்சாகத்தில் உள்ளனர். அஜீத் ரசிகர்களும் இதுகுறித்து உற்சாகமாக டுவிட்டரில் டுவிட் செய்துகொண்டு வருகின்றனர்.






## மாட்டினார் ஜெய்

நட்சத்திர விடுதி ஒன்றில், நிகழ்ச்சி ஒன்றில் கலந்துவிட்டு தன்காரில் வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்த போது, போலீசார் இடைமறித்து விசாரித்தபோது, ஜெய் குடித்திருப்பதும் வாகனத்தை செலுத்தி வந்துள்ளதும் தெரியவந்துள்ளது.

# சினிமுரசு

## திரை விமர்சனம்

## இயக்குனர் கே.எஸ்.ரவிகுமாரின் "லிங்கா" ரஜினி, அனுஷ்கா, சோனாக்ஷி நடிக்கும்



சோலையூர் என்ற கிராமத்தில் மிகப்பெரிய பஞ்சம் வருகிறது. அந்த பஞ்சத்தை போக்க ஊரில் ஒரு அணை கட்ட வேண்டும் என கலெக்டர் ரஜினி முடிவு செய்கிறார். ஆனால் ஆங்கிலேய அரசு அதற்கு அனுமதி கொடுக்கவில்லை. அதனால் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தானே சொந்த செலவில் அணை கட்டுகிறார். அணை கட்டுவதை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்று முடிவு செய்த ஆங்கிலேய அரசு உள்ளூர் பிரமுகர் ஆர்.சுந்தர்ராஜனை நயவஞ்சகமாக பயன்படுத்துகிறது. அணை கட்டினால் ஊரில் உள்ள நிலம் முழுவதும் முழ்கிவிடும் என்று சுந்தர்ராஜன் வதந்தியை பரப்புகிறார். இதனால் அதிர்ச்சி அடைந்த மக்களுக்கு ரஜினி தனது சொந்த நிலத்தை தருவதாக உறுதி கூறுகிறார்.

ஒரு வழியாக அணை கட்டி முடித்து திறக்கும் தருவாயில் அணையை திறந்து வைக்க வேண்டுமென்றால், ரஜினியிடம் உள்ள சொத்து முழுவதையும் தரவேண்டும் என்று ஆங்கிலேய அதிகாரி கேட்கிறார். ரஜினியும் சொத்து முழுவதையும் தருகிறார். தங்களுக்கு கொடுத்த நிலங்களையும் சேர்த்து ரஜினி ஆங்கிலேய அதிகாரிக்கு கொடுத்துவிட்டதாக மீண்டும் ஒரு வதந்தி பரவ, கிராம மக்கள் ரஜினி மீது வெறுப்படைந்து ரஜினியை ஊரில் இருந்தே விரட்டி விடுகின்றனர். அவர் கட்டிய கோவிலையும் மூடி விடுகின்றனர்.

இந்நிலையில் அணை உறுதியாக இருக்கின்றதா? என்று பரிசோதிக்க ஒரு குழுவை அனுப்புகிறது ஆங்கிலேய அரசு. குழுவை சோதனை செய்யும் தலைமை எஞ்சினியரை மர்ம கும்பல் ஒன்று கொலை செய்துவிடுகிறது. இறப்பதற்கு முன் அந்த எஞ்சினியர் கோவிலை திறந்நால்தான் இந்த ஊரை அழிவில் இருந்து காப்பாற்ற முடியும் என்று கூறிவிட்டு இறந்துவிடுகிறார். கோவிலை திறப்பதற்காக ரஜினியின் வாரிசை ஊர் மக்கள் தேடுகிறார்கள். சென்னையில் சந்தானத்துடன் சிறுசிறு திருட்டுகள் செய்து வரும் ரஜினியை தேடி கண்டுபிடித்து ஊருக்கு அழைத்து செல்கிறார் அனுஷ்கா. அங்கு தன்னுடைய தாத்தா ரஜினியின் கதையை கேட்டு அணையை மீண்டும் திறக்க ரஜினி எடுக்கும் முயற்சிகள்தான் மீதிக்கதை.

நீண்ட இடைவெளிக்கு பின்னர் ரஜினியை பார்த்தாலும், அதே விறுவிறுப்பு, அதே ஸ்டைல், அதே சுறுசுறுப்பு. அனுஷ்கா, சோனக்ஷி சின்ஹா இருவருமே பாடல்களுக்கு மட்டும் உதவுகிறார்கள். சந்தானம், மற்றும் கருணாகரன் கூட்டணி காமெடியில் பின்னி பெடல் எடுக்கிறது. தெளிவான திரைக்கதை. ஆங்காங்கே திடீர் திருப்பங்கள் என அசத்தியுள்ளார் கே.எஸ்.ரவிகுமார். பாடல்களும், படமாக்கப்பட்ட விதமும் முந்தைய ரஜினி படங்களை ஞாபகப்படுத்துகிறது.

## சினிமா கிசு கிசு



- சூரி சத்தமில்லாமல் ஒரு சாதனையை செய்து முடித்து விட்டார். சூரி நடிப்பில் விரைவில் வெளிவரவிருக்கும் படமான வெள்ளக்காரத்துரை இவரது 50-வது படமாகும்.
- பிரபல நகைச்சுவை நடிகரும் இசையமைப்பாளர் கங்கை அமரன் மகனுமாகிய பிரேம்ஜி அமரனின் டுவிட்டர் பக்கத்தில் விஜய் ரசிகர் ஒருவர் அருவருப்பான வார்த்தைகளால் கமெண்ட் போட்டதால், பிரேம்ஜி அமரன் சைபர் க்ரைமில் புகார் கொடுத்துள்ளதாக கூறப்படுகிறது.
- ரஜினிக்கு, ஜெயபிரதா தான் இயக்கும் உயிரே உயிரே ட்ரைலரை போட்டுக் காண்பிக்க அவரும், சித்துவின் நடிப்பை பாராட்ட, அப்படியே நீங்கள் இதில் ஒரு சின்ன காட்சியில் நடித்துக் கொடுத்தால் என்ன என்று, ஜெயப்பிரதா தன் நோக்கத்தை கொட்டியிருக்கிறார்.
- ஆர்யா தமிழ் சினிமாவில் உள்ள அனைத்து ஹீரோயின்களுக்கும் பேவரட். தற்போது ராஜேஷ் இயக்கத்தில் தமன்னாவுடன் நடித்து வருகிறார். ஆனால், தமன்னாவை இன் னும் தன் வீட்டிற்கு அழைக்கவில்லையாம். எப்போது ஆர்யா தன்னை விருந்திற்கு கூப்பிடுவார் என ஏக்கத்துடன் காத்திருக்கிறாராம் தமன்னா.
- தல ரசிகர்களை சந்தோஷத்தில் ஆழ்த்தும் விதமாக படத்தின் இசை வெளியீடு வரும் 31ம் தேதி நள்ளிரவு படத்தின் பாடல்கள் வெளிவரும் என படக்குழு தெரிவித்துள்ளது.
- பிரபல டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா தனது பாகிஸ்தான் கணவர் சோயீப் மாலிக்கை விவாகரத்து செய்துவிட்டு தெலுங்கு நடிகர் ராம்சரண் தேஜாவை மறுமணம் செய்யப்போவதாக வதந்திகள் பரவி வருகிறது.
- கத்தி பட கதை திருடப்பட்டதாக தொடரப்பட்ட வழக்கில் இயக்குனர் ஏ.ஆர்.முருகதாஸ், நடிகர் விஜய் உள்பட 5 பேர் அடுத்த மாதம் 23-ம் திகதி நேரில் கோர்ட்டில் ஆஜராக வேண்டும் என்று தஞ்சை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.
- கே.பி.யின் மற்றொரு சிஷ்யரான ரஜினி வந்து மரியாதை செலுத்தி சென்றுள்ளார். 25.12.2014 நடப்பதாக இருந்த கே.பியின் இறுதி சடங்கு 24.12.2014 நடந்ததால் வெளிநாட்டில் இருக்கும் கமலால் இறுதி ஊர்வலத்தில் கூட கலந்து கொள்ள முடியவில்லை என்பது வருத்தம் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல் - 33

# அநாவசிய சோலிகளை தவிர்ப்போமா?

(வி.என்.சந்திரகாந்தி)



நாம் நல்லவர்கள் தான். அநாவசியமான சோலிகளை விலைகொடுத்து வாங்குபவர்களும் அல்ல. ஆனால் எமது கண்களை கட்டிவிட்டு சில சோலிகள் எம்மை பாதாளத்தில் இறக்கி விடுவதுமுண்டு. அது பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டியது எமது கடமையல்லவா?

'தவளை தன் வாயால் கெடும்' என்பது பழமொழி. தேவையில்லாத சோலிகள் எம்மை வந்து சேர்வதற்கு காரணம் எமது வாய்தான். மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற பஞ்சேந்திரியங்களில் வாய் தவிர்ந்த ஏனையவை நான்கும் பெரிதாக எம்மை ஆபத்தில் மாட்டிவிடமாட்டா. ஆனால் வாய் பற்றி நாம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

எமது பேச்சை எவ்வளவுக்கெவ்வளவு குறைத்துக் கொள்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அனாவசிய சோலிகளிலிருந்தும் நாம் விலகியிருக்க முடியும். நாம் பேசுகின்றோம் என்னும் போது ஒன்றில் மற்றவர்களைப் பற்றி பேசுகின்றோம். அல்லது நாம் சம்பந்தப்பட்ட சம்பந்தப்படாத விடயங்களைப் பற்றி பேசுகின்றோம். எமது கருத்துக்கள் எதிர் வினைகளை உண்டுபண்ணும் என்பது பற்றி நாம் சிந்திப்பதில்லை. ஆனால் எமது பேச்சுக்கள் ஒவ்வொன்றுமே எதிர் வினைகளை உண்டு பண்ணுகின்றன. அதனால் அநாவசிய சோலிகளுக்கு உட்படுவதனை தவிர்க்க முடியாதுள்ளோம்.

அடுத்து நாம் பழகும் உறவு வட்டம் மற்றும் நட்பு வட்டம் பற்றிய சரியான புரிந்துணர்வின்மை காரணமாக ஏதாவது செய்யப்போய் சோலியில் மாட்டிவிடும் சந்தர்ப்பங்கள் பற்றியும் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். உறவினரோ நண்பரோ, ஆணோ பெண்ணோ எவருடனாயினும் ஒரு வரையறையை ஏற்படுத்திக் கொண்டு பழக வேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பது பழமொழி. அமிர்தமென்றால் மருந்து. உயிரைக் காக்க வேண்டிய மருந்து கூட அளவுக்கு மிஞ்சினால் நஞ்சாக போய்விடும் என்பது இதன் பொருள்.

நாம் மற்றவர்களுடன் பழகுகின்றோம் என்று சொன்னால் அவர்களை நூற்றுக்கு நூறு வீதம் புரிந்து கொண்டு பழகுகின்றோம் என்று அர்த்தமாகாது. நாம் யாருக்கும் எம்மை முற்று முழுதாக காட்டிக் கொள்வதில்லை. அதே போன்று மற்றவர்களும் தம்மை எமக்கு முற்று முழுதாக காட்டிக் கொள்வதில்லை. சுமாராக ஒரு இருபது வீதம் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டதனால் ஏற்பட்ட உறவுமுறை தான் எம்மை இழுத்து வைத்திருக்கின்றது. அதற்குள் ஒருவர் மற்றவரை தலை மீது தூக்கிவைத்து கொண்டாடுவர். அவரல்லவோ எனது நண்பர் என்று பாராட்டுவதுடன் பல இரகசியங்களையும் பரிமாறிக்கொள்வர். அந்த இருபது வீத எல்லைக்கு அப்பால் எமது பாதையும் எமது நண்பர் பாதையும் எதிரும் புதிருமாகக் கூட இருக்கலாம். அங்கு தான் விரிசல் ஏற்படுவதும் ஒருவருக்கொருவர் தீங்கிழைப்பதும் நிகழ்கின்றது. எனது நண்பன் அல்லது எனது நண்பி இப்படி செய்வார் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை என்ற ஞானம், காலம் கடந்து தான் ஏற்படுகின்றது! அந்த வகையில் ஏற்படக்கூடிய சோலிகளை நாம் எமது புத்தி சாதுரியத்தால் தவிர்க்க வேண்டும்.

அடுத்து எமக்கு உண்டாகும் அளவுக்கதிகமான கோபம் எம்மை பல சோலிகளில் மாட்டிவிடுவதுண்டு. எமது கோபத்தை நாம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். கோபம் காரணமாகவே அடிபிடி, சண்டைசச்சரவு, குடிவெறி, கொலைகொள்ளை எல்லாமே ஏற்படுகின்றன. ஈற்றில் இவை எம்மை சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தி சிறையிலும் மாட்டி விடும். சிறையில் இருந்து கொண்டு நாம் ஏன் இந் நிலைக்கு ஆளானோம் என்று வருந்துவதைக் காட்டிலும் முற்கூட்டியே அவதானத்துடன் நடப்பது நன்றல்லவா.?

எமக்கு ஏன் கோபம் ஏற்படுகின்றது.? எமது மனைவி, பிள்ளைகளை யாராவது சீண்டினால் எமது சொத்துக்களை அபகரித்தால், எமது பதவிக்கு வேட்டு வைத்தால், எமது நற்பெயருக்கு களங்கம் கற்பித்தால் கட்டாயமாக எமக்கு கோபம் ஏற்படுகின்றது. நான் என்பது அகங்காரம். எனது என்பது மமகாரம். அதாவது என்னுடையது என்ற நினைப்பே மமகாரம். நாம் எவரும் துறவிகளல்ல. எனவே என்னுடையவை என்று நாம் எண்ணுபவைகளில் எமக்கு இந்த நடைமுறை வாழ்க்கையில் பற்று அதிகம் இருக்கவே செய்யும். எனவே அவற்றையிட்டு விழிப்பாக இருக்க வேண்டிய கடமை எமக்கு உண்டு. எமது உறவுகள் என்று எடுத்தால் மனைவி, பிள்ளைகளே எமக்கு பிரதானமானவர்கள். அவர்களுடன் இணைந்து குடும்பம் நடத்துவதன் மூலமும் அவர்களுக்கு வேண்டியவற்றை நிறைவேற்றுவதன் மூலமும் எம்மேல் பிரியமுள்ளவராக பராமரிப்பதன் மூலமும் எவரது தலையீடும் இன்றி சிறப்புற குடும்பம் நடத்த முடியும்.

இந் நாட்களில் சொத்துக்களை காப்பாற்றுவதில் மிகுந்த சிரமங்களை எதிர் கொள்ள வேண்டி உள்ளது. தனியாருக்கு தகுந்த பொறுப்பு இன்றி கொடுக்கல் வாங்கல் செய்வது பெரும் சோலிகளில் மாட்டிவிடும். அதற்கு மேலாக நிதி நிறுவனங்கள் பொது மக்களின் சொத்தை எப்படி அபகரிக்கலாம் என்று திட்டம் தீட்டி செயற்படுகின்றன. ஒரு தடவை அவர்களிடம் சிக்கி விட்டால் எந்த சட்டம் வாயிலாகவும் எமது சொத்தை மீட்க முடியாது. நிதி நிறுவனங்கள் "லீசிங்" என்று கூறி வாகன கொள்வனவுக்கு பெரும் பணம் கொடுக்கின்றன. ஆனால் வட்டியையும் தவணை பணத்தையும் கட்ட முடியாமல் மக்கள் திண்டாடுவது பற்றி அவர்களுக்கு கவலை இல்லை. உங்கள் வாகனத்தை பறிமுதல் செய்து ஏலத்தில் விடுவதன் மூலம் அவர்கள் பணத்தை கறந்து விடுவார்கள். சோலிகளில் மாட்டுப்பட வேண்டியவர்கள் நீங்களே.

இனி எமது பதவிக்கு வருவாய்க்கு நற்பெயருக்கு கெடுதல் செய்தால் எமக்கு தீராத கோபம் ஏற்படும். எனவே தொழில் புரியும் இடங்களில் மிகுந்த அவதானத்துடன் இருத்தல் எமது கடமையாகும். எம்முடன் பணி புரிபவர்களுடன் அளவாக உரையாடுதல், இரகசியங்களை சிறப்பாக பேணல் கட்டாயமாகும். அனாவசியமான பிரச்சனைகளிலிருந்து தற்காத்துக் கொள்ள இதுவே வழி.

அடுத்து எமக்கு பிரச்சனைகள் ஏற்பட காரணமாக இருக்க கூடிய அதி முக்கிய விடயம் ஒன்று உள்ளது. அது யாதெனில் மற்றவர்கள் எம்மை தமது இலாபத்திற்காக பயன்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பம் ஆகும்.

ஒரு உதாரணத்திற்கு உறவுகளுக்குள் ஒரு நகர்வை அவதானிப்போம். ஒரு பெண் பிள்ளைக்கு விவாகம் தடைப்படுகின்றது. அதற்கு காரணம் யாதென்ற பிரச்சனை வந்தால் அது இன்னாருக்கு விருப்பமில்லை என்று பழி எம் தலை மேல் போடப்படுகின்றது. எமக்கோ விடிந்தது விடியாதது தெரியாது. ஆத்திரமுற்ற யாராவது உறவினர் எமக்கு இரண்டு சாத்து சாத்தியும் விடக்கூடும்.

அடுத்த பிரச்சனை யாதெனில் நாம் பல்வேறு இனங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அவர்கள் எமது மத கலாசாரங்களிலிருந்து வேறுபட்டவர்கள். அவர்களுடன் போட்டி போடாது ஒரு அன்னியோன்னிய உறவை பேண வேண்டியது எமது கடமை. சில சமயங்களில் அவர்களுடன் எப்படி பழகினால் சோலிகளை தவிர்க்கலாம் என்பதையே புரிந்து கொள்ள முடியாமல் இருக்கும்.

அரசியல் மட்டத்தில் இன்று ஆளுங்கட்சியும் எதிரணியும் போட்டிபோடும் நிலை ஒன்று உருவாகியுள்ளது. நாம் நடுநிலை வகிக்கின்றோம் என்றே வைத்துக் கொள்வோம். ஆளும் கட்சி வென்றால் எதிரணியும், எதிரணி வென்றால் ஆளுங்கட்சியும் எமது மக்களை நையப்புடைக்க இடம் உண்டு அல்லவா?

எனவே நாமாக தேடி செல்லாவிட்டாலும் கூட சோலிகள் எம்மை தேடி வரலாம் என்பதை உணர்ந்து எம் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டியது காலத்தின் அவசியமாகும்.



# ஒரு மனிதன்... ஒரு வாழ்வு... அவன் மனசாட்சி...

## சாதாரணமானவனின் மனது

சஞ்சயன் செல்வமாணிக்கம்

இன்று எனக்கு நன்கு அறிமுகமான ஒரு நண்பரை சந்திப்பதாய் ஒப்பந்தம் இருந்ததை கைத்தொலைபேசி சிணுங்கியபடியே அறிவித்தது. மனதில் அதைக் குறித்துக்கொண்டேன். அவருக்கு பின் மதியவேளை அவரை சந்திப்பதாகவும், நாம் ஒஸ்லோவின் மேற்குப் பகுதியில் உள்ள புறநகர் ஒன்றில் உள்ள ஒரு கோப்பிக் கடையில் சந்திப்போம் என்றும் குறும்செய்தி அனுப்பினேன். "சரி" என்று பதில் குறுஞ்செய்தி வந்தது.

கோப்பிக்கடைக்கு வெளியே நண்பர் உட்கார்ந்திருந்தார். அவரருகே உட்கார்ந்துகொண்டேன். பரிமாறும் அற்புத அழகியொருத்தி என்ன வேண்டும் என்றாள். ஒரு தேத்தண்ணி என்றேன். என்ன தேத்தண்ணி என்றுவிட்டு மாம்பழம், தோடம்பழம், இன்னும் பல பெயர்களைக் கூறி இதில் எது வேண்டும் என்றபடியே புருவத்தை உயர்த்தினாள், மாம்பழம் எனக்குப் பிடிக்கும் என்பதால் மாம்பழம் என்றேன். சற்றுநேரத்தில் மாம்பழத்தின் சுவையுடைய தேனீர் வந்து. நண்பர் ஆப்பிள் கேக், கோப்பி வாங்கினார்.

நண்பருக்கு 65 வயதிருக்கும். அவர் ஒரு முன்னைநாள் வைத்தியர். ஐ.நா வின் வைத்தியப்பிரிவினூடாக பல நாடுகளுக்குச் சென்று தொழில் புரிந்தவர். ஒஸ்லோவின் பிரபல வைத்தியராக இருந்தவர். விவாகரத்தின் பின் உக்ரைன் நாட்டு அழகியொருத்தியில் ஆசைப்பட்டு அண்மையில் அவளை திருமணம் செய்தவர்.

எனது நண்பர் பெண்கள் என்றால் அற்புதமாய் ரசிக்கும் கலைப்பண்புடையவர். இவரது புதிய மனைவிக்கும் இவருக்கும் 20 வயதிலும் அதிக வயது வேறுபாடு உண்டு. வைத்தியரின் புதிய மனைவி உண்மையிலேயே அழகானவர். நான் அவரைக் கண்டிருக்கிறேன். அவருக்குப் பின்னே நாம் நடந்தாலோ அல்லது அவரை நோக்கி நாம் நடந்தாலோ எமக்கு இதயநோய் வருமளவுக்கு அவர் அழகானவர். அவரும் ஒரு வைத்தியர்.

நாம் இருவரும் இளம் சூட்டினை அனுவித்துக்கொண்டே உரையாடிக்கொண்டிருந்தோம். இருவரின் வாழ்க்கையும் இருவருக்கும் தெரியும். நாம் எதையும் வெளிப்படையாகப் பேசிக்கொள்பவர்கள். வாழ்க்கைபற்றி பேச்சுத்திரும்பியது.

தற்போது தனக்கும் புதிய மனைவிக்கும் இடையில் ஒரு பிரச்சனை வந்திருக்கிறது என்றார் நண்பர். அவரே தொடர்ந்தார். நான் அவளைவிட சற்று வயதானவன் என்ற போது நான் வேண்டுமென்றே செருமியபடியே ஆம்.. ஆம் நீங்கள் சற்று வயதானவர்தான் அவருடன் ஒப்பிடும்போது என்றேன். எனது கிண்டலை புரிந்துகொண்டு சிரித்தார். நானும் சிரித்தேன். நான் முன்பைப்போல் உசாராக இல்லை என்று கூறிவிட்டு ஆப்பிள் கேக்கை ஒரு கடி கடித்தார். பின்பு கோப்பியை வாயில் வைத்து உறிஞ்சினார். அவர் ஏதோ வில்லங்கமான விடயத்தை கதைக்கத்தொடங்குகிறார் என்று நினைத்த எனக்கு அவரின் ஆறுதலான நடவடிக்கைகள் பலத்த எரிச்சலைத் தந்தன.

காய்ந்திருந்த தனது உதட்டை நாக்கால் நனைத்தபடியே தொடர்ந்தார். நாம் ஒன்றாக படுக்கையறையில் இருக்கும் போதுதான் பிரச்சனைவருகிறது என்றார். ஆஹா விடயம் சூடுபிடிக்கிறதே என்று நினைத்தபடியே முகத்தை படு சீரியசாக வைத்திருந்தபடியே "ம்.. ம்" என்றேன்.

மனிதர் மீண்டும் அப்பிள் கேக்கை உண்பதில் தீவிரமாகிவிட்டார். கண்ணை மூடி ம்.. ம்.. ம் என்று ஆப்பிள் கேக்கினை ரசித்து ருசித்தார். எனக்கு இருப்புக்கொள்ள முடியாதிருந்தது. நானும் தேனீரை ரசித்து குடிப்பது போல் பாவ்லா காட்டினேன். அவராகவே தொடரட்டும் என்றே நினைத்தேன். மனிதர் இப்போது கோப்பியை கண்ணை மூடி ரசித்துக்கொண்டிருந்தார். மெதுவாய் செருமினேன். நண்பர் அதைக் கண்டுகொண்டதாய் தெரியவில்லை. மீண்டும் ஆப்பிள் கேக், கோப்பி என்று நிமிடங்கள் யுகங்களாய் கடந்துகொண்டிருந்தது. இப்போது ஆப்பிள் கேக் முடிந்திருக்கிறது.



சன்சயாஆன் என்றார். எனது பெயரை அவர் இப்படித்தான் இரண்டு வருடங்களாக அழைக்கிறார். என் பெயர் சன்சயாஆன் இல்லை, சஞ்சயன் என்றேன். நீயும் இரண்டு ஆண்டுகளாக திருத்துகிறாய் நானும் முயற்சிக்கிறேன், ஆனாலும் உனது பெயரை சரியாக உச்சரிக்கமுடியவில்லை என்றார்.

எனது பொறுமை காற்றில் ஆடிக்கொண்டிருக்க இருப்புக்கொள்ளாமல் அது சரி மனைவிக்கும் உனக்கும் படுக்கையறையில் என்ன பிரச்சனை என்றேன். "பொறு" என்று கூறிய படியே கதிரையை எனக்கு அருகே இழுத்துப்போட்டுக்கொண்டார். என்னை நோக்கிக் குனிந்து மெதுவான குரலில், அவளுக்கு இப்போதெல்லாம் படுக்கையறையில் கோபம் வருகிறது என்றார். எனக்கு இரத்தம் சற்று சூடாக ஆரம்பித்தது.

பெண்கள் என்றால் அவர்களை பூப்போன்று கையாளவேண்டும் என்றேன் நான். அவரோ அதைக் கவனிக்காது கோப்பியை வாயில் வைத்து உறுஞ்சிக்கொண்டிருந்தார். இப்போது கோப்பிக் கோப்பை காலியாகி இருந்தது. அவரே தொடர்ந்தார். வயதாகிவிட்டதால் நான் மிக விரைவில் தூங்கிவிடுகிறேன் என்று அவர் கூறியபோது எனக்கு கொடுப்புக்குள் சிரிப்பு வந்தது. அவரைப்பார்த்து கண்ணடித்தடிபடியே "அப்படியென்றால் தவறு உன்னுடையது தான். உன் மனைவிக்கு கோபம்வராவிட்டால் தான் தவறு" என்றேன். மனிதர் கடுப்பாகிவிட்டார். "நீ அவளுக்கு சார்பாகப் பேசுகிறாய் என்றார்". "ஆம், மனைவி கோபப்படுவது நியாயம் தானே" என்றேன்.

அதற்கு அவர் "நான் தூங்கியதும் எனது குறட்டைச் சத்தம் தாங்கமுடியாததாய் இருப்பதாகவும், அவளுக்கு நித்திரை கொள்ளவதற்கு முடியாதிருப்பதால், அவளுக்கு பெரும் கோபம் வருகிறது என்றும் சொன்னார்.

எனது காதுக்குள் "சப்பாஆஆ" என்று ஒரு சத்தம் கேட்டது.

உங்களுக்கும் கேட்டிருக்குமே அந்த சத்தம்.

**இந்நாளும் நன்னாளாய் அமையட்டும் !!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு நடப்பு

# நல்லா தானே போயிட்டிருந்திச்சு யார் கண்ணு பட்டதோ

எமது நாட்டின் மூவின மக்களை அடுத்து நான்காவது இனமாக இருப்பவர்கள் பறங்கியர். அவர்கள் சுபாவத்தில் மிக அமைதியானவர்கள். எமது நாட்டை அன்று ஆட்சி செய்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரித்தானியர் ஆகியோரின் வழியில் வந்தவர்களே இந்த பறங்கி இனத்தவர்கள் என கூறப்படுகிறது.

மேலும் எமது நாட்டில் வாழும் பறங்கியர்கள் பல பிரதேசங்களை தத்தமது பிறப்பிடமாகக் கொண்டுள்ளதால் அங்குள்ள மொழிகளையும், கலாச்சாரங்களையும் பின்பற்றி வந்துள்ளனர். சிங்களப் பகுதிகளில் வாழ்பவர்களில் பலர் சிங்கள இனத்தவர்களையும், தமிழ் பகுதிகளில் வாழ்பவர்கள் தமிழ் இனத்தவர்களையும் விவாகம் செய்துள்ளனர்.

மொழியை தங்கள் தாய் மொழியாகக் கொண்டாலும் இன்று அவர்களின் பிள்ளைகள் சிங்களப் மற்றும் தமிழ் பாடசாலைகளில் கல்வி கற்றுவருகின்றனர். அவ்வாறே அவர்கள் வாழும் பிரதேச சூழலுக்கேற்ப கல்வி, கலை, கலாச்சாரம் அத்தனையும் இன்று மாறிவிட்டது.

'ஸ்மித் அடெம்ஸ்' அம்பாறை மாவட்டத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். அவர் பறங்கியராக இருந்தாலும் தனது ஆரம்பகல்வி தொடக்கம் உயர்கல்வி வரை சிங்கள மொழி மூலம் கற்றவர். அது மாத்திரமல்ல அவரின் பிள்ளைகள் அனைவரும் கூட சிங்கள மொழி மூலமே கல்வி கற்றவர்கள்.

அடெம்ஸ் என்பது அவருடைய குடும்ப பெயராக இருப்பினும் 'ஸ்மித்' என்றே சகலரும் அழைப்பார்கள். குறிப்பாக ஸ்மித் அம்பாறை மாவட்டத்தில் சகலராலும் அன்பாக நேசிக்கப்பட்ட ஒருவர். பாடசாலைக் காலத்திலும் அதன் பின்னரும் அம் மாட்டத்தில் சிறந்ததொரு உதைப்பந்தாட்ட வீரர் ஆகும்.

சிறந்த உதைப்பந்தாட்ட வீரரான ஸ்மித் அங்கு பல விளையாட்டு கழகங்களிடையில் நடாத்தப்பட்ட போட்டிகளில் சிறப்பாக பங்குபற்றி பல வெற்றிக் கிண்ணக் கோப்பைகளை பெற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. அன்று அவருடைய முக்கிய பொழுது போக்கு உதைப்பந்தாட்டமே. அவரைத் தொடர்ந்து அவரின் இரு மகன்மாரும் அம்பாறை மாவட்டத்தில் சிறந்த உதைப்பந்தாட்ட வீரர்களாக திகழ்ந்தார்கள்.

இனப் பிரச்சினை உருவாகிய காலத்தில் கூட அந்த குடும்பத்தாருக்கு எந்தவித இடையூறும் அயலவர்களால் ஏற்படவில்லை. அக்குடும்பத்தின் நாளாந்த நடடிக்கைகள் அனைத்தும் சிங்கள கலாச்சாரத்தையே ஒத்து இருந்தது. அவர்கள் பின்பற்றும் சமய நடவடிக்கைகளில் மாத்திரம் சற்று வித்தியாசம் இருந்தது. காரணம் ஸ்மித் குடும்பம் கடும் கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவர்கள்.

அவருடைய வாழ்நாளில் கூடிய காலப் பகுதியை மத்திய கிழக்கு நாடுகளிலே தொழிலின் நிமித்தம் கழிக்க வேண்டி இருந்தது. தான் உழைத்துப் பெற்ற ஊதியத்தைக் கொண்டு நம் நாட்டில் தன்னால் இயன்ற வகையில் சொத்துக்களை சேர்த்துக் கொள்ள அவர் தவறவில்லை.

இன்று கூட அவரின் பிள்ளைகளில் சிலர் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். ஏன் அவரின் உறவினர்கள் கூட பலர் ஐரோப்பிய நாடுகளில் பிரஜா உரிமை கொண்டவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர் எவரிடமும் எந்த உதவியையும் நாடிச் செல்ல விரும்பாதவர். 'தன்கையே தனக்குதவி' என்று வாழும் கொள்கையை கொண்டவர்.

வீடு வாசல்கள் மாத்திரமல்ல வாகனங்கள் கூட அவரிடமுண்டு. பிள்ளைகள் ளிநாடுகள் சென்றபின் அவர் ஓய்வு பெற்று வீட்டிலே இருந்து வருகிறார். தனது போக்குவரத்திற்கும் நாளாந்த செலவுக்குமாக அவரிடம் சிவப்பு நிற முச்சக்கர வண்டியொன்று உண்டு. அதில் தானே சாரதியாகவும் செயல்பட்டு வருகிறார்.

சகல குடும்ப நடவடிக்கைகளில் இருந்து முற்றாக விடுபட்ட அவரின் இன்றைய முக்கிய பொழுதுபோக்கு அரசியல் பேசுவதே. காலையில் எழும்புவது மு.ப10 க்குப் பின்னரே. இரவில் தூக்கத்திற்கு செல்வது பி.ப10 க்குப் பின்னரே.

பொது விடயங்களைப் பற்றியும், அரசியலைப் பற்றியும் அவர் நன்கு அறிந்து வைத்துள்ளதால் அப்பகுதியிலுள்ள அன்றைய நாட்டு நடப்புக்களை அறிய அவரை சூழ்ந்து கொள்வது வழமை. காலை 10 மணிக்கு அப்பகுதியிலுள்ள அண்ணாத்துரை என்பவரின் கடையடிக்கு வந்துவிடுவார். ஸ்மித்தின் நல்ல நண்பனே அந்த அண்ணாத்துரை. முச்சக்கர வண்டி அக்கடைக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டதை கண்டதும் பலர் ஸ்மித்தை சுற்றி வளைத்துக் கொள்வார்கள். அண்ணாத்துரையின் கடையில் ஒரு பிளேன்ரீயை அருந்திக் கொண்டு அன்றைய நாட்டு நடப்பை எடுத்து விடுவார். மேலும் அவரிடம் மொழி தொடர்பாக எந்தக் குறைபாடுகளும் இல்லாததால் உள்நாட்டு, ளிநாட்டு ஊடகச் செய்திகள் அனைத்தும் அவருக்கு அத்துப்படி.

ஸ்மித் பல ளிநாடுகளில் சேவையாற்றிய படியால் பல மொழிகளை நன்கு புரிந்து வைத்துள்ளதால், அவர் தெரிந்து வைத்திருக்கும் உலகப் புதினங்களுக்கு அளவே இல்லை. சுருங்க கூறின் அவர் ஒரு நடமாடும் ஊடகம் என்றே கூறலாம். உள்நாட்டு, வெளிநாட்டு அத்தனை நாட்டு நடப்புகளையும் மனுஷன் சீரற்ற காலங்களில் வான்கதவுகள் திறக்கப்பட்ட குளம் போல் பொழிந்து தள்ளுவார். அது மாத்திரமல்ல அவர் நல்ல அறிவாளியும் கூட. அந்தக் கடைக்காரரான அண்ணாத்துரை ஸ்மித்தின் வலது கையாக செயல்படுவார். அண்ணாத்துரையை ஊரார் ஸ்மித்தின் பிரத்தியேக உதவியாளர் என அழைப்பார்கள்.

இரவு பகல் பார்க்காது குறிப்பாக மரணச்சடங்குகள், திருமணச்சடங்குகள் ஆகியவற்றில் கலந்து கொண்டு தன்னால் இயன்ற வகையில் பிறருக்கு உதவுவார். ஏன்னையோர் பொது மக்களிடம் கூடிய பணத்தை கரந்து வந்தாலும், தனது முச்சக்கர வண்டியில் வாடகைக்கு பயணிப்பவர்களிடமிருந்து மிக சொற்ப பணத்தையே அறவிடுபவர் ஸ்மித்.

ஒரு தடவை அவரின் மனைவியின் தாய்மாமனார் ஒருவர் தனது குடும்பத்தாருடன் கனடாவில் இருந்து இலங்கை வந்திருந்த சமயம் ஸ்மித்தின் வீட்டுக்கும் சென்றிருந்தார்கள். ஓரிரு நாட்கள் அங்கு தங்கி நின்ற வேளையில் ஸ்மித் மிகவும் தடபுடலாக அவர்களை கவனித்திருந்தார்.

கனடாவிலிருந்து வந்தால் இனி கேட்கவா வேண்டும்? அவர்களை கவனிக்க வேண்டாமா? விலையுயர்ந்த உணவு வகைகளை அவர்களுக்காக செலவழித்த வகையில் ரூபா 60,000 அவரின் பாதீட்டில் துண்டு விழுந்தது என்றாலும் அவர் அதை பொருட் படுத்தவில்லை. என்னவாக இருந்தாலும் தான் உயிருக்குயிராக நேசிக்கும் தனது அன்புத் துணையின் தாய்மாமன் குடும்பமல்லவா? அவர்களை நல்ல முறையில் உபசரிக்காவிட்டால் அவர் இதுவரை காலமும் திரைகடலோடி திரவியம் தேடியதில் என்ன பயன்? அந்த ளிநாட்டு உறவினர்களை ஸ்மித் குடும்பத்தார் எவ்வித குறையுமின்றி அங்கு தங்கியிருந்த நாட்களில் கவனித்தமைக்காக அவர்கள் செல்லுமுன் தாங்கள் கொண்டு வந்திருந்த விலையுயர்ந்த பரிசுப் பொருட்களை ஸ்மித் குடும்பத்தாருக்கு கையளித்திருந்தனர்.

ஸ்மித்தின் மனைவிக்கும், அவர் சகோதரிக்கும் மிக அழகான விலையுயர்ந்த மாலைகளும், ஸ்மித்துக்கு கைக்கடிகாரங்களும் அங்கு வழங்கப்பட்டிருந்தன. அவர்கள் சென்ற பின் ஸ்மித் அவர்களை பாராட்ட தவறவில்லை. 'என்னவாக இருந்தாலும் கனடாகாரர்கள் கனடா காரர்கள் தான்' என அவர் மனைவியும் அவருடன் சேர்ந்து ஒத்து ஊதினார்.

வட்டிக்குப் பணம் கொடுக்கும் செட்டிக்கும் சிலவேளை பணத்தட்டுப்பாடு வரும் என்று கூறுவது போல் சில மாதங்களுக்குப் பின் ஸ்மித்துக்கும் பொருளாதார நெருக்கடி என்றுமில்லாதவாறு தோன்றியது. மின்சார கட்டணப்பாக்கி செலுத்தாத தினால் அது துண்டிக்கப்படும் என சிவப்பு நோட்டீஸ் வந்திருந்ததால் மனைவியின் அனுமதியுடன் கனடாக் காரர்கள் கொடுத்த மாலைகளில் ஒன்றை அருகிலுள்ள மக்கள் வங்கியில் அடகு வைத்து பணம் பெறுவதற்காக அவர் அங்கு சென்றிருந்தார்.

குறித்த மாலையை பரீட்சித்த வங்கி உத்தியோகத்தர் தாறுமாறாக அவரை ஏசி அனுப்பியிருந்தார். மனக் கவலையுடன் வீடு சென்ற அவர் அங்குள்ள சாய்மான கதிரையில் உட்கார்ந்தவாறு 'இங்க எனக்கு கூலாக கொஞ்சம் தண்ணி கொண்டு வாங்க' என மனைவிக்கு கட்டளையிட்டார்.

இங்கு கூலுமில்ல.... சூடுமில்ல.... கிணத்தில தண்ணியை அள்ளி குடியுங்க என குசினிக்குள் இருந்து சூடாக பதிலளித்தார் அவர் மனைவி. வியர்வையின் அகோரம் தாங்க முடியாத அவர் எழும்பி மின்சார விசிறியின் சுவிட்சை போட்டார். அது அசையாமல் நின்றது.

அதாவது அவர் வங்கியிலிருந்து வருமுன் மின்சாரம் துண்டிக்கப்பட்டுவிட்டது. மனைவியின் கனடா மாமா குடும்பத்தினரின் வெகுமதி கொண்ட பரிசுப் பொருளான அந்த மாலை தங்க மாலையல்ல. அது வெறும் இமிடேஷன். மீண்டும் சாய்மான கதிரையில் உட்கார்ந்தவாறு சிறுவயதில் அவர் பாடசாலையில் படித்த பிரபல ஆங்கில கவிஞரும் நாடக ஆசிரியருமான வில்லியம் ஷேக்ஸ்பியரின் 'வைர நெல்லஸ்' எனும் கதையை மனதிற்குள் றிவைன் செய்து கொண்டு ஆழ்ந்த தூக்கத்தில் மூழ்கினார் பலத்த ஏமாற்றத்துக் குள்ளான அந்த அப்பாவி ஸ்மித்.

அந்த மாலை தங்க நிறத்தில் ஜொலித்தது மாத்திரமல்ல அதன் எடையும் தங்கத்தின் நிறைக்கு ஒத்ததாக இருந்ததை வங்கிக்குக் கொண்டு செல்லும் வரை அது தங்கமென அக்குடும்பம் நம்பியிருந்தது.




## விநோதங்கள்

## கொள்ளையில் பழங்குடியினர்

அமேசான் காட்டில் உள்ள மாஷ்கோ பிரோ என்ற பழங்குடியின மக்கள், உணவிற்காக அருகில் உள்ள பெரு நாட்டின் கிராமம் ஒன்றில் மக்களின் வீட்டில் கொள்ளை யடித்துள்ளனர். மேலும் அவர்களது வீட்டிலிருந்து பாத்திரங்கள், வீட்டு உபயோக பொருட்கள் உள்ளிட்ட வையும் கொள்ளை யடித்து வீடுகளை தரைமட்ட மாக்கியுள் ளனர்.



## வேலை செய்து பரிசளித்த சிறுவன்



நயாகரா வோல்ஸ்சை சேர்ந்த பிறைட்டன் (8) என்ற சிறுவன், விற்பனை நிறுவனம் ஒன்றின் நேர்முகத்தேர்வில் வெற்றி பெற்று, வரவேற்பாளர் வேலையில் சேர்ந்துள்ளான். இதுகுறித்து அவன் கூறுகையில், இது ஒரு பரபரப்பான வேலை, ஏராளமான மக்களை நான் சிரிக்க வைத்தேன் என கூறியுள்ளான். மேலும் இதய நோயினால் பாதிக்கப்பட்ட தன் தங்கை விரும்பிய நாற்காலியை, கிறிஸ்துமஸ் பரிசாக அளிக்கவே தான் உழைத்ததாக குறிப்பிட்டுள்ளான்.

## இதையும் திருடுவார்களா??



ஆயிரக்கணக்கான பெண்களின் உள்ளாடைகளை திருடிய திருடன் ஒருவன் நேற்று சீனாவில் கைது செய்யப்பட்டான். சீனாவில் உள்ள டான் என்பவன் தினமும் பலஜோடி பெண்களின் உள்ளாடைகளை திருடுவதையே வழக்கமாக கொண்டிருந்தான். அவனுடைய வீட்டில் இருந்து சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பெண்களின் உள்ளாடைகள் கைப்பற்றப்பட்டது.

## 30- 40 தடவை தா.பா கொடுக்கும் தாய்

ஹாங்காங் நாட்டை சேர்ந்த Davina Wright, என்ற 45 வயது பெண்ணுக்கு கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள் பிறந்தன. தற்போது மூன்று குழந்தைகளுக்கும் மூன்று வயது ஆகிறது. காலை, மதியம் மற்றும் இரவு உணவுகளை நன்றாக மூன்று குழந்தைகளூம் சாப்பிட்டு வந்த போதிலும் மூன்று குழந்தைகளும் இன்னும் தாய்ப்பால் குடிக்கும் பழக்கத்தை நிறுத்தவில்லையாம். மூன்று குழந்தைகளும் மாறி மாறி நாள் ஒன்றுக்கு 30 முதல் 40 முறை தனது தாயாரிடம் தாய்ப்பாலை குடித்து கொண்டு வருகின்றனர்.

## பிறந்தநாளை கொண்டாடிய கொரில்லா

ஒஹியோவில் உள்ள பூங்காவில் உலகின் மிக வயதான கொரில்லா குரங்கு உள்ளது. இந்த கொரில்லாவுக்கு சமீபத்தில் 58வயது பூர்த்தி ஆனதையிட்டு, வேர்க்கடலை வெண்ணெய், ஆப்பிள் சாஸ், தேன், துண்டு துண்டாக நறுக்கப்பட்ட கேரட் மற்றும் தயிர் ஆகியவற்றில் இருந்து ஸ்பெஷலாக கேக் ஒன்று கொரில்லாவுக்காக தயாரிக்கப்பட்டது. இந்த கேக்கை மிக மகிழ்ச்சியுடன் கொரில்லா வெட்டியது. கொரில்லா கேக் வெட்டும்போது அதன் அருகில் இருந்த அதிகாரிகள் கைதட்டி வாழ்த்து கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழிப்பேரலையின் பின்னரான காலப்பகுதியில் சீனாவின் பங்களிப்பும், தலையீடும்

அரசியல் ஆய்வு



மற்றையவர்களைப் பொறுத்தளவில் சீனாவால் சிறிலங்காவுக்கு வழங்கப்படும் நிதியுதவி என்பது எரிச்சலை உண்டு பண்ணுகிறது. அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்திக்கு சீனா தனது நிதியுதவியை வழங்குவதன் மூலம் தனது போர்க் கப்பல்களை சிறிலங்கா தனது துறைமுகத்தில் நிறுத்துவதற்கான அனுமதியை வழங்குவதற்கு சீனா அழுத்தம் கொடுக்கலாம் என சிலர் கவலை கொள்கின்றனர்.

இவ்வாறு அமெரிக்க ஊடகமான WALL STREET JOURNALY PATRICK BARTATHE எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார். அதனை புதினப்பலகைக்காக மொழியாக்கம் செய்தவர் நித்தியபாரதி.

பத்தாண்டின் பின்னர் சிறிலங்காவில் ஒரு பில்லியன் டொலர் பெறுமதியில் துறைமுகம் ஒன்று அமைக்கப்படுவதுடன், 209 மில்லியன் டொலர் செலவில் விமானநிலையம் ஒன்று புதிதாக்த் திறக்கப் பட்டுள்ளதுடன், 25,000 பேரை உள்ளடக்கக் கூடிய மாநாட்டு மண்டபம் மற்றும் துடுப்பாட்ட அரங்கம் போன்றன அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றுடன் பத்து மாடி வைத்தியசாலை ஒன்றும் நிர்மாணிக்கப்படுகிறது. சிறிலங்காவில் 35,000 வரையான பொதுமக்கள் காவுகொள்ளப்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தால் ஏற்பட்ட பெரும்பாலான அழிவுகளை சீர்செய்வதற்கு சீனா உதவியுள்ளது.

எடுத்துக்காட்டாக, அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் 85 சதவீத நிதியை சீன ஏற்றுமதி – இறக்குமதி வங்கி வழங்கியுள்ளது. இதன் மேலதிக விரிவாக்கத்திற்கு சீனக் கம்பனிகள் இணைந்து நிதிவழங்கவுள்ளன. அம்பாந்தோட்டை விமான நிலையத்திற்கு சீனா அதிக நிதி வழங்கியுள்ளது. இதேபோன்று கொழும்புத் துறைமுக விரிவாக்கம், புதிய நெடுஞ்சாலைகள் மற்றும் தொடருந்துப் பாதைகள் புனரமைப்புத் திட்டத்திற்கு சீனா 500 மில்லியன் டொலர்கள் வழங்கியுள்ளது. இதேபோன்று கொழும்பிற்கு அருகில் நிலச்சமப்படுத்தலுக்கு 1.4 பில்லியன் டொலர்களும் சக்தி ஆலைத் திட்டத்திற்கு 1.3பில்லியன் டொலர்களும் சீனா வழங்கியுள்ளது.

கடந்த பத்தாண்டில் சிறிலங்காவில் சீனா தனது அதிக நிதியை முதலீடு செய்ததானது மேற்குலக ஆதரவுடன் இயங்கும் நிதி நிறுவனங்கள் சிறிலங்காவில் தக்கவைத்துக் கொண்டுள்ள இடத்தை சீனா எவ்வாறு கையகப்படுத்தியுள்ளது என்பதைப் பிரதிபலிக்கிறது.

ஆசிய கட்டுமான முதலீட்டு வங்கிக்கு சீனா 50 பில்லியன் டொலர்களையும் சீனாவின் 'புதிய பட்டுப்பாதைத் திட்டத்திற்கு' 40 பில்லியன் டொலர்களையும் சீனா வழங்குவதாக அண்மையில் சீன அதிபர் உறுதிப்படுத்தியுள்ளார். பல பத்தாண்டுகால யுத்தத்தின் அழிவின் பின்னர் சிறிலங்கா மீளவும் உயிர்பெறுவதற்கு அதிக நிதி தேவைப்படுவதாக பெரும்பாலான சிறிலங்கர்கள் கருதுகிறார்கள்.

சிறிலங்காவின் உள்நாட்டுப் போர் முடிவடைந்ததன் பின்னர் நாட்டின் பொருளாதாரமானது ஆறு சதவீதத்தை விட அதிகரித்துள்ள போதிலும், மேற்குலக நிதி வழங்குனர்களிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொள்வது மிகவும் கடினமானதாக உள்ளதாக வர்த்தகர்கள் கூறுகின்றனர். குறைந்த வட்டி வீதத்தில் சீனாவின் கடன்கள் சில வழங்கப்படுவதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.



"சீனா மிகக் குறுகிய காலத்தில் தனது திட்டங்களை சிறிலங்காவில் மேற்கொண்டுள்ளது" என John Keells Holdings என்கின்ற சுற்றுலாத்துறை மற்றும் சேவைகள் நிறுவனத்தின் பிரதித் தலைவர் அஜித் குணவர்த்தன தெரிவித்துள்ளார். சிறிலங்காவின் பிரதான விமான நிலையத்திலிருந்து கொழும்பின் மத்திய பகுதி வரையான தொடருந்துப் பாதையை சீனா அமைத்துள்ளதால் தற்போது முன்னரை விட அரை மணி நேரத்தில் இப்பயணத்தை நிறைவுசெய்ய முடியும் என அஜித் குணவர்த்தன தெரிவித்துள்ளார். இப்பாதை அபிவிருத்தித் திட்டமானது 1969ல் ஆரம்பிக்கப்பட்டதெனவும் ஆனால் சிறிலங்காவை ஆழிப்பேரலை தாக்கிய பின்னரேயே சீனாவின் நிதியுதவியுடன் மிகத் துரிதமாக நிறைவேற்றப்பட்டதாகவும் அஜித் குணவர்த்தன மேலும் குறிப்பிட்டார்.

மற்றையவர்களைப் பொறுத்தளவில் சீனாவால் சிறிலங்காவுக்கு வழங்கப்படும் நிதியுதவி என்பது எரிச்சலை உண்டுபண்ணுகிறது. அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்திக்கு சீனா தனது நிதியுதவியை வழங்குவதன் மூலம் தனது போர்க் கப்பல்களை சிறிலங்கா தனது துறைமுகத்தில் நிறுத்துவதற்கான அனுமதியை வழங்குவதற்கு சீனா அழுத்தம் கொடுக்கலாம் என சிலர் கவலை கொள்கின்றனர்.

சீனா சிறிலங்காவுக்கு வழங்குகின்ற கடன்கள் தொடர்பாக வெளிப்படைத்தன்மை காணப்படவில்லை எனவும் சிறிலங்கா இக்கடனை மீளவும் வழங்காவிட்டால் என்ன நடக்கும் எனவும் சிலர் கேள்வியெழுப்புகின்றனர். அடுத்த மாதம் இடம்பெறவுள்ள அதிபர் தேர்தலில் தனக்கான ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் மட்டும் சிறிலங்கா அதிபர் சில திட்டங்களை நிறைவேற்றுவதாகவும் சிலர் ஆதங்கங் கொள்கின்றனர்.

"நாங்கள் தற்போது ஆடும் ஆட்டம் மிகவும் அபாயகரமானது. நாளின் இறுதியில் நீங்கள் உங்களது முழுப் பலத்தையும் காண்பிக்க வேண்டும்" என சிறிலங்காவின் எதிர்க்கட்சி அரசியல்வாதி ஹர்சா டீ சில்வா குறிப்பிட்டுள்ளார். சீனாவின் சிறிலங்காவுக்கான ஆதரவை இந்தியா தனக்கான எச்சரிக்கையாக நோக்குகிறது. அதாவது சிறிலங்காவில் சீனா தனது செல்வாக்கை அதிகரிப்பதானது தனது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலானது எனவும் குறிப்பாக இவ்வாண்டு சீன நீர்மூழ்கிக்கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்றதன் பின்னர் இந்த அச்சுறுத்தல் மேலும் அதிகரித்துள்ளதாக இந்தியா கருதுகிறது.

"இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்றால், இந்திய மாக்கடலானது சீனக் கடற்படையினருக்குப் பரிச்சயமான ஒரு கடற்பரப்பாகக் காணப்படும் எனவும் இது சீனக் கடற்படையினர் இந்தியத் தீபகற்பத்தை மிகவும் நெருங்குவதற்கு வழிவகுக்கும்" எனவும் ஓய்வுபெற்ற இந்தியக் கடற்படைத் தளபதியும் புதுடில்லியைத் தளமாகக் கொண்டியங்கும் கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனத்தின் இயக்குனருமான ஊ.ரு.உதேய் பாஸ்கர் குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்காவுக்கான தமது ஆதரவானது இரு தரப்பு வர்த்தக நல்லுறவைக் கட்டியெழுப்புவதை மட்டுமே நோக்காகக் கொண்டதாகவும் இராணுவ சார் நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை எனவும் சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சீன அரசின் தலைவர் என்ற வகையில் 28 ஆண்டுகளில் முதன் முதலாக சீனாவின் தற்போதைய அதிபர் செப்ரெம்பரில் சிறிலங்காவுக்கான தனது பயணத்தை மேற்கொண்டதுடன், சீனத் துறைமுக பொறியியல் நிறுவனத்தினால் கட்டப்படும் கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தையும் பார்வையிட்டார்.

சிறிலங்காவில் சீனா இன்னமும் முதலீடுகளை மேற்கொள்ளும் எனவும் இதில் இராணுவ நோக்கங்களும் உள்ளடங்கும் எனவும் சிறிலங்காவில் பரந்த மூலோபாய நலனை அடைந்து கொள்வதற்கான முதலீடுகளை சீனா மேற்கொள்ளும் எனவும் அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர் டேவிட் பிரேவ்ஸ்ரர் குறிப்பிட்டுள்ளார். தற்போது சீனாவின் நிதியுதவியுடன் சிறிலங்காவின் அம்பாந்தோட்டையில் கட்டப்பட்டுள்ள புதிய அனைத்துலக விமான நிலையத்தில் நாளொன்றுக்கு அரை டசின் விமானங்கள் மட்டுமே தரையிறங்குகிறது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது 1500 வரையான மக்கள் காவுகொள்ளப்பட்ட, 25,000 மக்களைக் கொண்ட அம்பாந்தோட்டையை சீனாவின் நிதி மாற்றிவருகிறது என்பது நிச்சயமாகும். உள்ளூர் அரசியல்வாதியாக இருந்த திரு.ராஜபக்ச 2005ல் சிறிலங்காவின் அதிபராகப் பதவியேற்ற பின்னரும், உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னரும் நாட்டில் நிதி அதிகளவில் முதலீடு செய்யப்பட்டது. சீனாவின் அபிவிருத்தித் திட்டங்களுடன் அம்பாந்தோட்டையில் மாநாட்டு மண்டபத்தை அமைப்பதற்கு தென்கொரியா நிதி வழங்கியது. ஐரோப்பிய நிதிவழங்குனர்களும் உதவினர்.

சிறிலங்காவில் மேற்கொள்ளப்பட்ட பல புதிய பாரிய திட்டங்கள் தற்போது முறைகேடாகப் படுத்தப்படுகின்றன. கடந்த ஆண்டு திறந்து வைக்கப்பட்ட புதிய விமான நிலையத்திற்குச் செல்லும் வீதியில் தெரு நாய்கள் உலாவுகின்றன. ஆனால் இந்த விமான நிலையமானது அம்பாந்தோட்டையை ஒரு சுற்றுலா மையமாக மாற்றுவதற்கு முக்கிய பங்காற்றுகிறது.

கொங்கொங்கைத் தளமாகக் கொண்டியங்கும் சங்றி-லா விடுதிகள் மற்றும் சுற்றுலா மையங்கள் 300 அறைகளுடன் அமைக்கத் திட்டமிடப்படுகின்றன. 2011ல் திறக்கப்பட்ட துடுப்பாட்ட அரங்கில் அந்த ஆண்டிற்கான உலகக் கிண்ணத் துடுப்பாட்டப் போட்டி மற்றும் சில போட்டிகள் இடம்பெற்றுள்ளன.

அம்பாந்தோட்டையில் துறைமுக வளாகம் ஒன்று உருவாக்கப்படுகிறது. அம்பாந்தோட்டைத் துறைமுகப் பணிகள் முற்றிலும் நிறைவடையும் போது இது ஆசியாவிலுள்ள மிகப் பெரிய துறைமுகங்களில் ஒன்றாகக் காணப்படும். இங்கு ஒரு மாதத்தில் 45-50 கப்பல்கள் தங்கிநிற்கின்றன. அம்பாந்தோட்டைத் துறைமுகத்திற்கு அருகில் தொழில் வயலம் ஒன்றை அமைத்து அதன் மூலம் உள்ளூர் தொழில் வாய்ப்பில் சீனா நலனை அடைவதற்கான முயற்சிகள் சீனாவால் மேற்கொள்ளப்படலாம்.

தனது கடனை அடைப்பதற்குத் தேவையான வருவாயை அம்பாந்தோட்டைத் துறைமுகம் பெறவில்லை. இந்த வேறுபாடுகளுக்கு சிறிலங்கா அரசாங்கமே பொறுப்பாகும். இது ஒரு பிரச்சினையில்லை எனவும், இங்கு புதிய வேலைகள் மற்றும் குறிப்பிடத்தக்க நலன்கள், பாரிய இலாபங்களைப் பெறக் கூடிய புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படலாம் என உள்ளூர் மேயர் எராஜ் ரவீந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

**– – நித்தியபாரதி – –**

www.puthinappalakai.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. காணி ஒன்றின் இரு எல்லைகள் AB, AC ஆகும். கோணம் BAC = $70^0$. AB, AC ஆகிய எல்லைகளில் இருந்து சமதூரத்திலும் A, B ஆகிய புள்ளிகளிலும் இருந்து சம தூரத்திலும் அமையுமாறு ஒரு மின்விளக்கு கம்பம் நட வேண்டியுள்ளது. ஒழுக்குகள் பற்றிய அறிவைக் கொண்டு பருமட்டான படம் ஒன்றை வரைந்து நிலயத்தை x எனக் குறிக்க.

02. கூட்டல் விருத்தி ஒன்றிலும் பெருக்கல் விருத்தி ஒன்றிலும் 13 உறுப்புகள் வீதம் உள்ளன. கூட்டல் விருத்தியின் முதல் உறுப்பு 10உம் பெருக்கல் விருத்தியின் முதல் உறுப்பு 1/8 உம் ஆகும். கூட்டல் விருத்தியின் பொது வித்தியாசம் d, பொருக்கல் விருத்தியின் பொது விகிதம் r எனின்,

1. கூட்டல் விருத்தியின் நடுவில் உள்ள உறுப்பை d யிலும், பெருக்கல் விருத்தியின் நடுவிலுள்ள உறுப்பை r இலும் தருக.
2. பொது வித்தியாசமானது பொது விகிதத்திலும் 1 இனால் கூடியும், இரு விருத்திகளினதும் நடு உறுப்புக்கள் சமனாகவும் இருந்தால் r இல் ஒரு சமன்பாட்டை எழுதுக.
3. r = 2 என்பது இச் சமன்பாட்டை திருப்தி செய்கிறது எனக் காட்டி இப் பெறுமானத்தை உபயோகித்து ஒவ்வொரு விருத்தியிலும் 5ஆம் உறுப்பைக் காண்க.

03. றொபின் தனது அசர தேவை ஒன்றிற்காக தனது நண்பன் ஒருவரிடம் ஒரு தொகையை கடன் கேட்டார். அதற்கு நண்பன் ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் வட்டியுடன் முதலைக் கூட்டி கிடைக்கும் தொகைக்கு வட்டி தர வேண்டும் எனக் கூறினான். இதன் அடிப்படையில் 2 ஆண்டுகள் முடிவில் 2,205,000.00 வை றொபின் நண்பனுக்கு கொடுத்து கடனைத் தீர்த்தான். வட்டி வீதம் 5 எனின், றொபின் வாங்கிய கடனின் பெறுமானம் என்ன?

04. A, B என்னும் நகரங்களுக்கிடையிலான தூரம் 210கி.மீ ஆகும். A என்னும் நகரத்தில் இருந்து பேருந்து ஒன்று 30Km/h கதியில் நகரம் B ஐ நோக்கியும், B என்னும் நகரத்திலிருந்து பேருந்து ஒன்று 40Km/h கதியில் நகரம் A ஐ நோக்கியும் ஒரே நேரத்தில் பிரயாணத்தை ஆரம்பிக்கின்றது.

1. பிரயாணம் ஆரம்பித்து 1 மணித்தியாலத்தில் அவ்விரு பேருந்துகளுக்கிடையிலான தூரம் எத்தனை Km?

2. A என்னும் நகரத்திலிருந்து x Km தூரத்தில் இரு பேருந்துகளும் ஒன்றையொன்று சந்திக்கின்றது. இரு பேருந்துகளும் சந்திக்குமிடத்திலிருந்து நகரம் B இற்குள்ள தூரத்திற்கான கோவையை எழுதுக.

05. ஐந்து பேனாக்களின் விலை ரூபா 60 எனின், ரூபா 24 இற்கு வாங்கக் கூடிய பேனைகளின் எண்ணிக்கையை காண்க.

06. 0.3 ஐ சதவீதமாக எடுத்துரைக்க

07. மட$_2$ 16 = 4 இனை சுட்டி வடிவில் தருக.

**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**

## பாடம் : விஞ்ஞானம்

01. முள்ளந்தண்டுகளின் ஐவிரலவயங்களுக்குப் பெரும்பாலும் பொதுவான அமைப்பு இருப்பதைக் காணலாம். இது பின்வருவனவற்றுள் எதனை விளக்குகின்றது?
   1. முள்ளந்தண்டுளிகளுக்கிடையே வாழ்க்கைத் தேவைகளுக்கான போட்டி நிலவுகின்றது.
   2. முள்ளந்தண்டுளிகளின் பொது மூதாதை விலங்குகளிலிருந்து கூர்ப்படைந்தவை
   3. முள்ளந்தண்டுளிகளில் ஐந்து விரல்கள் மாத்திரம் இருக்கலாம்.
   4. எல்லா முள்ளந்தண்டுளிகளுக்கும் விரல்களுள்ள அவயவங்கள் உண்டு.

02. பலகருக்கள் உள்ள கலம்
   1. வெண்குருதிச் சிறு துணிக்கை  2. செங்குருதிச் சிறுதுணிக்கை
   3. நரம்புக்கலம்  4. வன்கூட்டுத் தசைக் கலம்

03. காபனைப் பயன்படுத்தி உலோக ஒட்சைட்டைத் தாழ்த்தும் போது பின்வரும் எந்த உலோகங்களைப் பெறலாம்?
   a - ஈயம்  b - மக்னீசியம்  c - இரும்பு  d - சோடியம்
   1. a, b சரி  2. b, c சரி  3. c, d சரி  4. a, c சரி

04. பின்வருவனவற்றில் எது இறப்பர்ப்பால் திரட்சியடைதலைத் தடுப்பதற்குப் பிரயோகிக்கப்படும் திரட்சி நிரோதியாக அமைதில்லை?
   1. அமோனியக் கரைசல்  2. போமிக்கமிலம்
   3. சோடியம் சல்பேற்று  4. கல்சியம் சல்பேற்று

05. சிறிது காலம் வரை வளியில் திறந்து வைக்கப்பட்டால் பின்வரும் எந்த உலோகத்தின் மீது பச்சை நிறமான பொட்டுக்கள் தோன்றக்கூடும்?
   1. செம்பு  2. வெள்ளீயம்  3. அலுமினியம்  4. இரும்பு

06. தேசிய சுண்ணாம்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் சுண்ணாம்புக் கல்லில் அடங்கும் பொருள் எது?
   1. கல்சியம் ஒட்சைட்டு  2. கல்சியம் காபனேற்று
   3. கல்சியம் பொசுபேற்று  4. கல்சியம் சல்பேற்று

07. ஓசோன் படை வறிதாக்கத்திற்கு (சிதைவடைதலுக்கு) உயர்ந்தபட்சம் பின்வரும் எக்கூறு பங்களிப்புச் செய்கின்றது?
   1. அமோனியா ($NH_3$)  2. காபனீரொட்சைட்டு ($CO_2$)
   3. குளோரபோம் ($CHCl_3$)  4. மெதேன் ($CH_4$)

08. ஒட்சிசன் வாயுவைக் கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?
   1. போயில்  2. டோல்ரன்  3. லவொய்சியர்  4. பர்சீலியஸ்

09. நைதரசன் வாயுவின் உபயோகம் அல்லாதது எது?
   1. ஐதரசீன் தயாரிப்பில் பயன்படுகிறது.
   2. வானூர்திகளின் டயரை நிரப்ப பயன்படுகிறது
   3. எண்ணெய் சேமிப்பு தாங்கிகளில் ஒட்சிசனை அகற்றப் பயன்படுகிறது
   4. பொலிவைனல் குளோரைட்டு தயாரிப்பில் பயன்படுகிறது.

10. உப்பளத்தில் உப்பு உற்பத்திச் செயன்முறையில் கல்சியம் காபனேற்று, கல்சியம் சல்பேற்று, சோடியம் குளோரைட்டு வீழ்படிவாதல் முறையே நடைபெறுகின்றன. இவ்வுப்புகளின் கரைதிறன் பற்றிய சரியான தொடர்பு யாது?
   1. $CaCO_3 < CaSO_4 < NaCl$  2. $NaCl < CaCO_3 < CaSO_4$
   3. $CaSO_4 < NaCl < CaCO_3$  4. $CaCO_3 < NaCl < CaSO_4$

## பாடம் : வரலாறு

01. யாழ்ப்பாணத்தின் ஆரியச் சக்கரவர்த்தியினால் தமது ஆட்சிக்குக் கீழ்க் கொண்டுவரப் பட்டிருந்த மன்னாரிலிருந்து பாணந்துறை வரைக்குமான மேற்குக் கரையோரத்தில் இருந்த துறைமுகங்கள் எல்லாவற்றையும் விடுவிப்பதற்கான பெருமை உரியது.
   1. சேனாலங்காதிகார தளபதிக்கு
   2. நிஸ்ஸங்க அழககடகோனாருக்கு
   3. அம்புலுகல அரசகுமாரனுக்கு
   4. சப்புமல் அரசகுமாரனுக்கு

02. இலம்பகர்ண வம்சத்தின் தொடக்க ஆட்சியாளர் பின்வருவோரில் எவராவார்?
   1. வசப அரசர்  2. மகாசேன மன்னன்
   3. வலகம்பா அரசர்  4. மித்சேன அரசர்

03. 1815ம் ஆண்டு கண்டிய உடன்படிக்கையின் 10ம் வாசகமாக நாம் கொள்ளக் கூடியது?
   1. பிக்குமார்கள் மற்றும் பௌத்தமதம் பாதுகாப்பு பற்றியது
   2. ஆள்பதியின் வருமானம் பற்றியது
   3. 3ம், 4ம் கோறளைகள் இணைப்பு பற்றியது
   4. மக்களின் நீதிச் சட்டங்கள் பற்றியது

04. புராதன இந்தியாவில் கலைகளின் பொற்காலம் என அழைக்கப்பட்ட பேரரசானது
   1. குப்த  2. பல்லவ  3. பாண்டிய
   4. சோழ

05. 1789ம் ஆண்டு பிரான்சியப் புரட்சிக்கு வழிகாட்டியாக இருந்த அறிஞர்களை மட்டும் காட்டும் விடைத்தொகுதி
   1. அரிஸ்டோட்டில், பிளேட்டோ, ரூசோ
   2. மொண்டஸ்கியூ, சாக்ரடீஸ், ரூசோ
   3. ரூசோ, மொண்டஸ்கியூ, வோல்ரயர்
   4. வோல்ரயர், ரூசோ, பிளேட்டோ

06. இலங்கை வரலாற்றில் மின்னேரிய தெய்வம் என போற்றப்பட்ட அரசன் பின்வருவனவற்றுள் யார்?
   1. தாதுசேனன்  2. வலகம்பாகு
   3. 1ம் காசியப்பன்  4. மகாசேனன்

07. புராதன இந்தியாவில் நாணயசீர்திருத்த அரசன் என அழைக்கப்பட்டவன்?
   1. அக்பர்  2. டில்லி சுல்தான்
   3. இல்ருட்டிமிஸ்  4. முகம்மது பின் துக்ளக்

08. கள்ளிக் கோட்டையை வஸ்கொடகாமா வந்தடைந்த ஆண்டு?
   1. 1498  2. 1721  3. 1815  4. 1821

09. புராதன கால கண்டிய நிர்வாக அமைப்பில் பிரதேசங்களின் சாதி பிரிவுகளுக்கு பொறுப்பாக இருந்த நிர்வாகி
   1. திசாவைகள்  2. அத்துக்கோறளைகள்
   3. முகாந்திரம்  4. ரட்டமாகத்மயா

10. சீதாக்கை இராசதானி வீழ்ச்சிக்கு காரணமான 2ம் இராஜசிங்கனின் தந்தை
   1. கஜபாகு  2. றைகம பண்டார
   3. புவனேகபாகு  4. மாயாதுன்ன

11. இலங்கைக்கு வருகை தந்த முதலாவது ஒல்லாந்து குழுத்தலைவன்
   1. லோறன் சேதஅல்மேடா  2. ஸ்பில்பேர்ஜன்
   3. [illegible]
   4. [illegible]

## Grammar

Ex 01 :-

***A friend of yours is planning to go on holiday soon. You ask her about her plans. Use the words in brackets to make quesions.***

1.A: (where/ go?) ..............................
B : Scoland

2. A: (how long/ say?) ..............................
B: Ten days

3.A: (when/ go?) ..............................
B: Next Friday

4. A: (go/ alone?) ..............................
B: No, with a friend of mine.

5. A: (what/ friend's name?) ..............................
B: Rita

6. A: (travel/ by car?) ..............................
B: No, by train.

7. A: (where/ stay?) ..............................
B: In a hotel.

8 A: (when/ back?) ..............................
B: After ten days

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மாவட்ட வர்த்தக மற்றும் கைத்தொழில்கள் சம்மேளன வருடாந்த கூட்டம்

திருகோணமலை மாவட்ட வர்த்தக மற்றும் கைத்தொழில்கள் சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 19.12.2014 மாலை 4.30 மணியளவில் சம்மேளனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. 2015 ம் ஆண்டுக்கான புதிய தலைவாரக மீண்டும் திருவடிவேல் கலைச்செல்வன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக திருகு.குலதீபன் அவர்களும் பொருளாலராக தி.ளு.உதயணன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். இவர்களுடன் சேர்த்து மூவினத்தையும் பிரதிநிதித்துவம் படுத்தும் படியாக 19 நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட திரு.வடிவேல் கலைச்செல்வன் அவர்களின் உரையில், உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து செயல்படவேண்டும் எனவும் திருக்கோணமலை மாவட்டத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டு கொண்டிருக்கும் தொழில் முயற்சியாளர்களை எமது சம்மேளனத்தில் இணைத்துக் கொள்ள வேண்டுமெனவும் கூறினார். மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் எமது சம்மேளத்தின் வளர்ச்சி அதன் அங்கத்தவர்களிலேயே தங்கியுள்ளது ஆகவே ஒவ்வொரு அங்கத்தவரும் புதிய அங்கத்தவர்களை சம்மேளனத்துடன் இணைப்பதற்கு உதவவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். சிறு மற்றும் நடுத்தர தொழில் புரிபவர்களுக்காக புதிய பல திட்டங்கள் 2015 ம் ஆண்டில் செயற்படுத்தப்படும் எனவும் அதன் முதல் கட்டம் கட்டமாக 100 சுய தொழில் புரியும் இளைஞர்களை அமெரிக்க தூதரகத்தின் உதவியுடன் வலுவூட்டப்படுவதுடன் அவர்களின் தொழில் முயற்சிக்கு ஆதரவு வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். அத்துடன் பெண்கள் பிரதிநிதித்தும் படுத்தும் சம்மேளனமும் சிறப்பாக செயல்பட வழிவகுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துக்கொண்டார்.

மூதூர் நிரூபர்






## பௌர்ணமி தின நிகழ்வு

செய்தி : மூதூர் நிரூபர்

## நீங்களும் எழுதலாம் - மார்கழி மாத நிகழ்வு

நீங்களும் எழுதலாம் கவிதைச்சஞ்சிகை வாசகர் வட்டத்தினால் நடத்தப்பட்ட கவிதைப்போட்டி பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் இடம்பெற்றது. நிகழ்வில் நீங்களும் எழுதலாம் ஆசிரியர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம், சிரேஷ்ட சட்டத்தரணி தி.திருச்செந்தில்நாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் ஏனைய சிறப்பு அதிதிகளான திருகோணமலை மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனத் தலைவர் வ.கலைச்செல்வன், அதிபர் எஸ்.பத்மசீலன் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்குவதையும் திருமதி. கோகிலா சரீஸ்குமாரின் வழிகாட்டலில் இடம்பெற்ற நடன நிகழ்வினையும் படங்களில் காணலாம்.





# குருக்களுக்கு குத்தாட்டம் பொருந்துமா?!! தமிழ்த் திரைப்படங்கள் செய்யவதென்ன!!!

நவீனம், நவநாகரிகம் எனும் இரு பெரும் அஸ்திவாரங்களோடு அம்சமாய் அமைகிறது இன்றைய மனித வாழ்வு. இவ் ஆதிக்கங்கள் உலகின் அம்சங்களை பல்வேறு [illegible]ிகளில், வெவ்வேறு மட்டங்களில் மாற்றி அமைத்திருப்பது நிதர்சனம். அவ் அம்சங்களுள் மிக முக்கியமாகத் திரிபூட்டப்பட்டிருப்பவை கலாச்சாரங்களும் மொழிகளுமே. எம் தமிழ் மொழியும், இந்து மதமும் இப்பட்டியலில் முழிப்பான இடங்களைப் பெற்றிருக்கக் காரணம் நவீன உலகில் அவை பூண்டுள்ள வலிதரும் காயங்களும், போலியான சாயங்களுமே.

நான் இப்பதிவினை இங்கு மேற்கொள்ளத் தூண்டுதலாக அமைந்தது என் வீட்டு வரவேற்பறையிலுள்ள தொலைக்காட்சிதான். இந்துமதம் எனும், சீரான, தூய ஆடை அணிந்து கொண்ட ஓர் பெண் தினம் தினம் துகிலுரியப்படுவதை நான் காண்கிறேன். இங்கு நீண்ட துகில் ஒன்றைத் தர கிருஷ்ணர் இல்லை என்பதையும் நான் உணர்கிறேன்.



அதன்படி இந்நிலை நீடிப்பின் வெகுவிரைவில் இந்துத் தாய் நிர்வாணமாக்கப் படுவாள் என்பது வெளிப்படை உண்மை.

திரையுலகம் என்ற ஒன்று உருவாக்கப் பட்டதற்குக் காரணம் விரைவாகவும், தெளிவாகவும், உணர்ச்சிபூர்வமாகவும் நன்மைதரும் விடயங்களை மக்களுக்கு கொண்டு சேர்ப்பதுதான். ஆனால் அந்த இலக்கு அல்லது நோக்கம் இன்று மறக்கப்பட்டிருக்கிறது; கூடவே சில சமயங்களில் மறுக்கப்பட்டுமிருக்கிறது. குறிப்பாக இந்துமதம் சம்பந்தப்படுவது இந்தியாவைத் தழுவிய திரைப்படைப்புகளில்தான். அதிலும் எம்மை அடையும் பெரும்பகுதித் திரைப்படங்கள் தென்னிந்தியத் தமிழனின் வெளியீடுகளே.

தமிழ்த்திரைப்படங்கள் எவ்வாறு தற்காலத்தில் வெளிவருகின்றன என்பதை ஆராயப்போனால் அது இன்றோடு முடியப்போவதில்லை. அடிதடி, கவர்ச்சி, வியாபாரம் என தனது பாதைகளை மாற்றிவிட்டிருக்கும் தமிழ்த் திரையுலகத்தை சாடுவதற்கு இப்பொழுது நான் தயாரில்லை. காரணம் அவை அப்படித்தான்; மாற்ற முடியாது என்று சிறுகுழந்தைக்கும் தெரியும். இவ்விடத்தில் நாம் கைக்கொள்ள வேண்டியது அன்னப்பறவையின் திறமையைத்தான்; தீயதை நீக்கி நல்லவற்றை மட்டும் பெற்றுக் கொள்ளல் என்பதுதான். ஆனால் ஓர் மதத்தின் அவமதிப்பு என்பது இங்கு ஏற்றுக்கொள்ள முடியாத ஓர் அம்சமாகவே நான் காண்கிறேன்.

தமிழ்த்திரைப்படங்களைப் பொறுத்தமட்டில் அடிக்கடி அலைபாயும் ஒரு விடயம்தான் சாமியார்கள். “சாமியார்கள்” என்ற சொற்பதம் குறித்து நிற்கும் உட்பொருள் என்ன என்பதை நூறுவீதம் மாற்றி விட்டிருக்கிறது சினிமா. போலியான சாமியார்களும், வியாபார நோக்கிலான சாமியார்களும், அரசியல் அரங்கிலுள்ள சாமியார்களும் திரைக்கதையை ஒருவேளை அலங்கரிக்கலாம். ஆனால் அவர்கள் அமைதிப்படுத்துவது தம் மதத்தையே. நெற்றியிலே விபூதி, குங்குமப் பொட்டு, கழுத்திலும் காதிலும் உருத்திராட்சம், காவியுடை என புனிதச் சின்னங்களைப் பூண்டவாறு அக்கதாபாத்திரங்கள் உலகின் முன் காட்டும் நடிப்பு வெறும் படமல்ல; இந்துத் தாய்க்கு ஊட்டும் விடம் என்றே கூறத்தோன்றுகின்றது.

இது ஒருபுறமிருக்க ஆலயப் பூசகர்கள் தொடர்பான சித்தரிப்போ பெரும் பரிதவிப்பு. ஓர் திரைப்பாடலின் ஆரம்பத்தில் குருக்கள் ஒருவர் “நல்லா வாங்கி[illegible]” [illegible] உடலை

## மக்கள் முரசு

வகையாக அசைத்து ஓர் ஆட்டம் போட்டார் பாருங்கள்! கண்கொள்ளாக் காட்சி. ஆலயத்தின் கர்ப்பக்கிரகம் வரை செல்லக்கூடிய தகுதியைப் பெற்றுக் கொண்டு, அடியவர்களுக்கும் ஆண்டவனுக்குமிடையில் ஓர் தூதர் போல் செயற்பட வேண்டிய குருக்களை இழிவுபடுத்திச் சித்தரிக்கும் எண்ணம் எப்படி எம்முள் உண்டானது என்பது வியப்பிற்குரியதே.

இவை யாவற்றையும் விட மிகக் கேவலமாகக் காட்சிப்படுத்தப்படும் ஓர் அம்சம்தான் “உருக்கொள்ளல்”; அதாவது மனித உடலில் கடவுளர்கள் இறங்கிப் பேசுகின்ற நிகழ்வு. உண்மையில் கஷ்டத்திலும், குழப்பத்திலும் உள்ள மக்களைத் தென்பூட்ட அல்லது வழிப்படுத்த இக்கலாச்சாரம் ஓர் ஊன்றுகோலாக காலம் காலமாக இந்துமதத்தில் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் திரைப்படங்களிலே “கட்டுச் சொல்லுதல்” என்ற பெயரில் மது அருந்தவும், மாமிசம் சாப்பிடவும், கொள்ளையடிக்கவும், கொலைசெய்யவும் தமிழன் இதைப் பயன்படுத்துவதாகவே சித்தரிக்கப்படுகின்றது. இன்று நேற்றல்ல எழுபத்தைந்து வருடகால தமிழ் சினிமா வரலாற்றில் இக்கேவலத்திற்கு வேண்டிய உதாரணங்களை நீங்கள் பெற்றுக்கொள்ள இயலும்.

ஆலயம் என்பது கடவுளர்கள் வீற்றிருந்து அருள்பாலிக்க அங்கு ஆன்மா இலயித்துப்போகும் இடம். அங்கு நடந்து கொள்வதற்கும், வழிபடுவதற்கும் சில வரைமுறைள், விதிகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. நாம் நினைவறிந்த காலத்திலிருந்து அப்பண்புகள் கொஞ்சம் கொஞ்சமாக எமக்குள் புகுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்று நிகழ்வதுதான் என்ன?. ஆலய வாயிலில் உருக்கொண்டாடும் பெண்ணொருத்தி, “என்னடா இழுவை?? மாட்டருக்கு வாடா....!!!” என நெற்றி நிறையக் குங்குமத்தோடு உரத்தகுரலில் கூறும் போது கட்டுப்பாடும் கலாச்சாரமும் சுக்குநூறாக்கப்பட்டுவிடுகிறது. ஆலயத்திலே கவர்ச்சியுடையில் குத்தாட்டமும், தகாத வார்த்தைப் பிரயோகமும், கொலைகளும் அரங்கேற்றப்படும் போது ஆலயப் புனிதம் எங்குள்ளது என்பதைப் பூதக்கண்ணாடி கொண்டுதான் தேடவேண்டியள்ளது.

- தொடரும் -

மெய்யுழகன் குகேஸ்
(மருத்துவபீடம் - பேராதனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 12

01. தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயற்படுபொருள் என்பவற்றை இனங்கண்டு எழுதுக.

அ. குமார் கடிதம் எழுதினான்.
- எழுவாய் :
- பயனிலை :
- செயற்படுபொருள் :

ஆ. கொத்தன் வீட்டைக் கட்டினான்.
- எழுவாய் :
- பயனிலை :
- செயற்படுபொருள் :

இ. அணில் மாம்பழத்தைச் சாப்பிட்டது.
- எழுவாய் :
- பயனிலை :
- செயற்படுபொருள் :

ஈ. அப்பா குடை வாங்கினார்.
- எழுவாய் :
- பயனிலை :
- செயற்படுபொருள் :

உ. அவள் பாடம் படித்தாள்.
- எழுவாய் :
- பயனிலை :
- செயற்படுபொருள் :

02. பரப்புப் பலகையைப் பயன்படுத்தும் தொழில் எது?
1. உழவுத் தொழில் 2. உலோகத் தொழில் 3. நெசவுத் தொழில்

03. கீழ் உள்ள வித்துக்களில் மிக விரைவாக முளைக்கும் வித்து எது?
1. பயறு2. தாமரை 3. கத்தரி

04. கிளைத் துண்டுகளை நடுவதன் மூலம் புதிய கன்றை பெறத்தக்கது?
1. பப்பாசி 2. இராசவள்ளி 3. மரவள்ளி

05. சிகிரியா ஓவியத்தில் உள்ள பெண்கள் வைத்திருக்கும் மலர்?
1. ரோஜா 2. நீலோற்பலம் 3. ஒக்கிட்

06. உப்புத்தூள் விரைவாகக் கரைவது எதில்?
1. வெந்நீரில் 2. தண்ணீரில் 3. குளிர்நீரில்

பின்வரும் கவிதையை வாசித்து விடையளிக்குக.

செக்கச் சிவந்த செங்கதிரோனும்
கிழக்கினில் வந்துவிட்டான் - புவி
மக்கள் கண்விழித்துக் கிளம்பிட
வானில் உதித்துவிட்டான்

கொக்கரக்கோவெனக் கோழியுங் கூவுது
கொக்கோடு பற்பல புட்களும் மேவுது
சக்கரம் போலவே ஜகம் சுழன்றாடுது
தொக்கி நின்ற இருள் சொல்லாமல் ஓடுது.

07. இக்கவிதையில் வருணிக்கப்படும் காட்சி என்ன?

08. பின்வரும் ஒவ்வொன்றினதும் கருத்தை எழுதுக.
1. செக்கச்சிவந்த 2. கண்விழித்தல்

09. இங்கு உள்ள உவமானத்தை எழுதுக.

10. இக்கவிதையில் குறிப்பிடப்படும் இரு பறவைகளின் பெயர்களை எழுதுக.

11. 'நின்ற இருள் சொல்லாமல் ஓடுது' என்பதன் மூலம் கவிஞர் வெளிப்படுத்த முயலும் கருத்து யாது?

12. ஒரு வரிசையில் ரவிக்கு முன்னால் 9 மாணவர்கள் நின்றனர். அனைவரும் மறுபக்கம் திரும்பி நின்ற போது, ரவிக்கு முன்னால் 2 மாணவர்கள் நின்றனர் எனில், வரிசையிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை?
1. 11 2. 12 3. 13

13. ஒரு கிலோகிராம் அரிசியின் விலை ரூபா 90 எனின், ரூபா 306க்கு வாங்கக் கூடிய அரிசி எவ்வளவு?
1. 3கிலோ 600கிராம் 2. 3கிலோ 400கிராம் 3. 3கிலோ 500கிராம்

14. வகுப்பறை ஒன்றிலுள்ள கதிரைகளின் எண்ணிக்கை 45 ஆகும். அங்குள்ள மேசைகளின் எண்ணிக்கையானது கதிரைகளின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் 5 குறைவாகும். இவ்வாறு மூன்று வகுப்பறைகளில் காணப்பட்டன. எனின், அம்மூன்று வகுப்பறைகளிலும் உள்ள கதிரைகளினதும், மேசைகளினதும் எண்ணிக்கை முறையே?
1. 135, 210 2. 120, 135 3. 135,120

15. நான் வாழும் .................. மிகவும் அழகானது.
1. சூழல் 2. சூலல் 3. சூளல்

## சிறுவர் முரசு

### குட்டிக்கதை

## வெற்றி மௌனத்தினாலும் கிட்டும்



வெளியூர் சென்று கொண்டிருந்த ஒருவன் வழியில் ஒரு சத்திரத்தைக் கண்டான். இங்கே தங்கி ஓய்வெடுத்துச் செல்லலாம் என்ற எண்ணத்தில் குதிரையை விட்டு இறங்கினான். குதிரையை அருகிலிருந்த மரத்தில் கட்டினான். அது உண்பதற்காகப் புல் போட்டுவிட்டு சத்திரத்திற்குள் நுழைந்தான். அப்பொழுது அங்கிருந்த குறும்பன் ஒருவன் குதிரையின் வால் முடியைப் பிடித்து இழுத்தான். இதைப் பார்த்த அவன், "தம்பி இது முரட்டுக் குதிரை. வால் முடியைப் பிடித்து இழுக்காதே உதைத்தால் உன் பற்கள் எல்லாம் போய்விடும்" என்று எச்சரித்து விட்டு உள்ளே சென்றான். ஆனால் அந்தக் குறும்பன் மீண்டும் குதிரையின் வால் முடியைப் பிடித்து இழுத்தான். குதிரையால் வலியைப் பொறுக்க முடியவில்லை. விட்டது ஒரு உதை. அவன் நான்கைந்து குட்டிக்கரணங்கள் போட்டு சிறிது தொலைவில் விழுந்தான். முன் பற்கள் விழுந்ததோடு அல்லாமல் நல்ல காயமும் அவனுக்கு ஏற்பட்டது.

இந்த அநியாயத்தைக் கேட்பார் யாரும் இங்கு இல்லையா? என்று கூச்சலிட்டான் அவன். அங்கே கூட்டம் கூடி விட்டது. என் இந்த நிலைக்கு முரட்டுக் குதிரையின் சொந்தக்காரன்தான் காரணம் என்றான் அவன். தனக்கு இழப்புத் தொகையோ அல்லது குதிரை உரிமையாளனுக்கு தண்டனையோ தர வேண்டும் என்று நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தான்.

குதிரை சொந்தக்காரனைப் பார்த்து நீதிபதி இந்த முரட்டுக் குதிரை உன்னுடையதுதானா? என்று கேட்டார். ஆனால் அவனோ ஏதும் பேசவில்லை. "உன் குதிரையால் தான் இவனுக்கு இவ்வளவு காயம் ஏற்பட்டு இருக்கிறது. இதற்கு என்ன சொல்கிறாய்" என்று மீண்டும் கேட்டார் நீதிபதி. இப்பொழுதும் அவன் ஒன்றும் பேசவில்லை. இதைக் கண்ட நீதிபதி "இவன் செவிட்டு ஊமை போல் இருக்கிறான். என்ன கேட்டாலும் பதில் சொல்லாமல் நிற்கிறானே" என்றார்.

உடனே வழக்கு தொடுத்தவன் "என்ன வாயிலே கொழுக்கட்டையா வைத்து இருக்கிறாய்? இது முரட்டுக் குதிரை. வால் முடியைப் பிடித்து இழுக்காதே. உதைத்தால் பல்லெல்லாம் போய் விடும் என்று அப்பொழுது கத்தினாயே. இப்பொழுது செவிட்டு ஊமை போல நடித்து ஏமாற்றவா பார்க்கிறாய்" என்று போபத்துடன் கத்தினான். இதைக் கேட்டதும் நீதிபதிக்கு உண்மை புரிந்தது. வழக்கு தொடுத்தவனைப் பார்த்து, "அவர் எச்சரித்த பிறகும் குதிரையின் வால் முடியைப் பிடித்து இழுத்தாயா?" என்று கேட்டார். அவன் தலை கவிழ்ந்து நின்றான். குதிரையின் சொந்தகாரன், 'நீதிபதி அவர்களே தங்களுக்கு உண்மை தெரிய வேண்டும் என்பதற்காகவே ஊமை போல நடித்தேன். என்னை மன்னித்து விடுங்கள்' என்றான். வழக்கு தொடுத்தவனைக் கடுமையாகக் கண்டித்து அனுப்பிய நீதிபதி குதிரை சொந்தக் காரனின் அறிவு கூர்மையைப் பாராட்டினார்.

-- மௌனமாய் இருந்தும் சாதிக்கலாம் --

## என் செல்லப்பிராணி



நான் வளர்க்கும் செல்லப்பிராணி நாய்க்குட்டி. அவனது பெயர் டோனி. அவனும் நானும் சேர்ந்து பந்தடித்து விளையாடுவோம். என்னுடைய தோழன் டோனி ஆகும். அவன் இறைச்சியும், முட்டையும் விரும்பி சாப்பிடுவான். என் அப்பா அவனை என் பிறந்தநாள் பரிசாக தந்தார். நான் படிக்கும் போதும் தூங்கும் போதும் என்னுடனேயே இருப்பான். எனக்கு அவனை மிகவும் பிடிக்கும்.

*ந. ரக்ஷிதா, தரம் - 02*
*திருகோணமலை*



ஸ்ரீ. ஸ்ரீவரன்
கடற்காட்சி வீதி,
திருகோணமலை

வளர்ந்த பின் வளைவது
பெருமை
வளைந்தே இருப்பது
சிறுமை

## மாசற்று வாழ்



அன்புள்ள தம்பி தங்கையரே
அம்மா அப்பா முதற்தெய்வம்
அடுத்தபடியாய் கற்பிக்கும்
ஆசான் அறிவுதரும் தெய்வம்!

என்றும் அமைதிதரும் தெய்வம்
இறைவனைத் தவிர யாருமில்லை
ஒன்றே குலமென்றுணர்ந்து
உண்மைபேசி வாழ்ந்திடணும்!

பண்பு தவறாத பிள்ளையாக
படித்து வாழ்வில் முன்னேறணும்
அன்பே சிவமென அறிந்திடணும்
அறிவை வளர்க்க வாசிக்கணும்!

கொன்று உண்பதை வெறுத்திடணும்
குற்றம் புரிவதை தவிர்த்திடணும்
நன்மைகள் செய்யாது வாழ்ந்தாலும்
தீமைகள் செய்யாது வாழ்ந்திடணும்

கண்போல் தமிழை பேணவேணும்
கற்றலைக் கசடறக் கற்க வேணும்
மாண்புள்ள மனிதத்தை மதித்து
மாசற்ற மக்களாய் வாழவேணும்!

- சேனையூரான் -

## பொது அறிவு - 02

இப்பொது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும்.

01. அஞ்சல் அலுவலகம் மூலமாக பணம் அனுப்பும் முறை யாது? காசுக் கட்டளை

02. 2012 இல் மத்திய வங்கியின் தலைவர் யார்? மரியோ டிராகி

03. கொழும்பு பரிவர்த்தனை நிலைய உரிமையாளர் யார்? பங்குத்தரகு நிறுவனம்

04. 2014 இல் 7 ஒஸ்கார் விருது பெற்ற திரைப்படம் எது? கிரேவிற்றி

05. 2014 இல் மையில்லா புதிய வகைப் பேனாவை அறிமுகப்படுத்திய நாடு எது? இத்தாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகாம்கள்....

முகாம் வாழ் மக்கள் கடுமையான நோய்த் தொற்றுக்களுக்கு ஆளாகும் நிலையும் தோன்றியுள்ளது.

முகாம்களை விட்டு வேறு இடங்களுக்கு மக்களை நகர்த்துவதில் எழுந்துள்ள அரசியல் சிக்கல்களை அடுத்து மக்களை நீர்வடியும் முன்னரே முகாம்களுக்குள் வாழ நிர்ப்பந்திக்கும் நிலையொன்று அங்குள்ளதாகவும் தெரியவருகின்றது.

அதேவேளை நிவாரண உதவிகளை வெளி நபர்கள் வழங்குவதற்கு சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் 26ம் திகதி தேசிய பத்திரிகையொன்றின் திருகோணமலை முகாமையாளர் எடுத்துச் சென்ற உதவிப்பொருட்களை அங்குள்ள மக்களுக்கு வழங்க அனுமதிக்கப்படவில்லை என்றும் தெரியவருகின்றது.

கிழக்கு மாகாண சபையின் திருகோணமலை உறுப்பினர்கள் திரு. நாகேஸ்வரன் மற்றும் ஜனார்த்தனன் ஆகியோர் உணவு உதவிகளை தடைப்படாமல் வழங்கிவருகின்றனர். இவர்களுக்கு தமிழ்ப் பிரதேசசபை உறுப்பினர்கள் பெரும் ஆதரவு வழங்கி வருவதாகவும் தெரிகின்றது.

வெள்ள நிலைமைகள் தொடர்பாக மூதூர் பிரதேசசபைத் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் நாகேஸ்வரன் பலருடன் தொடர்புகொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்க உதவிசெய்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## திருகோணமலை...

சேறுநுவர ஆகிய பிரிவுகளுக்கு பொறுப்பான உதவிப் காவல் அத்தியட்சகராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். பாணந்துறை பிரிவிற்கு பொறுப்பாக கடமையாற்றி வந்த உதவி காவல் அத்தியட்சகர் பீ.எம்.கே.டி. பலிஸ்கார பதுளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பதுளை பிரிவிற்கு பொறுப்பாக கடமையாற்றி வந்த உதவி காவல் அத்தியட்சகர் ஏ.டி. பிரேமதிலக்க காவல் வைத்திய சேவை பிரிவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## அவதூறுகளை...

சார்பாக செய்யும் செயற்பாடுகளை மழுங்கடிக்கக் கூடாது.

மக்களோடு மக்களாக இருக்கும் அரச அதிகாரிகள் அனர்த்தம் ஏற்படுகின்ற போது அறிக்கைகளை விட்டுகொண்டு இருக்க முடியாது. மக்களை அனர்த்தத்தில் இருந்து மீட்டு, மீண்டும் அவர்களது சொந்த இடத்தில் குடியேற்றும் வரை எங்களின் முழுமையான பார்வை அவர்களுடனே இருக்கும்.

அத்தோடு இதற்கான நிதியினை பெற்று அதனை உரிய முறையில் மக்களின் செயற்பாட்டிற்கு பங்களிப்பு செய்யும் வரை நாங்கள் மிகவும் அவதானத்துடனே இருப்போம். பாரிய வேலைப்பழுவுக்கு மத்தியில் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்காகச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் போது இவ்வாறான அவதூறான செய்திகளை ஊடகங்கள் வெளியிடக் கூடாது.

செய்திகளை வெளியிடும் ஊடகங்கள் அந்த செய்திகளை உரியவரிடம் கேட்டு அதனை உறுதிப்படுத்துதல் ஊடக தர்மமாகும். அவ்வாறான ஊடக தர்மத்தினை பேணாமல் இணையதளங்களில் செய்தியினை வெளியிடக்கூடாது. இதனை வன்மையாகக் கண்டிக்கின்றேன். இவ்வாறான செய்திகள் மீண்டும் வராமல் பார்த்துக் கொள்வது மக்கள் சார்பாக செயற்படுகின்ற ஒவ்வொரு ஊடகங்களின் தலையான கடமையாகும். என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நிவாரணப்...

திரட்டப்படும் நிவாரணங்கள் உரிய பிரதேசச் செயலாளரிடம் கையளிக்கப்படவேண்டும் என கட்டளை இடப்பட்டிருப்பதாகவும் அவரின் கீழியங்கும் அரச எந்திரத்தின் ஊடாகவே நிவாரணப் பொருட்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் என் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது.

சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்படாத மக்கள் வாழும் இடைத்தங்கல் முகாம்களுக்குள் மக்கள் செல்லவும் நிவாரணப் பொருட்களை வழங்கவும் ஏன் முடியாது என்று ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## பேராயரின்....

பணிக்கமர்த்தப்பட்டுள்ளார்.

மேலும் இவ்விணையத்தளச் செய்தியானது தொடர்கையில் ருவாணி பொருத்தமான கல்வித்தகுதிகளைக் கூடப் பெற்றிராத நிலையில் பேராயரின் வேண்டுகோளுக்கு அமையவே அவர் பிலிப்பைன்ஸ் தலைநகரான மணிலாவில் முன்னர் நியமனம் பெற்றிருந்ததாகவும் இச்செய்தி வலைத்தளம் குறிப்பிட்டுள்ளது.

## கைதாணை....

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அங்கத்தவர் சந்தன் ஹேமந்தவுடன் கடுமையான வாய்த்தர்க்கத்தில் குணவர்த்தன ஈடுபட்டதைத்தொடர்ந்து குறித்த பிரதேசசபை அங்கத்தவர் காணங்களுக்குள்ளான நிலையில் குமரக்கடவை (கோமரங்கடவல) வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிகச் சிகிச்சைகளுக்காக பொது வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டிருந்தார்.

அதே வேளை இத் தாக்குதல் தொடர்பாக குணவர்த்தனவும் குமரக்கடவைக் காவல்துறையில் புகாரொன்றை அளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

குணவர்த்தன ஆளும்கட்சியின் பிரதி அமைச்சர்களுள் ஒருவராகத் தொழிற்பட்டு சதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறிய எதிரணி வேட்பாளரான மைத்திரிபால ஸ்ரீசேனாவுடன் வெளியேறியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்சி தாவிய போது தனக்கு அவ்வாறு செய்யமலிருக்க 150 மில்லியன் ரூபா பேரம் பேசப்பட்டதாகத் தெரிவித்து ஒரு சர்ச்சையை இவர் உருவாக்கியிருந்தார். அவ்வூடகச் செவ்வியில் தானும், மைத்திரபாலவும் சுட்டுக்கொல்லப்பட்டால் அதற்கும் சுதந்திரக் கட்சியே காரணம் எனத் தெரிவித்திருந்த அவர் 5000 ரூபாய் நோட்டுக்களை ஒரு கப்பல் முழுவதும் ஏற்றித் தனக்குப் பரிசளித்தாலும் தான் மீண்டும் அரசுடன் இணையப் போவதில்லை என்றும் தெரிவித்திருந்தார்.

## பிரியந்த....

அறிவித்த பத்திரன, செய்தியாளர் சந்திப்பில் இதனைக் குறிப்பிட்டுள்ளார். நாட்டில் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருக்கின்றேன்.

நாட்டில் இளைஞர் கிளர்ச்சி ஒன்று ஏற்படுவதனை தவிர்க்கவே மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிக்கின்றேன். புலிகளை இல்லாதொழிக்க கருணாவுக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தேன். நானும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவும் சேர்ந்தே கருணாவை இந்தியாவிற்கு அறிமுகம் செய்து வைத்தோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தமிழர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை நான் செய்திருக்கின்றேன்.

நாட்டை மீளவும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம்மிடம் உண்டு. அந்த வகையில் இம்முறைத் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிக்கின்றேன் என பத்திரன தெரிவித்துள்ளார்.

## சிறுபான்மை.....

கருத்துக்கூறுகையில்,

அன்பும், அமைதியும் இலங்கைக்கு மட்டுமல்ல உலகுக்கும் தேவைப்படுகின்றது என்பதை இன்றைய கிறிஸ்து பிறப்பு எமக்கு தெரிவிக்கின்றது. இலங்கையில் போர் முடிவுற்று ஐந்து ஆண்டுகள் கடந்திருக்கும் நிலையில் நாட்டுக்கும் எமது மக்களுக்கும் இன்னும் சுதந்திரம், சமாதானம் கிடைத்ததாக இல்லை. சிறுபான்மை சமூகங்களை சேர்த்து அரவணைத்துக்கொண்டு செல்லக்கூடிய தலைவர்கள் இன்று எமக்குத் தேவைப்படுகின்றது என அவர் தெரிவித்தார்.

## பத்மநாபா.....

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவான மாகாண சபைகளுக்கு 13வது திருத்தச் சட்டத்தின் கீழான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவது முழுமைப் படுத்தப்படுத்தலுடன், அரசியல் அமைப்பின் 18வது திருத்தம் நீக்கப்பட்டு ரத்துச்செய்யப்பட்ட 17வது திருத்தத்தை மீளக் கொண்டு வருதல் மூலம் சுதந்திரமான பொலிஸ்சேவை, நீதிச்சேவை மற்றும் தேர்தல் ஆணைக்குழுக்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என நாம் உணர்கிறோம்.

ஊழலற்ற பாரபட்சமில்லாத மக்களுக்கு நெருக்கமான நிர்வாகம் நாட்டின் எல்லா மட்டங்களிலும் நிலவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

மேற்படி எதிர்பார்ப்புக்களுடன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது அணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனாவை ஆதரிப்பதற்கு பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தீர்மானித்துள்ளது எனத் தெரியவந்துள்ளது.

## தாழமுக்கம்....

கிழக்கு, தென்கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளின் கடற்பகுதியானது கொந்தளிப்புடன் ஆபத்தானதாகக் காணப்படும்" என எச்சரித்திருக்கும் வளிமண்டலவியல் திணைக்களம் காற்றானது கடற்பரப்பின் வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி மணிக்கு 60 கிலோ மீற்றர் முதல் 70 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் வீசும் என்றும் அறிவித்துள்ளது. இப்பகுதியில் காற்றின் வேகமானது மணித்தியாலயத்துக்கு 80 கிலோ மீற்றர்வரை அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவும் வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவு போன்ற அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 6 இலட்சத்து 44 ஆயிரத்து 410 ஆக உயர்ந்துள்ளது. ஒரு இலட்சத்து 79 ஆயிரத்து 135 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட மூவர் உயிர் இழந்திருப்பதுடன் பலர் காயமடைந்திருப்பதாகவும் 17 மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட 22 ஆயிரத்து 942 குடும்பங்களைச் சேர்ந்த 80 ஆயிரத்து 963 பேர், 333 பேர் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. 3,500 வீடுகள் முற்றாகவும், 11,241 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

கிழக்கு மாகாணமே மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு ஒரு இலட்சத்து 52 ஆயிரத்து 221 குடும்பங்களைச் சேர்ந்த 5 இலட்சத்து 47 ஆயிரத்து 197 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் ஒரு இலட்சத்து 24 ஆயிரத்து 71 குடும்பங்களைச் சேர்ந்த 4 இலட்சத்து 43 ஆயிரத்து 691 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இங்கு இடம்பெயர்ந்துள்ள 41,419 பேர் 103 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் 67,337 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## எங்களுக்கு அமைச்சுப்...

காத்தான்குடியில் கிழக்கு மாகாணசபை உறுப்பினர், பொறியியலாளர் சிப்லி பாறூக்கின் இல்லத்தில் வியாழக்கிழமை (25) மாலை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"கடந்த 2005ஆம் மற்றும் 2010ம் ஆண்டு காலப்பகுதிகளில் ஜனாதிபதி மஹிந்தவை வெற்றியடையச் செய்வதற்கு கடுமையாக உழைத்தோம். சமாதானத்தை கொண்டுவந்துவிட்டார். அவருக்கு இன்னுமொரு சந்தர்ப்பத்தை கொடுக்கவேண்டும் என்று நாடு முழுக்க அலைந்துதிரிந்து பிரசாரம் செய்தேன். அன்று நாங்கள் செய்த பிரசாரம் ஜனாதிபதிக்கு, அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு நன்கு தெரியும்.

அளுத்கமவில் இறுதியாக முஸ்லிம்களுக்கு இடம்பெற்ற அநியாங்கள் தெரியும். பரிதாபமாக உயிர்கள் பலியாகின. 1983ஆம் ஆண்டு கலவரத்துக்கு பின்னர் அளுத்கம கலவரம் பெரிய கலவரம் எனவும் முஸ்லிம்கள் மீது காட்டிய அட்டகாசத்தையும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்காததையும் நான் அமைச்சரவையில் ஜனதிபதிக்கு எடுத்துக்கூறினேன். அப்போது ஜனாதிபதி என்னுடன் முரண்பட்டார்.

## நா.உ பியசேன.....

வழங்கவுள்ளதாக இணையத்தளத்தில் செய்தி பிரசுரித்துள்ளனர். இது உண்மைக்குப் புறம்பான செய்தியாகும். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ச அவர்களின் வெற்றிக்காக அம்பாறை மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம், சிங்களப் பிரதேசங்களில் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்தி வருகின்றேன்.

பணத்திற்காக நான் ஒரு போதும் சோரம் போகமாட்டேன். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு ஒருபோதும் நான் விலகிச் செல்லமாட்டேன் என பியசேன கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பதவி ஆசை

## அண்ணன் எப்ப சாவான்: திண்ணை எப்ப காலியாகும்



கடந்தவார தொடர்ச்சி .. ..

**அபூபக்கர்(ச) அவர்கள் மக்காவைச் சேர்ந்தவர்கள்:**
நன்றி செலுத்தி வாழ்பவர்களுக்கு அல்லாஹ் அதற்குரிய பிரதி பலனை மிக விரைவில் வழங்குவான்' என்னும் (திருக்குர்ஆன் 03:144-ம்) இறை வசனத்தையும் ஓதினார்கள். உடனே மக்கள் (துக்கத்தால் தொண்டையடைக்க) விம்மியழுதார்கள்.

அன்சாரிகள் (தம்) 'பனூ சாஇதா' சமுதாயக் கூடத்தில் ஒன்று கூடி (தம் தலைவர்) ஸஅத் இப்னு உபாதா(வ) அவர்களிடம், 'எங்களில் ஒரு தலைவர் உங்களில் ஒரு தலைவர் (ஆக இருவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வோம்' என்று முஹாஜிர்களிடம் சொல்வோம்)' என்று பேசிக் கொண்டார்கள். அப்போது அபூ பக்கர், உமர் இப்னு கத்தாப், அபூ உபைதா இப்னு ஜர்ராஹ்(வ) ஆகியோர் (ஆட்சித் தலைவரை முடிவு செய்ய) அன்சாரிகளிடம் வந்தனர். உமர்(வ) பேசப் போனார்கள். உடனே அவர்களை அபூ பக்கர்(வ) மௌனமாக இருக்கச் சொல்லிவிட்டார்கள். (இதைப் பிற்காலத்தில் நினைவு கூரும் போது) உமர் அவர்கள், 'அல்லாஹ்வின் மீதாணையாக! நான் பேச முயன்றது எதற்காக என்றால், நான் எனக்குப் பிடித்த பேச்சு ஒன்றைத் தயாரித்து வைத்திருந்தேன். அபூ பக்ர் அவர்கள் அந்த அளவிற்குப் பேச மாட்டார்கள் என்று நான் அஞ்சினேன். எனவேதான் நான் பேச முயன்றேன்' என்று கூறி வந்தார்கள்.

பிறகு, அபூ பக்கர்(வ) பேசினார்கள். மக்களிலேயே உரை நயம் மிக்கவர்களாக அவர்கள் பேசினார்கள். அவர்கள் தம் பேச்சில், '(குறைஷிகளாகிய) நாங்கள் ஆட்சித் தலைவர்களாயிருப்போம் (அன்சாரிகளான) நீங்கள் அமைச்சர்களாயிருங்கள்' என்று கூறினார்கள். உடனே, (அன்சாரியான) *ஹபாப் இப்னு முன்திர்(வ), 'இல்லை! அல்லாஹ்வின் மீதாணையாக! நாங்கள் இதற்கு ஒப்புக் கொள்ள மாட்டோம். எங்களிடையேயிருந்து ஒரு தலைவரும் (தேர்ந்தெடுத்துக் கொள்வோம்) என்று கூறினார்கள். அதற்கு அபூ பக்கர்(ரலி), 'இல்லை நாங்களே தலைவர்களாயிருப்போம். நீங்கள் அமைச்சர்களாயிருங்கள். ஏனெனில், குறைஷிகள் தாம் அரபுகளில் சிறந்த ஊரை (மக்காவை)ச் சேர்ந்தவர்களும், சிறந்த செயல்திறன் மிக்கவர்களும் ஆவர். எனவே, உமர் இப்னு கத்தாப், அல்லது அபூ உபைதா இப்னு அல்ஜர்ராஹ்விற்கு (தலைமைக்கான) விசுவாசப் பிரமாணம் செய்யுங்கள்' என்று கூறினார்கள்.

தொடரும் .. ..




# கிறிஸ்மஸ் ஸ்பெஷல்

## பிரியாணி – மீன்



### தேவையான பொருட்கள்

மீன் - 1/4 கிலோ, அரிசி - 2 ஆழாக்கு, வெங்காயம் - 150 கிராம், தக்காளி - 150 கிராம், இஞ்சி, பூண்டு விழுது - 2 தே.கரண்டி, புதினா, கொத்தமல்லி இலை - 1/4 கட்டு, மிளகாய்த்தூள் - 1 தே.கரண்டி, தனியாத்தூள் - 1 தே.கரண்டி, மஞ்சள்தூள் - 1/4 தே.கரண்டி, தயிர் - 1 கப், உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - 1/2 குழிக் கரண்டி

### செய்முறை

மீனை சுத்தம் செய்து துண்டுகளாக்கவும். பின்னர் வெங்காயம், தக்காளியை பொடியாக நீள வாக்கில் நறுக்கவும். மிளகாயைக் கீறிக்கொள்ளவும். ஒரு அகலமான பாத்திரம் அல்லது குக்கரில் எண்ணை ஊற்றி காய்ந்ததும் பட்டை, லவங்கம் சேர்த்து தாளிக்கவும். பின் வெங்காயம், இஞ்சி பூண்டு விழுது, தக்காளி, புதினா, கொத்தமல்லி இலை இவற்றை ஒன்றன் பின் ஒன்றாகச் சேர்த்து வதக்கவும். தயிர் மற்றும் போதுமான அளவு உப்பு சேர்த்து மீனை வதக்கவும். தொடர்ந்து மிளகாய்த்தூள், தனியாத்தூள், மஞ்சள் தூள் சேர்க்கவும்.

பாசுமதி அரிசி ஒன்றரை பங்கும், சாதா அரிசி 2 பங்கும் சேர்த்து வேக வைக்கவும். பாத்திரத்தில் "தம்" சேர்த்து (ஆவி போகாமல் மூடி வைத்து) சிறிது நேரத்தில் இறக்கவும். குக்கரில் ஒரு விசில் வந்ததும், குறைந்த தீயில் வைத்திருந்து அடுப்பை அணைத்து விடவும்.

---

அழகு குறிப்பு

## பளபள முக சருமத்திற்கு



பொதுவாக பெண்கள் தங்களது முகத்தை பளிச்சென்று வைக்க வேண்டும் என்பதில் மிகவும் விரும்புர். ஆனால் முகத்தில் கரும்புள்ளிகளும் கருந்திட்டுகளும் வந்துவிட்டால் சோகத்தில் ஆழ்ந்துவிடுவர். இப்பிரச்சனையை கையாள சிறந்தது தக்காளி பேஷியல்.

### தக்காளி பேஷியல்

உருளைக்கிழங்கு துருவல் சாறு - 1 தே.கரண்டி, தக்காளி விழுது - அரை தே.கரண்டி

இந்த இரண்டையும் கலந்து கொள்ளுங்கள். இந்த பேஸ்ட்டை கழுத்திலும் முகத்திலும் தடவி 5 நிமிடம் கழித்துக் கழுவுங்கள். முகத்திலுள்ள செல்கள் இறந்து பொலிவிழந்து காணப்படும். முகத்திற்கு இந்த பேஷியலை போட்டால் முகம் கண்ணாடியை போல் பளிச்சென இருக்கும்.

ஒரு தக்காளியின் சாறுடன் கால் தேகரண்டி ரவையைக் கலந்து கொள்ளுங்கள். பிறகு இதை நன்றாக முகத்தில் தேய்த்துக் கழுவுங்கள். இதை தொடர்ந்து செய்து வந்தால், முகம் சூரியனை போல் பிரகாசிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.






# காய்கறிகளின் மருத்துவ பலன்கள்



பூமிக்கடியில் விளையும் காய்கறிகள் ஏராளமான மருத்துவ பலன்களை தருகிறது.

### பீட்ரூட்

பீட்ரூட் சர்க்கரை நோய் மற்றும் ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தும். மலச்சிக்கலை குணப்படுத்தி வயிற்றை ஆரோக்கியமாக வைக்கும். உடலில் உள்ள கொழுப்பை கரைக்கும், உடலுக்கு புத்துணர்ச்சி கொடுக்கும், எலும்புருக்கி நோயில் இருந்து பாதுகாக்கும்.

### முள்ளங்கி

முள்ளங்கியானது தொண்டை சம்பந்தமான நோயை குணமாக்குவதோடு, குரலை இனிமையாக்குகிறது. பசியை தூண்டக்கூடியது, சிறுநீர் அடைப்பை போக்கும் மருந்தாகவும் பயன்படுகிறது. மேலும் வெட்டை நோய், முடி உதிர்தல் ஆகியவற்றை குணப்படுத்த வல்லது. முள்ளங்கி சூப் குடித்தால் நரம்பு சுருள்கள் நீங்கும். அதிக நோய் எதிர்ப்பு சக்தியை பெற்றுள்ள முள்ளங்கியில் உடலுக்கு தேவையான வைட்டமின் சத்துகளும் தாது உப்புகளும் நிறைந்துள்ளது.

### கரட்

கேரட்டில் வைட்டமின் பி1, பி2, பி6 மற்றும் வைட்டமின் ஏ, வைட்டமின் கே, பையோடின், நார்ச்சத்து, பொட்டாசியம் மற்றும் தையமின் போன்ற சத்துகள் நிறைந்துள்ளன. மேலும் ஆய்வின் மூலம் புற்றுநோய் எதிர்ப்பு சக்தி கேரட்டில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கேரட் சாப்பிடுவதால் கண்பார்வை கூர்மையாகும். எனவே தினமும் ஒரு கேரட் சாப்பிடுவதால் மார்பகம், கல்லீரல், குடல் புற்றுநோய் மற்றும் மாலைக்கண் நோய் வருவதை தடுக்கலாம்.

### இஞ்சி



இஞ்சியானது சமையலில் சேர்க்க வேண்டிய முக்கியமான ஒன்று. குழம்பு, துவையல், வடை ஆகியவற்றில் இஞ்சி முக்கிய பங்காற்றுகிறது. இஞ்சியானது இரைப்பைக்கு பலம் சேர்க்கும். பசியைத் தூண்டும், அஜீரணத்தை போக்கும், கபத்தை குணப்படுத்தும், ஈரலில் உள்ள கட்டுகளை கட்டுப்படுத்தும். அஜீரணத்தால் ஏற்படும் பேதியைக் குணப்படுத்த வல்லது.

### உருளைக்கிழங்கு

உருளைக்கிழங்கானது வாயு மற்றும் எடையைக் கூட்டுவதால் சமையலின் போது இஞ்சி, புதினா அல்லது எலுமிச்சம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை பயன்படுத்தவும். உருளைக்கிழங்கில் உடலுக்கு வெப்பம் தரும் கார்போஹைட்ரேட் எனும் மாச்சத்து அதிகம் உள்ளது. மாச்சத்து அதிகம் உள்ளதால் இவை அடிவயிறு மற்றும் இரைப்பையில் உள்ள குழாய்களில் ஏற்படும் வீக்கத்தையும், அவற்றில் நச்சுநீர் தேங்குவதையும் குணப்படுத்துகிறது. மேலும் உருளைக்கிழங்கில் அதிக கலோரிகள், வைட்டமின்கள், தாது உப்புகள் மற்றும் நார்ச்சத்துகள் நிறைந்துள்ளது.



### கருணைக்கிழங்கு

கருணைக்கிழங்கு சாப்பிடுவதால் கபம், வாதம், ரத்த மூலம், முளை மூலம் ஆகியன குணப்படுகின்றன. மேலும் கருணைக்கிழங்கு பசியைத் தூண்டி இரைப்பைக்கு பலம் சேர்க்கும். இதை சமைக்கும் போது இதனுடன் சிறிது புளியை சேர்த்து சமைத்தால் நமநமப்புத் தன்மை நீங்கும்.

---

## நாளடைப்பு நோய் – தீர்வு



கால்களில் வளைந்து பருத்து வீங்கிக் கிடக்கும் இரத்தக் குழாய்களான நாளங்களே வரிக்கோஸ் வெயின்ஸ் என அழைக்கப்படுகிறது. ஆரம்ப நிலையில் அசிங்கமாகத் தோற்றமளிப்பது மட்டுமே இதன் பாதிப்பு என்பதே உண்மை. ஆயினும் நாட்பட்டால் கால்களில் புண், எக்ஸிமா, நிறமாற்றம் போன்ற பிரச்சனைகள் வரலாம்.

பொதுவாக இது வருவதைத் தடுக்க முடியாது. பரம்பரையில் வருவது அதிகம். இருந்தபோதும் சில நடைமுறைகளைக் கையாள்வதன் மூலம் அது மோசமடையாது தவிர்க்கலாம்.

### அதற்கு செய்ய வேண்டியவை

- நீண்ட நேரத்திற்கு ஒரே இடத்தில் நிற்கவோ உட்கார்ந்திருக்கவோ கூடாது. இடையிடையே எழுந்து நடப்பது, கால்களை அசைப்பது நல்லது.
- உட்கார்ந்திருக்கும்போது கால்களைத் தொங்க விடாதீர்கள். ஸ்டூல் போன்றவற்றில் உயர்த்தி வையுங்கள்.
- படுக்கும்போதும் தலையணை வைத்து கால்களை உயர்த்தவும். அவ்வேளைகளில் இதயத்தை விட கால்களை உயர்த்தி வைத்திருப்பது நல்லது.
- உங்கள் எடை அதிகமாக இருந்தால் அதைக் குறைப்பதற்கான உணவு முறை உடற் பயிற்சி ஆகியவற்றை செய்யுங்கள். எடை குறைந்தால் அவற்றிற்காக குருதி ஓட்டத்தை அதிகரிக்கும்.

---



## இவ்வார ராசிபலன்கள்

**மேஷம் :** உங்கள் செயலில் வேகம் கூடும். உடன்பிறந்தவர்கள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள்.

**ரிஷபம் :** மாறுபட்ட யோசனைகள் உங்கள் மனதில் உதிக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி தங்கும்.

**மிதுனம் :** இருந்த சோர்வு, சலிப்பு யாவும் நீங்கும். குடும்பத்தில் அமைதி நிலவும்.

**கடகம் :** தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**சிம்மம் :** கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும்.

**கன்னி :** பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள்.

**துலாம் :** உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள்.

**விருச்சிகம் :** பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

**தனுசு :** சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பேச்சில் முதிர்ச்சி தெரியும். வியாபாரத்தில் அதிரடியான திட்டம் தீட்டுவீர்கள்.

**மகரம் :** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும்.

**கும்பம் :** திடீர் சங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கித் தவிப்பீர்கள்.

**மீனம் :** உடல் அசதி, சோர்வு வந்து விலகும். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

## காலப் பந்தாட்ட தொடர்

சமபோஷ வர்த்தகமானது, அண்மையில் தொடர்ந்து 6ஆவது ஆண்டாக பாடசாலைகளுக்கிடையேயான உதைப்பந்தாட்ட போட்டித்தொடரிற்கு அனுசரணை வழங்கியிருந்தது. மிகச்சிறந்த 32 ஆண்கள் அணிகள் மற்றும் 24 பெண்கள் அணியினர் பங்குபற்றிய போட்டிகளின் இறுதி நிகழ்வு டிசெம்பர் 2 முதல் 5 ஆம் திகதி வரை களுத்துறையில் இடம்பெற்றது. இந்த போட்டியை இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனம் மற்றும் இலங்கை பாடசாலைகள் உதைப்பந்தாட்ட சங்கம் இணைந்து ஒழுங்கு செய்திருந்தது. இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ரன்ஜித் ரொட்ரிகோ இந்த போட்டியின் வெற்றி குறித்து தெரிவித்ததாவது, "இலங்கையில் உதைப்பந்தாட்ட நட்சத்திரங்களை அடையாளம் காணும் வகையில் நாடளாவிய ரீதியில் இடம்பெறும் இப் போட்டி வருடாந்தம் நடைபெறுகிறது. ஆர்வமுள்ள இளம் உதைப்பந்தாட்ட வீரர்கள் உந்துசக்தியுடன் போட்டியிடுவதற்கு சிறந்த களமாக இப்போட்டி விளங்குகிறது. இலங்கையில் இளம் உதைப்பந்தாட்ட வீரர்களுக்கு பெறுமதி வாய்ந்த வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்த CBL மற்றும் சமபோஷவின் அனுசரணைக்கு நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம்" என்றார்.




## யாழ் மைதானம் புனரமைப்பில்

யாழ்ப்பாணத்தின் தேவையாக இருந்த நவீன வசதிகளைக்கொண்ட விளையாட்டுமைதானம், தற்போது யாழ். துரையப்பா மைதானத்தின் புனரமைப்பு மூலம் நிறைவேறவுள்ளது.

கழகங்கள் நடத்தும் விளையாட்டுப்போட்டிகள் தொடக்கம் தேசிய மட்ட விளையாட்டுப்போட்டிகள் வரை துரையப்பா மைதானத்தில் நடத்தப்படுகின்றன. மாநகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள இந்த மைதானத்தை புனரமைத்து, யாழ்ப்பாணத்திலுள்ள விளையாட்டு வீரர்களுக்கு வழங்கவேண்டும் என்பதே பலரது கோரிக்கையாக இருந்தது. அதற்குரிய பலன் இந்தியாவின் நிதியுதவியின் மூலம் கிடைக்கப்பெற்றது. இந்த மைதானத்தை புனரமைத்து, நவீன வசதிகள் கொண்ட மைதானமாக்கும் பொருட்டு, இந்திய அரசாங்கத்தால் 145 மில்லியன் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது.

புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு எதிர்வரும் 2015ஆம் ஆண்டு மே மாதத்துக்கு முன் மைதானம் பாவனைக்கு விடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.





## சோட்டக்கன் கராத்தே சுற்றுப் போட்டி

மட்டக்களப்பு மாவட்ட சோட்டாக்கன் கராத்தே சங்கம் நடாத்திய மாபெரும் கராத்தே சுற்றுப்போட்டி மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (14.12.2014) நடைபெற்றது. "கிழக்கு மாகாணத்தின் கராத்தே சுற்றுப்போட்டியின் வரலாற்றில் மாபெரும் சம்பியன் சுற்றுப்போட்டியாக இந்த போட்டி நடத்தப்பட்டது. பரிசளிப்பு விழா மட்டக்களப்பு மாவட்ட சோட்டாக்கன் கராத்தே சங்கத்தின் தலைவரும் பிரதம பயிற்றுவிப்பாளருமான கே.ரி.பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன் சிறப்பு அதிதியாக கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் மதிவண்ணன், மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஈஸ்பரன் உட்பட பலர் கலந்துகொண்டனர். இதன்போது, வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் பதக்கங்களும் அதிதிகளால் அணிவிக்கப்பட்டதுடன், மட்டக்களப்பு மாவட்ட சோட்டாக்கன் கராத்தே சங்கத்தில் பயிற்சியை நிறைவு செய்து பயிற்சியாளர் பயிற்சிகளையும் நிறைவு செய்தவர்களுக்கான பயிற்சியாளர் அடையாள அட்டைகளும் வழங்கிவைக்கப்பட்டன.







## இளம் வீராங்கனை மொடலிங்கில்

கனடாவின் இளம் டெனிஸ் வீராங்கனை பவுச்சர்ட் (20 வயது). இந்த ஆண்டில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இவர் இ அவுஸ்திரேலிய ஓப்பன்இ பிரெஞ்ச் ஓப்பன் தொடர்களில் அரையிறுதிக்கு முன்னேறினார். தவிர கிராண்ட்ஸ்லாம் தொடரில் இறுதியாட்டத்துக்கு (விம்பிள்டன்) தகுதி பெற்ற முதல் கனடா வீராங்கனை என்ற பெருமை பெற்றவர். தற்போது தரவரிசையில் 7 ஆவது இடத்தில் உள்ள இவருக்கென தனி இரசிகர்கள் பட்டாளம் உருவாகியுள்ளது.

5 அடி, 10 அங்குல உயரமுள்ள இவர், தனது கிறங்கடிக்கும் அழகால் டெனிஸ் இரசிகர்களை மயக்கி வைத்துள்ளார். தற்போது ரஷ்யாவின் அனோ கோர்னிகோவா, ஷரபோவா, செர்பியாவின் இவானோவிச் போல மொடலிங் துறையிலும் கால்பதித்து அசத்தவுள்ளார் பவுச்சர்ட். இதற்காக உலகின் பிரபல மொடலிங் நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஆகியுள்ளார்.

இது குறித்து பவுச்சர்ட் கூறுகையில் "மொடலிங் துறையில் நுழைந்து சாதிக்க வேண்டும் என்பது எனது சிறுவயது எண்ணம். தற்போது டபிள்யூ. எம்.இ.ஜ.எம். ஜி. நிறுவனத்துடன் இணைந்தது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது என்கிறார்.



## கட்டாரில் சாதனை மட்டக்களப்பு வீரர் வெற்றி



டோகா - கட்டாரில் அல்- றயான் விளையாட்டுக் கழகத்தினால் அண்மையில் இடம்பெற்ற தேசிய தின விளையாட்டுப் போட்டியில் கட்டார் நாட்டர்கள் மற்றும் கட்டாரில் தொழில் புரியும் இந்தியா, பாக்கிஸ்தான், பிலிப்பைன்ஸ், ங்காளதேஷ், நேபாளம், இலங்கை போன்ற பல்வேறு நாட்டவர்கள் பங்குகொண்ட விளையாட்டுப் போட்டியில் மட்டக்களப்பைச் சேர்ந்த வீரர் விளையாட்டுக்களில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார்.

## தீவிரவாதி விடுதலை கண்டனம் தெரிவித்தது கிரிக்கட் சங்கம்

இலங்கை கிரிக்கெட் அணி கடந்த 2009ஆம் ஆண்டு பாகிஸ்தான் கிரிக்கெட் அணியுடன் விளையாட சுற்றுப்பயணம் செய்த போது பாகிஸ்தானில் உள்ள கடாபி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி ஒன்றில் கலந்து கொள்ள பேருந்து ஒன்றில் வந்து கொண்டிருந்த இலங்கை கிரிக்கெட் அணியினர் மீது லஷ்கர் இ ஜாங்வி என்ற தீவிரவாத இயக்கத்தினர் மாலிக் இஷாக் என்பவர் தலைமையில் கடும் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதல் காரணமாக லஷ்கர் இ ஜாங்வி தடை செய்யப்பட்டு அதன் தலைவர் மாலிக் கைது செய்யப்பட்டார். பஞ்சாப் பிராந்திய தீவிரவாத தடுப்பு நீதிமன்றம் அவரை விடுதலை செய்துள்ளது. இந்த விடுதலைக்கு இலங்கை கிரிக்கெட் போர்டு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

## மனைவிக்கு மட்டுமல்ல காதலிக்கும் அனுமதி

இந்திய கிரிக்கெட் வீரர்கள் தற்போது அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகின்றனர். இந்த சுற்றுப் பயணத்தின் போது இந்திய வீரர்களின் மனைவிகள் மட்டுமே உடனிருக்க முடியும். காதலிகளுக்கு அனுமதியில்லை என்று இந்திய கிரிக்கெட் சபை அறிவித்தது. அவுஸ்திரேலியாவில் 3 ஆவது டெஸ்ட் போட்டி நடைபெறும் காலத்தில் தான் புத்தாண்டும் பிறக்க உள்ளது. புத்தாண்டின் போது மனதுக்கு பிடித்தவர்களுடன் இருக்க வீரர்கள் விரும்புகின்றனர் என்பதால் மனைவிகள் மட்டுமன்றி காதலிகளும் வீரர்களுடன் நேரத்தை செலவிடலாம் என்று கிரிக்கெட் அனுமதியளித்துள்ளது.

## சச்சினை பின்னுக்குத் தள்ளிய கோஹ்லி



சமூக வலைத்தளமான டுவிட்டரில் அதிக ரசிகர்கள் பின்பற்றும் விளையாட்டு நட்சத்திரங்கள் பட்டியலில் கிரிக்கெட் ஜாம்பவான் சச்சினை இளம் நட்சத்திரம் கோஹ்லி முந்தினார். டுவிட்டரில் சச்சினை 48 இலட்சத்து 69 ஆயிரத்து 849 ரசிகர்கள் பின் தொடர்கின்றனர். கோஹ்லியை 48 இலட்சத்து 70 ஆயிரத்து 190 ரசிர்கள் பின் தொடர்கின்றனர்.

## பெல்பேர்ணில் நிச்சயம் வெற்றி

இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் இரு போட்டிகளிலும் தோல்வியை சந்தித்த இந்திய அணி 2-0 என்ற கணக்கில் பின்தங்கி இருக்கிறது. இந்நிலையில் 3ஆவது டெஸ்ட் போட்டி மெல்போர்ண் நகரில் நேற்று ஆரம்பமாகியுள்ளது. இந்நிலையில் இது குறித்து அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித்தலைவர் பொண்டிங் கருத்து கூறுகையில், இந்திய அணி ஒரு போட்டியில் வெல்லும் என்றால் அது மெல்போர்ண் மைதானத்தில் தான். மெல்போர்ண் மைதான ஆட்டக்களம் இந்திய அணிக்கு பொருத்தமாக இருக்கும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாழமுக்கம் தொடரும்.... கிழக்குக் கடல் ஆபத்து...

# கிழக்கில் 600,000 பேர் பாதிப்பு



இலங்கைக்கு அண்மித்த வளிமண்டலத்தில் நிலவிய குழப்ப நிலை தாழமுக்கமாக வலுவடைந்திருப்பதுடன், இது இலங்கைத் தீவை அண்மித்து வருவதால் எதிர்வரும் சில நாட்களுக்கு நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் கடும் மழை பெய்யும் என வளி மண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கையின் தென்கிழக்கு வளிமண்டலப் பகுதியில் இந்த தாழமுக்கம் உருவாகியிருப்பதால், கிழக்கு, தென்கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் அதிகூடிய மழை வீழ்ச்சி காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி சூரியகுமார் தெரிவித்தார்.

இந்தப் பகுதிகளில் கடுமையான மழை வீழ்ச்சி காணப்பட்டாலும் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார். கிழக்கு, தென்கிழக்கு மற்றும் தென் மாகாணங்களின் கடற் பரப்பில் மழைவீழ்ச்சி அதிகமாகக் காணப்படுவதுடன் காற்றின் வேகமானது அதிகமாக இருக்கும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

17

## "நமது சமூகமே முக்கியம் அமைச்சுப் பதவியல்ல" -ரிசாட்

தங்களுக்கு அமைச்சுப்பதவி முக்கியம் அல்ல என்பதுடன், தமது சமூகமே முக்கியம் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

இதனாலேயே, அனைத்தையும் தூக்கி எறிந்துவிட்டு சமூகத்துக்காக அரசாங்கத்தை விட்டு வெளியேறியுள்ளதாகவும் அவர் கூறினார்.

சமூகத்துக்கு நடந்த அநீதியை பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. இதனால், வெளியேறுவதற்கு தருணம் பார்த்துக்கொண்டிருந்ததாகவும் அவர் கூறினார்.

17

## நா.உ பியசேன 100 கோடி கேட்டு வழக்கு

நான் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபாலவிற்கு ஆதரவு வழங்கவுள்ளதாக ஜே.வி.பி. நியூஸ் டொட்கொம் இணையத்தளத்தில் செய்தி பிரசுரித்துள்ளனர்.

இது உண்மைக்குப் புறம்பான செய்தியாகும் என திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பி.எச். பியசேன தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஜே.வி.பி. நியூஸ் டொட்கொம் என்ற இணையத்தளத்தில் என்னைப்பற்றி பொய்யான செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

நான் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபாலவிற்கு ஆதரவு

17

## திருகோணமலை காவல்துறை அத்தியட்சகர் இடமாற்றம்

மூன்று உதவி காவல் அத்தியட்சகர்களுக்கு உடனடி இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. காவல் மா அதிபர் என்.கே. இளங்கக்கோன் இந்த இடமாற்ற உத்தரவுகளை பிறப்பித்துள்ளார்.

பாணந்துறை பதுளை மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் கடமையாற்றி வந்த உதவி காவல் அத்தியட்சகர்களே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட உள்ளது.

திருகோணமலை பிரிவிற்குப் பொறுப்பாக கடமையாற்றி வந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் யு.ஏ. அத்தபத்து கந்தளாய்

17

## திருகோணமலையில் நிவாரணங்களை நேரடியாகக் கையளிக்கமுடியாது



நிவாரணங்களை நேரடியாக மக்களுக்கு கையளிக்க-முடியாத நிலை திருகோணமலையில் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

முக்கியமாக இடைத்தங்கல் முகாம்களில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களிற்கு ஆர்வலர்களாலும் அரசியல்வாதிகளாலும் திரட்டப்படுகின்ற நிவாரணப் பொருட்களை அங்கு சென்று மக்களிடம் கையளிக்க அரச எந்திரம் அனுமதியை மறுத்துவருவதை கிழக்க மாகாணசபை உறுப்பினர் ஜெனார்த்தனன் உறுதிப்படுத்தினார்.

கடந்த 25ம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றுநிருபத்திற்கு அமைவாகவே இந் நடவடிக்கையினை எடுத்துள்ளதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்ற போதும் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமே இடைத்தங்கல் முகாம்கள் இருப்பதனால் அம்முகாம் வாழ் மக்களுக்கு நேரடியாக நிவாரணப் பொருட்களை வழங்க முடியாது இருப்பதாக தெரியவந்துள்ளது.

17

## பத்மநாபா ஈ.பி.ஆர்.எல் எவ் மைத்திரிக்கு ஆதரவு

எதிர்கட்சிகளின் வேட்பாளர் மைத்திரிபால ஸ்ரீசேனாவிற்குத் தமது ஆதரவை நல்குவதாக பத்மநாபா ஈ.பி.ஆர்.எல் எவ் கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் ஊடக அறிக்கையானது - முதலாவதாக எதிர்வரும் தேர்தலில் மக்கள் தமது வாக்களிக்கும் உரிமையை முழுமையாக பிரயோகிக்க வேண்டும் என்று எதிர்பார்கிறோம்

1995 இல் இந்தநாட்டில் சமஸ்டி முறையிலான தீர்வைப்பற்றி சிங்கள மக்கள் மத்தியில் பேச முடிந்தது. இன்று துரதிஸ்டவசமாக இனப்பிரச்சனை நாட்டின் பிரதான கட்சிகளின் நிகழ்ச்சி நிரல்களில் இல்லாமல்போய் விட்டது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குதல், சகல இன மத சமூகங்களும் சமத்துவமாக வாழ்வதற்கான ஏதுநிலைகள் உருவாக்குதல்,

17

## "அவதூறுகளை வன்மையாகக் கண்டிக்கின்றேன்" மட்டு அரச அதிபர்

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வெள்ளப் பெருக்கில் தவித்துக்கொண்டிருக்கும் தறுவாயில் அவர்களை காப்பாற்றி, அவர்களுக்கான உணவு மற்றும் இருப்பிடத்திற்கான ஏற்பாடுகளை செய்வதிலே 24 மணித்தியாலம் செலவழித்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் தன்னைப் பற்றி அவதூறு கதைக்கவேண்டாம் என மட்டு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சால்ஸ் கடந்த புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

கிராமத்துக்குள் வெள்ளம் புகுவதனால் அயல் கிராமங்களிடையில் பிரச்சனை ஏற்படுகின்ற போது உரிய இடத்திற்குச் சென்று அதனை தீர்ப்பதில் மும்முரமாக செயற்பட்டுக்கொண்டிருக்கிறோம். மேலும் எமது மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கான பாரிய நிதி செலவீட்டுடன் புனரமைக்கப்பட்ட பாரிய, சிறிய குளங்கள் வெள்ளம் காரணமாக உடைப்பெடுக்காத வகையில் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் கூடுதலான நேரத்தினை செலவிட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இதற்கு மேலாக மாவட்டத்தின் தேர்தலை நியாயமான முறையின் நடாத்த வேண்டிய பொறுப்பும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமையினால், இந்த கடமையினையும், இந்த அனர்த்தத்துக்கு மத்தியில் மேற்கொள்ளும் இத் தருவாயில் என்னைப்பற்றி அவதூறாக அனாமதேய முறையில் அரசியலுடன் இணைத்து செய்திகள் எழுதுவதினை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

வெள்ள அனர்த்தம் காரணமாக மாவட்டத்தின் மூலை, முடுக்கெல்லாம் செல்ல வேண்டியுள்ளது. இந்த வேலைப்பழுவினை மக்களின் அவசர தேவை காரணமாக மேற்கொள்ளும் போது இவ்வாறான அவதூறான செய்திகளினால் அதிகாரிகள் மக்கள்

17

## சிறுபான்மை மக்களை அரவணைக்கும் சனாதிபதியே தேவை!

நாட்டில் வாழும் சிறுபான்மை சமூகங்களை சேர்த்து அரவணைத்துக்கொண்டு செல்லக்கூடிய ஜனாதிபதி நாட்டுக்குத் தேவையெனவும், போர் முடிவுற்றும் மக்களுக்கு சுதந்திரம், சமாதானம் கிடைக்கவில்லையென மன்னார் ஆயர் இராயேப்பு ஜோசேப்பு ஆண்டகை தெரிவித்தார். நத்தார் தின (கிறிஸ்து பிறப்பு) நல்லிரவு திருப்பலி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தின் "இயேசுவே ஆண்டவர்" மண்டபத்தில் வியாழக்கிழமை (25) அதிகாலை, மன்னார் மறைமாவட்ட ஆயர் அருட்கலா நிதி இராயேப்பு ஜோசேப்பு ஆண்டகை தலைமையில் நடைபெற்றது.

நல்லிரவுத் திருப்பலியயை தொடர்ந்து ஆயர்

17

மலைமுரசு
MALAIMURASU

மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனி) நிறுவனத்தால் 159 A, கடல்முக வீதி, திருகோணமலையில் இருந்து 27.12.2014ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org